ஷைத்தானின் சூழ்ச்சிகளும்
மனித வாழ்வுக்கான சவால்களும்

மௌலவி கே.எல். ஆதம்பாவா (மதனி)
அமீர் மஜ்லிஸ் அஷ்ஷுரா
சம்மாந்துறை

Title : Sheithanin soolsikalum
manitha valvokkana savalhalum

Author : Muolavi K.L.Athambawa B.A (S.L) B.A.Madina K.S.A
Former Lecturer (visiting)
South Estern University of Srilanka
Vice Principal : Taibah Ladies Arabic College
Sainthamaruthu
Ameer Majlisu Shoora -Sammanthurai

Address : 12/4 Hospital 7^{Th} Street. Sammanthurai

Phone : +094764614017/ 0776624017

Email : markazstr2012@gmail.com

First Edition : September 2020

Copy Right : Author

Printed by : Excellent Print - 077 6401296

Pages : 152

Price : 350/=

ISBN : 978-624-96613-0-1

بســـم الله الـــرحمن الـــرحيم

அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாசபை தலைவரின்

அணிந்துரை

சம்மாந்துறை மஜ்லிஸுஷ்- ஷுரா அமீரும், சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரி பிரதி அதிபருமான அஷ்ஷெய்க் K.L. ஆதம்பாவா (மதனி) அவர்கள் எழுதியுள்ள "ஷைத்தானின் சூழ்ச் சிகளும் மனித வாழ்வுக்கான சவால்களும்" எனும் நூலுக்கு எனதுவாழ்த்துச்செய்தியைஎழுதுவதில்பெருமகிழ்ச்சியடைகின்றேன். அல்லாஹுத்தஆலா அவனை வணங்குவதற்காகபடைத்த படைப்புக்களில் மனித இனத்தை போல் ஜின்களும் உள்ளனர். இந்த "ஜின்" இனத்தைப் பற்றி பலஅறபு நூல்கள் உள்ள போதும் தமிழில் போதுமான நூல்கள் வெளிவரவில்லை. இந்தக் குறையை ஓரளவு நிவர்த்திப்பதில் இந்த நூல் ஓரளவு பங்காற்றும் எனக் கூறலாம்.

அஷ்ஷெய்க் கே.எல். ஆதம்பாவா (மதனி) அவர்கள் ஒரு சிறந்த ஆலிம். சிறந்த ஆசிரியர். சிறந்ததாயி. எவரும் இலகுவில் படித்து விளங்கக்கூடிய வகையில் இந்நூலை எழுதியுள்ளார். மனித குலத்திற்கு எதிரான ஷைத்தானின் சூழ்ச்சிகளை தெளிவாக விளக்கியுள்ளார்.

மனித குலம் நல்வழியில் செல்ல இது போன்ற நூல்கள் பெரிதும் உதவும் எனக் கூறலாம். இந்நூலை தமிழ் உலகிற்குத் தந்த அஷ்ஷெய்க். ஆதம்பாவா அவர்கள் என்றும் பாராட்டுக்குரியவர்.

இதுபோன்ற நூல்களை அவர் தொடர்ந்து தர வேண்டும். மனித குலம் நற்பயன் பெறவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

அஷ்ஷேக் S.H ஆதம்பாவா (மதனி)

தலைவர்: அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா
பிரதிதலைவர் : அகில இலங்கை ஜம்இய்யதுல்உலமா
அதிபர் : தைபா மகளிர் அறபுக்கல்லூரி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

முதன்மைப் பேராசிரியர். கலாநிதி. றமீஸ் அப்துல்லா அவர்களின்

அணிந்துரை

மனித வாழ்க்கையை திட்டமிடுவது அனுபவத்தில் மிக கஷ்டமான தாகவே நோக்கப்படுகிறது. ஆனால், இஸ்லாத்தை புரிந்துகொண்ட ஒருவனுக்கு அல்லது இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டத்தின்படி வாழ்கிற ஒருவனுக்கு அது கஷ்டமானதாக அமையாது. இந்த விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு மனிதன் படைப்பின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். கண்ணுக்கு தெரிகிற மனித சமூகத்தைப் போல நமது சாதாரண கண்களுக்குப் புலப்படாத ஜின் சமூகமும் இருக்கிறது. அந்த சமூகத்தின் முதன்மையாளனாகவே ஷைத்தான் கருதப்படுகிறான். இவன்தான் பூரணமான மனித வாழ்க்கைக்கு சவாலாக அமைகிறான். அவன் எந்தவிதத்தில் எல்லாம் சவாலாக அமைகிறானோ அதனைப் பற்றித்தான் இந்நூல் விளக்குகிறது.

அல்குர்ஆனிலே இறைவன் மனிதன் நஷ்டத்திலே இருக்கின்ற தாகவே பிரகடனப்படுத்துகிறான். அவனது பிரகடனத்தை காலத்தின் மீது சத்தியமிட்டுக் கூறுகிறான். ஆனால், இறைவன் ஒரு நிபந் தனையை விதிக்கிறான் நம்பிக்கை கொண்டோரையும் நல்லறங்கள் புரிந்தோரையும், உண்மையைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசிப்பவர்களையும், பொறுமையைக் கொண்டு ஒருவருக் கொருவர் உபதேசிப்பவர்களையும், தவிர என்றுதான் பிரகடனப் படுத்துகிறான். (அத்தியாயம் 103) உண்மையில் இதுதான் வாழ்க் கையின் சாரமாகும். இதிலிருந்து தவறுவதற்கு காரணமாகிறவன்தான் ஷைத்தான். இந்தத் தவறு மனித சமூகத்தின் ஆதி பிதா ஆதம் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே வருகிறது. ஆகவேதான் மனித வாழ்க்கைக்கு சவாலாக அமைகிறவன் ஷைத்தான் என்கிற கொடிய விரோதியாவான்.

இதனை நாம் விளங்கிக் கொள்வதுமில்லை ஷைத்தானுடைய ஊசலாட்டத்தை புரிந்து கொள்வதுமில்லை. சிலவேளை அதனை வாழ்வின் சாபம் என்று ஏற்றுக்கொள்கிறோம், அல்லது விதியின் சதி என்று வியாக்கியானம் செய்யப் பார்க்கிறோம். ஆனால், ஷைத்தான் எப்படியெல்லாம் சதி செய்வான் என்று புரிந்து கொண்டால் வாழ்க்கையை விளங்கிக் கொள்வது மிக இலகுவாக இருக்கும்.

நமது வாழ்க்கைக்கு மிக நெருக்கமான - நம்மோடு மிக நெருக்கமாக இருக்கிற ஷைத்தான் பற்றிய போதிய அறிவு நம்மிடம் இல்லை. அந்த அறிவைத் தருவதற்குத்தான் இந்த நூல் மூலம் அஷ்ஷெய்க் கே.எல். ஆதம்பாவா அவர்கள் முயற்சித்திருக்கிறார். இப்படியான விடயங்களை நம்மோடு அறிவுபூர்வமாகப் பகிர்ந்துகொள்வதற்கு யாரும் தயாராக இல்லை. சிலவேளைகளில் மார்க்கப் பிரசாரங் களில் மாத்திரம் ஷைத்தான்களைப் பற்றிக் கதைத்துவிட்டு நாம் அவற்றை காற்றுவெளியில் விட்டுவிடுகிறோம். இதனை எழுத்துருவிலே தந்து அதுபற்றி சிந்திப்பதற்கும் வாழ்வதற்குமான ஒரு சந்தர்ப்பத் தினை ஆதம்பாவா அவர்கள் தந்திருக்கிறார்கள். இது மிக ஆக்க பூர்வமான அறிவுப்பணியாகும்.

அஷ்ஷெய்க் கே.எல். ஆதம்பாவா (மதனி) BA அவர்கள் சம்மாந் துறையைச் சேர்ந்தவர். இவர் மார்க்க அறிஞர்கள் உலகக் கல்வி யையும் பெறவேண்டும் என்பதற்கு முன்னுதாரணமானவர். சம்மாந்துறை தப்லிக் இஸ்லாம் அறபுக்கல்லூரியின் முதல் மாணவரான இவர், பாகிஸ்தான், சவுதி அரேபியா முதலான நாடுகளின் பல்கலைக்கழகங்களிலே சமயக் கல்வியை கற்றுத் தேர்ந்தவர். மேலும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டதோடு அக்கரைப்பற்று மன்பஉல் கைராத் அறபுக்கல்லூரியில் அதிபராக கடமை ஏற்றுக் கொண்டார்.

பின்னர் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றி ஐம்பத்தைந்து வயதிலே ஓய்வு பெற்று, அறபுக்கல்லூரிகளில் சிரேஷ்ட விரிவுரை யாளராகவும் பகுதிநேர ஆசிரியராகவும் கடமையாற்றி தற்பொழுது

சாய்ந்தமருது தைபா பெண்கள் அறபுக்கல்லூரியின் பிரதி அதிபராக பணியாற்றுகிறார். மேலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராக கடமையாற்றியதும் மிகக் குறிப் பிடத்தக்க அம்சமாகும். அதேபோன்று அறபுக்கல்லூரிகளில் இறுதியாண்டு மாணவர்களை பரீட்சிக்கும் பரீட்சகராகக் கடமை யாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

கல்வித்துறை சாதனைகளைப் போல சமூகப்பணிகளிலும் உச்ச அளவான பங்களிப்பு இவருக்கு இருக்கிறது. சம்மாந்துறை பள்ளி வாசல்களின் நம்பிக்கையாளர் சபையின் பிரதம நம்பிக்கை யாளராகக் கடமையாற்றியதோடு இன்று அதி உயர் சபையான மஜ்லிஷ் அஷ்ஷூராவின் தலைவராகவும் (அமீர்) பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

இவரது சமய, சமூக அனுபவங்கள் இவ்வாறான ஒரு நூலினை எழுதுவதற்கு அதிக உற்சாகத்தினையும் தூண்டுதலினையும் அளித்திருக்கக்கூடும். கொவிட்-19 சூழ்நிலை இவ்வாறான ஒரு நூலை எழுதுவதற்கு அவருக்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருப்பது அறிவிலக்கியத்துறையில் அவருக்கிருக்கிற ஈடுபாட்டையே காட்டுகின்றது. உண்மையில் உலமாக்கள் சமூகத்தினை வழிநடத் துவதற்கும் அறிவுச் சூழலில் பங்காற்றுவதற்கும் தயாராவது ஒரு நல்ல எதிர்காலத்தையே கட்டியம் கூறுவதாகும். அத்தகைய ஈடுபாட்டினை வெளிப்படுத்துகின்ற சம்மாந்துறை மஜ்லிஷ் அஷ்ஷூராவின் அமீர் இந்நூலின் ஆசிரியர் அஷ்ஷெய்க் கே.எல். ஆதம்பாவா அவர்களுக்கு நமது பிரார்த்தனையும் வாழ்த்துக்களும் என்றும் உண்டு.

முதன்மைப் பேராசிரியர். கலாநிதி. றமீஸ் அப்துல்லா
மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

بســـم الله الـــرحمن الـــرحيم

முன்னுரை

எல்லாம் வல்ல எத்துதியும் வல்லோன் அல்லாஹ் ஒருவனுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அன்னார் வழி வாழ்ந்த அனைத்து நல்லடியார்கள் மீதும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக!

இவ்வுலகில் படைக்கப்பட்ட படைப்புக்களில் ஆறு அறிவுள்ள, பகுத் தறிவுள்ள படைப்பாக மனித இனமும், ஜின் இனமுமே உள்ளன. இவ்விரண்டு இனமும் அல்லாஹ் ஒருவனையே வணங்கி வழிபட வேண்டுமென்ற குறிக்கோளுக்காகவே படைக்கப்பட்டுள்ளன.

மனிதஇனத்துடன் சமப்படுத்தப்பட்டு, ஏவல் விலக்கல்களை நிறை வேற்ற கடமைப்பட்டுள்ள எமது சகோதர இனமான ஜின் இனத்தைப் பற்றி எம்மில் 95% வீதமானவர்கள் சரியாகப்புரியாமல் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்த ஜின் இனம்,நாம் வாழும் பூமியில் எம்முடன் இரண்டறக் கலந்து வாழ்கின்றார்கள். எமதுஇல்லங்களிலும், எமது உணவு, குடிபானங்களிலும் பங்கெடுக்கின்றார்கள். இப்படிப்பட்ட இனத்தை நாம் அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். என்ற அடிப் படையில் அந்த ஜின் இனத்தின் தோற்றம், பிரிவுகள், உணவுகள், வாழ்விடங்கள், சக்திகள் என்பன போன்ற விடயங்களை எனது நூலின் ஆரம்பத்தில் விளக்கியுள்ளேன்.

இந்த ஜின் இனத்தின் தந்தை ஷைத்தான், மனித இனத்தின் தந்தை நபி ஆதம் (அலை) அவர்களுடன் கொண்ட பொறாமையின் வெளிப்பாடாகவும், அவனது ஈகோஎனும் கர்வம், அகம்பாவம், தற்பெருமை, போன்ற தீய குணங்களின் வெளிப்பாடாகவும் அவர் களுக்கு மரியாதை நிமிர்த்தம் அல்லாஹ்வினால் ஏவப்பட்ட (சிரம் பணிதல்) எனும் கட்டளைக்கு மாறு செய்தது மட்டுமன்றி, அவர்களை சுவர்க்கத்தை விட்டும் வெளியேற்றினான்.

அன்றிலிருந்து கியாமத் நாள் வரை படைக்கப்பட உள்ள அனைத்து மனித சமுதாயத்தையும், (சிலர்களைத் தவிர) வழிகெடுத்து வேரறுத்து நரகத்துக்குரியவர்களாக ஆக்குவேன்" என்றும் அல்லாஹ்விடம் சபதம் எடுத்து கியாமத் நாள் வரை உயிர் வாழ்வதற்கும் அவகா சத்தை பெற்றுள்ளான். எனவே, மனித வாழ்வு என்பது நாளாந்தம் ஒவ்வொரு வினாடியும் ஷைத்தானுடன் போராட்டம் நடாத்த வேண்டிய ஓர் போர்க்களமாகும்.

"ஷைத்தான் உங்களுடைய விரோதிஅவனை விரோதியாகவே எடுத்துக்கொள்ளுங்கள்". என அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். (35:06) அந்த விரோதி மனிதனை வழி கெடுத்து, அழிவின் பால் இட்டுச் செல்வதற்கே சதித் திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கின்றான்.

இந்நூலை எழுதுவதற்கு பல வருடங்களுக்கு முன் முயற்சித்தும் வேலைப்பழு காரணமாக என்னால் எழுத முடியாமல் போய் விட்டது. இந்த 2020ம் ஆண்டு உலகையே ஆட்டிப் படைத்த, கொவிட்-19 கொரோனா வைரஸ் தாக்கத்தினால் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தி இந்த நூலை எழுத எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு வாய்ப்பை அளித்தான். அல்ஹம்துலில்லாஹ்.

கொரோனா வைரஸ் அல்லாஹ்வின் உதவியால் உங்களைப் பீடிக்காமல் இருக்கலாம். ஆனால் வேறு சில வைரஸ்களினால் நீங்கள் பாதிக்கப்ப்ட்டிருக்கலாம் அதற்கு சிகிச்சை செய்வதற்காக உரிய வைத்தியரிடம் நீங்கள் செல்லவில்லை, அந்த வைத்தியர் தான் முஹம்மத் (ஸல்) அவர்களின் சுன்னா வழிமுறைகள். ஆம் அவைதான் நடத்தை சார்ந்த வைரஸ்கள், எங்களில் சிலரிடம் பொறாமை, கர்வம், அகம்பாவம், ஆணவம், பெருமை போன்ற ஈகோ போன்ற உள நோய்களும் உள்ளன. பொறாமை நெருப்பு விறகை எரிப்பது போல நன்மைகளை சுட்டெரித்து விடுகின்றது, மேலும் எங்களில் சிலரிடம் பெருமை, பதவியாசை, முகஸ்துதி, தற்பெருமையுமுள்ளது. பெருமையுள்ளவன் சுவர்க்கம் நுளைய மாட்டான். முகஸ்துதிகாரனின் அமலை அல்லாஹ் ஏற்றுக்கொள்வ தில்லை.

மேலும் எங்களில் சிலரிடம் கெட்ட குணங்கள் உள்ளன. அவை நபி (ஸல்) அவர்களுடன் சுவர்க்கத்தில் நெருக்கமாக இருப்பதை

விட்டும் எம்மை தூரமாக்கி விடும். மேலும்எங்களில் சிலரிடம் அளவுக்கதிகமான கோபம் உள்ளது. கோபம் என்றால் என்ன என்பதற்கு சிலஉளவியலாளர்கள் கூறும்வரைவிலக்கணம்: "அடுத்தவர்கள் செய்யும் தவறுக்கு தனக்குத்தானே கொடுக்கும் தண்டனை" இந்த கோபத்தின் மூலம் இவ்வுலகில் ஒருவன் பல விதநோய் களுக்கு ஆளாகின்றான் மறுமையில் அந்த கோபமான சுபாவம் முடிசிரைப்பவன் பிலேட் மூலம் முடிகளை சிரைப்பது போல் நன்மைகளை இல்லாமல் செய்துவிடும்.

எனவே அல்லாஹ்வால் வெறுக்கப்படக்கூடிய இவ்வாறான பல வைரஸ்கள் எம்மில் பலரிடமுள்ளன. அவற்றுக்கு மூல காரணம் ஷைத்தான் தான் என்பதை பலர் உணர்வதில்லை.

எனவே, ஷைத்தானின் சதித் திட்டங்கள் என்ன? அவன் எவ்வாறு மனிதனைவழிகெடுக்கின்றான்?. அவற்றிலிருந்து ஈடேற்றம் பெறு வதற்கான வழிகள் யாவை? என்பவற்றை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒவ்வொரு வினாடியையும் அவதானமாகக் கழிப்பது அவசியமாகும். ஒவ்வொரு முஸ்லிமும் இந்நூலை பெற்று பலமுறை வாசித்து தனது வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைத்துக்கொள்வது மிகவும் பொருத்தமானதாக அமையுமெனக் கருதுகின்றேன்.

சிலர் நூல்களை வாங்கினாலும் வாசிப்பதற்கு ஷைத்தான் சோம்பலை ஏற்படுத்தி வாசிக்காமல் ஆக்கிவிடுவான். அவ்வாறான நூலாக இந்த நூலை ஆக்கிக் கொள்ளாமல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு புத்தகம் இருப்பது அவசியமானதாக கருதி கண்டிப்பாக வாசித்து பயன் பெறுமாறு சகல வாசகர்களையும் வேண்டிக் கொள்கின்றேன்.

எனவே, ஷைத்தானின் சதித்திட்டங்களை அறிந்து அவற்றை விட்டும் தவிர்ந்து நடப்பதுடன், மறுமையில் சுவர்க்கத்தில் நுழையும் ஆயிரத்தில் ஒருவராக எம்மையும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஆக்கியருள்வானாக. ஏனெனில் ஒரு மனிதன் அடையும் நஷ்டங் களில் மிகவும் மோசமான நஷ்டம் யாதெனில் : (வானங்கள் பூமிகளைவிட விசாலமானது என வர்ணிக்கப்பட்ட) சுவர்க்கத்தில் அவனுக்கு உள்நுழைவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போவது தான்.

எனவே, எமது வாழ்வில் எஞ்சியிருக்கும் காலத்தை அரிய சந்தர்ப் பமாக பயன்படுத்தி அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று, அந்த விசாலமான சுவர்க்கத்தில் நுழைவதற்குரியமகத்தான சந்தர்ப் பத்தை நம் அனைவருக்கும் அல்லாஹ் தந்தருள்வானாக.

*இந்நூலை எழுதி வெளியிட எனக்கு அருள் புரிந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே முதலில் எனது நன்றிகள். الحمد لله மேலும் எனது இந்நூலை பல்வேறு வேலைப் பழுக்களுக்கு மத்தியில் பொறுமையாகவாசித்துசில திருத்தங்களைச்செய்துதந்து, மிகச் சிறப்பான அணிந்துரையையும் வழங்கிய தென்கிழக்குப் பல்பலைக் கழக மொழித்துறை முதன்மைப்பேராசிரியர் கலாநிதி. றமீஸ் அப்துல்லா, அவர்களுக்கும், மேலும் இந்நூலுக்கு சிறந்த அணிந்துரை வழங்கிய அம்பாரை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவரும் எனது கல்லூரி அதிபருமான அஷ்ஷேக் S.H ஆதம்பாவா (மதனி) அவர்களுக்கும், எனது ஆக்கத்திலுள்ள அச்சுப் பிழைகளை சரிபார்த்து திரித்தித் தந்த எனது நீண்டகால நண்பன் எஸ்.எம். அஸ்வர் **BA** (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கட்கும், எனது ஆக்கத்தை மிகத்சிரமத்திற்கு மத்தியில் பிரதி செய்துதந்த எனதுஅன்புக்குரிய மாணவி மௌலவிய்யா அப்றோஸ் சிதாரா (BA) அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள், மேலும் இதனை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய நவாஸ் சௌபி ஆசிரியர் அவர்களுக்கும் எனது நன்றிக்குரியவர்கள். மேலும் எனது பணிக்கு உதவிய எனது அன்புமனைவி, மக்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள். மேலும் இந்நூலை நேரம் ஒதுக்கி வாசிக்கும் அன்புக்குரிய வாசகர்களாகிய நீங்களும் என்றும் எனது நன்றிக்குரியவர்கள்.*

எனது இந்த முயற்சிதொடர எல்லாம் வல்ல அல்லாஹ் கிருபை செய்வானாக என்ற துஆப் பிரார்த்தனையுடன் விடைபெறுகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்

மௌலவி கே.எல்.ஆதம்பாவா BA (மதனி)
12/4 ஆஸ்பத்திரி 7ம் வீதி
சம்மாந்துறை.
01.09.2020

உள்ளடக்கம்

அணிந்துரைகள்

முன்னுரை

1. ஜின், ஷைத்தான் பற்றிய அறிமுகமும், படைப்பின் நோக்கமும் - 15 - 37

2. ஷைத்தான் ஏன்? எதற்காக மனிதனை வழிகெடுக்கின்றான்? - 38 - 48

3. ஷைத்தானும் ஈகோவும்,அதன்பாதிப்புக்களும் - 49 - 58

4. கொரோனா போன்ற தொற்றுநோய்கள் ஜின்களினால் பரவுதல் - 59 - 68

5. சுத்ராவும், ஷைத்தானும் - 69 - 76

6. போர்க்களத்தின் தலைவன் - 77 - 82

7. மனிதனை வழிகெடுக்க ஷைத்தான் பயன்படுத்தும் தந்திரங்கள் - 83 - 100

8. ஷைத்தானை எதிர்த்துப் போராட மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் - 101 - 121

9. நப்ஸும், ஷைத்தானும் - 122 - 130

10. ஷைத்தான் படைக்கப்பட்ட நோக்கம் - 131 - 135

11. மனித சமுதாயத்தை கெடுப்பதில் ஷைத்தானின் வெற்றி - 136 - 140

பின் இணைப்பு - 141 - 148

உசாத்துணை நூற்கள் - 149

01

ஜின்-ஷைத்தான் பற்றிய அறிமுகமும் படைப்பின் நோக்கமும்

ஜின் இனம் என்பது நெருப்பினால் படைக்கப்பட்ட, பகுத்தறிவுள்ள ஒருபடைப்பு. அவர்கள் மனிதனின் கண்ணுக்கு தென்படாமல் மறைந்து இருப்பதனால்தான் ஜின் என்று அழைக்கப்படுகின்றனர்.

“மலக்குகள்ஒளியினாலும்,ஜின்கள்நெருப்பினாலும்ஆதம்(அலை) அவர்கள் உங்களுக்கு (குர்ஆனில்) கூறப்பட்ட (மண்ணினால்) படைக்கப்பட்டுள்ளார்கள்” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

இந்த ஜின் இனம் மனித இனத்தின் தந்தை நபிஆதம் (அலை) படைக்கப்படுவதற்கு முன்னரே படைக்கப்பட்டுள்ளனர். (பார்க்க சூறத்துல் ஹிஜ்ர்: 26-27)

ஜின்கள் மூன்றுவகையினராக இருக்கின்றனர்: ஒருவகையினர் காற்றில் பறந்து திரிபவர்கள். இன்னுமொருவகையினர் பாம்புகள், நாய்கள் போன்றும், மற்றுமொரு இனம் ஒரு இடத்தில் தங்கியிருந்து (தேவைக் கேற்ப வேறு இடங்களுக்கு பயணிக்கக் கூடியவர்களாகவும் உள்ளனர்.) எனநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(தபரானி ,பைஹகீ)

ஜின்களைக் காணும் படைப்புக்கள்

ஜின்கள் எமதுகண்களுக்கு தென்படாவிட்டாலும் நாய், கழுதை போன்ற படைப்புக்கள் ஜின், ஷைத்தான்களைக் காண்கின்றன.

“நாய்களின் ஊளைச் சத்தத்தினையும், இரவு வேளைகளில் கழுதை கத்தும் சத்தத்தையும், நீங்கள்செவியுற்றால் ஷைத்தானின் தீங்கை

விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுங்கள். ஏனெனில் நீங்கள் காணாத படைப்புக்களை அவைகள் காண்கின்றன" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூதாவுத்)

ஷைத்தான் ஜின் இனத்தைச் சேர்ந்தவன்

அல்குர்ஆனில் அதிகமாக கூறப்பட்டுள்ள ஷைத்தான் என்பவன் ஜின் இனத்தை சேர்ந்தவனாகும். அவன் ஆரம்பத்தில் மலக்கு களுடன் சேர்ந்து வானத்தில் அல்லாஹ்வை வணங்கிக் கொண் டிருந்தான். சுவர்க்கத்திலும் உட்புகுந்தான். ஆதம் (அலை) அவர் களுக்கு சிரம்பணியுமாறு மலக்குகளுக்கு அல்லாஹ் கட்டளை யிட்டபோது ஷைத்தான் மாத்திரம் பொறாமையினாலும், பெருமை யினாலும் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்து, சிரம்பணிய மறுத்த காரணத்தால் அல்லாஹ்வின் ரஹ்மத்தைவிட்டும் விரட்டப்பட்டான். இவனுக்கு இப்லீஸ் என்ற பெயரும் உண்டு.

ஷைத்தான அல்லாஹ்வுக்கு மாறுசெய்யுமுன் அஸாஸீல் எனும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டதாக சிலஅறிஞர்கள் கூறியுள்ளனர்.

ஜின்களின் உணவும் பானமும்

ஜின்ஷைத்தான்கள் மனிதர்களைப் போன்றே உணவு உட்கொண்டு பானங்களையும் அருந்துகின்றனர்.

"உங்களில் ஒருவர் உணவு உட்கொண்டாலோ, குடிபானம் அருந்தினாலோ அவரது வலது கரத்தினால் உண்ணட்டும், பருகட்டும். ஏனெனில் ஷைத்தான் அவனது இடது கரத்தினால் உண்ணுகிறான், குடிக்கிறான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

"உங்களில் எவர் இடது கையினால் உணவு உண்கின்றாரோ அவருடன் ஷைத்தானும் உண்ணுகிறான். மேலும்எவர் தனது இடது கரத்தால் குடிக்கின்றாரோ அவருடன் ஷைத்தானும் குடிக்கிறான்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத்)

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் மூலம் ஜின், ஷைத்தான்கள் உண்கின்றனர், குடிக்கினறனர் என்பதை அறியமுடிகிறது.

ஜின்கள் திருமணம் முடித்து சந்ததிகளைப் பெருக்குகின்றனர்: மனிதர்கள் திருமணம் முடிப்பது போன்று, ஜின்களும் திருமணம் முடித்து, மனிதர்கள் பிள்ளை பெறுவதனைப் போன்று பிள்ளைகளை பெற்றுக்கொள்கின்றனர். எனினும் மனிதர்களின் எண்ணிக்கையை விட அவர்களின் எண்ணிக்கை மிகஅதிகம் (இப்னு அபீ ஹாதிம்)

மேலும் மனிதர்கள் மரணிப்பதைப் போன்று அவர்களும் மரணிக் கின்றார்கள். ஆனால் அவர்கள் மனிதர்களைவிட நீண்ட ஆயுளை கொண்டவர்கள். ஒரு ஸஹாபி பாம்புஉருவத்தில் தோன்றிய ஜின்னை கொலை செய்த விடயம் பின்னால் கூறப்படும். ஆனால் ஜின் இனத்தின் தந்தையான ஷைத்தான் மாத்திரம் கியாமத் நாள்வரை உயிர்வாழ்ந்து மரணிப்பான்.

ஏனெனில் அல்லாஹ்விடம் அவன் அவகாசம் கேட்டான். "யா அல்லாஹ்! கியாமத் நாள் வரை நான்உயிர் வாழ்வதற்கு எனக்கு அவகாசம் தா! என்று கேட்டபோது, "உனக்கு அவகாசம் வழங் கப்பட்டுள்ளது" எனஅல்லாஹ் கூறினான். (07:14-15)

ஜின்களின் இருப்பிடங்களும் நடமாடும் நேரங்களும்

ஜின்கள் நாம்வாழும் இப்பூமியில் பாழடைந்த கட்டிடங்கள், தனித்த இடங்கள், அசுத்தமான இடங்களானகுப்பைத் தொட்டில்கள், மலசலகூடங்கள், கப்ருஸ்தானங்கள்,குளியலறைகள் போன்ற இடங்களில் அதிகம் குடியிருக்கிறார்கள். மேலும் கடைத் தெருக்களிலும் ஷைத்தான்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

"கடைத்தெருவுக்குள் நுழையும்ஆரம்பமானவனாகவோ, அங்கிருந்து வெளியேறுபவர்களில் இறுதியானவனாகவோ நீ இருப்பதைத் தவிர்த்துக் கொள். ஏனெனில் அவை ஷைத்தானின் யுத்தகளம். அங்கேதான் ஷைத்தான் தனது படையின் கொடியை நட்டுகிறான்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.(முஸ்லிம்)

மேலும்மனிதர்கள் குடியிருக்குமிடங்களிலும் ஷைத்தான்கள் குடியிருக்கிறார்கள். ஆனால் எந்தவீடுகளில் அல்லாஹ்வின் திருநாமம் திக்ர், குர்ஆன் ஓதுதல் குறிப்பாக ஆயதுல்குர்ஸி, சூரதுல் பகறாபோன்ற சூறாக்கள்ஓதப்படுமோ, அந்த இல்லங்களிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகின்றான்.

மேலும் மாலைவேளையில் இருள்சூழ்ந்தநேரத்தில் ஷைத் தான்கள் பரவலாக உலா வருவதாகவும், அந்தவேளையில் சிறு குழந்தைகளை வீட்டைவிட்டு வெளியே எடுத்துச் செல்ல வேண்டாம்" எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி)

மேலும் பாங்கு சொல்லப்பட்டால் ஷைத்தான்கள் அதனை செவி யேற்க முடியாமல் தூரவிலகி ஓடுவதாகவும், றமளான் மாத காலத்தில் மூர்க்கத்தனம்செய்யும் ஷைத்தான்கள் விலங்கிடப்படு வதாகவும் ஹதீஸ்களில்உள்ளன.

ஷைத்தானின் தோற்றம்

ஷைத்தான்மிகவும் அருவருப்பான தோற்றமுடையவன். "இரு கொம்புகளும், உயர்ந்த மீசையும், நீண்டு சுருண்ட தாடியும் தீச்சுவாலையை வெளிப்படுத்தும்வாயையும், நீண்ட நகங்களை யுடையுமுடைய கடுமையான கறுத்த மனிதனின் தோற்றத்தில் இருப்பான்." (دائرة المعـــارف الحديثـــة)

அவர்களின் ஆற்றல்

மனிதர்களுக்கு வழங்கப்படாத அளவு ஆற்றலையும், சக்தியையும் ஜின்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். வேகமாக ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நகர்ந்து செல்லுதல், பொருட்களை கொண்டு செல்லுதல் முதலானவை அல்லாஹ் ஷைத்தானுக்கு வழங்கிய ஆற்றலாகும்.

நபிசுலைமான் (அலை) அவர்களின் சபையில் இருந்த இப்ரீத் எனும் ஜின், எமனை ஆட்சி செய்து கொண்டிருந்த பல்கீஸ்

ராணியின் சிம்மாசனத்தை, ஒருமனிதன் தான்இருந்த இடத்தில் இருந்து எழும்புவதற்கு முன்னர் பைத்துல் முகத்தஸுக்கு கொண்டு வருவதாக உத்தரவாதமளித்த சம்பவத்தை அல்லாஹ் அல்குர் ஆனில் அந்-நம்லு சூறாவில் 39-40 வசனங்களில் எடுத்துக் கூறியுள்ளான்.

விண்வெளிப் பயணத்தை மனித இனத்தைவிட முந்தியவர்கள் ஜின்கள்:

ஜின்கள் பூர்வீககாலத்திலிருந்தே வானத்தில் உள்ள சில இடங்களை நெருங்கிச் சென்று வானுலகில் அறிவிக்கப்படும் பலசெய்திகளை ஒட்டுக்கேட்டு வரக்கூடியவர்களாக இருந்துள்ளார்கள். ஆனால்நபி (ஸல்)அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட காலம்தொட்டு, வானத்திற்குரிய பாதுகாப்புஅதிகரிக்கப்பட்டது. வானுலக இரகசியத்தை செவியேற் பதைவிட்டும்ஜின்,ஷைத்தான்கள் தடுக்கப்பட்டனர். இது பற்றி அல்குர்ஆனில்

"நாங்கள்வானத்தை நெருங்கினோம்.அதுகடுமையான பாதுகாப் பாலும் தீப்பந்தங்களாலும் நிரப்பப்பட்டிருப்பதைக் கண்டோம்."

"ஒட்டுக்கேட்பதற்காக அங்கே பலஇடங்களில் அமர்வோராக இருந்தோம். அப்போது யார் (ஒட்டுக்) கேட்கிறாரோ காத்திருக்கும் தீப்பந்தத்தை தனக்கு எதிராக காண்பார்கள்." (சூறதுல் ஜின்:08-09)

ஜின்களின் கட்டிடக்கலையும், ஏனைய தொழில் ஆற்றலும்:

நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு ஜின்களைவசப்படுத் திக்கொடுத்து அவர்களின் திறன்கள்,ஆற்றல்கள் போன்றவற்றை பயன்படுத்திபல்வேறு வேலைகளை செய்வித்துள்ளார்கள். இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது "(அவர் விரும்பிய போர்க் கருவிகளையும் சிற்பங்களையும் தடாகங்களைப் போன்ற கொப் பரைகளையும், நகர்த்த முடியாத பாத்திரங்களையும் அவருக்காக அவை (ஜின்கள்)செய்தன. தாவூதின் குடும்பத்தாரே நன்றியுடன் செயல்படுங்கள். எனது அடியார்களில் நன்றியுடையோர் குறை வாகவே உள்ளனர்." என்று கூறினோம். (34:13)

ஜின்களுக்கு மறைவான அறிவுஞானம் இல்லை :

மனிதனைவிட ஜின்என்ற படைப்புக்கு அதிகமானஆற்றல் இருப்பதாக திருக்குர்ஆன் கூறியுள்ளது. கண் மூடி திறப்பதற்குள் ஒருநாட்டி லிருக்கும் சிம்மாசனத்தை பிரிதொரு இடத்திற்கு கொண்டு வந்து வைக்கக்கூடியஅளவிற்கு ஜின்களுக்கு ஆற்றல் இருப்பதாக அல்குர்ஆன் கூறுகிறது.

விமானங்களோ, ரொக்கெட்களோ இல்லாமல் வானவர்கள் பேசுகின்ற எல்லை வரை, மேலேறிச் சென்று அங்கு பேசுவதை ஒட்டுக்கேட்க முயற்சிக்கும் அளவிற்கு ஆற்றல் ஜின்களுக்கு உண்டு.

இவ்வளவு ஆற்றல் வழங்கப்பட்டிருந்தாலும் மறைவானவற்றை ஜின்களால் அறிந்து கொள்ள முடியுமா? என்றால் முடியாது. இங்கே சுலைமான் நபிக்கு பயந்துகொண்டு பைதுல் முகத்தஸைக் கட்டும் பணியில் ஜின்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். (பார்க்க : அல்குர்ஆன் 34:14)

ஸுலைமான் நபி நின்ற நிலையிலேயே மரணித்துவிட்டார். ஆனாலும் கைத்தடியை ஊன்றிக் கொண்டிருந்ததால் அவர்கீழேவிழாமல் அப்படியேநின்றார். பிறகு கறையான்கள் கைத்தடியைஅரித்து அவரதுஉடல்கீழேவிழுந்த பிறகுதான், சுலைமான்நபி ஏற்கனவே இறந்துவிட்டார் எனும் செய்தி ஜின்களுக்கு தெரியவந்தது.

தங்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்த சுலைமான்நபி உயிருடன் இருக்கின்றாரா? மரணித்து விட்டாரா? என்பதைக்கூட ஜின்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஜின்களுக்குமறைவானஞானம்தெரியாது எனும்போது, மகான்கள் மறைவானவற்றை அறிவார்கள் என்பதை நம்புவது அறியாமை தவிர வேறில்லை.

பல்வேறு உருவங்களில் தோற்றமளிக்கும் ஆற்றல்:

ஜின்கள் மனித உருவத்திலும் மிருகங்களின்உருவத்திலும் தோற்ற மளிக்கும் ஆற்றல் பெற்றவை. பத்ர் யுத்தம் நடைபெற்றநாளில் ஷைத்தான் சுறாகாபின் மாலிக் என்பவரின் உருவத்தில் வந்து முஷ்ரிகீன்களுக்கு (இறைவனுக்கு இணைவைப்பவர்களுக்கு) நிச்சயம்வெற்றி கிடைக்குமென்றுவாக்குறுதி வழங்கினான். இதனைப் பற்றி அல்குர்ஆனில் "ஷைத்தான் அவர்களின் செயல்களை அவர்களுக்கு அழகானதாக காட்டியதை நினைத்துப் பாருங்கள்! இன்று மனிதர்களின் உள்ளங்களை வெல்ல யாருமில்லை. நான் உங்களுக்கு அருகில் இருக்கிறேன்"எனவும் கூறினான். இரு அணிகளும் நேருக்குநேர் சந்தித்தபோது பின்வாங்கினான். உங்களை விட்டுவிலகிக் கொண்டவன் நீங்கள் பார்க்காததை (மலக்குகளை) நான்பார்க்கிறேன். நான் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன். அல்லாஹ் கடுமையாக தண்டிப்பவன் என்று கூறினான்." (அல்-அன்பால்-48)

மேலும்ஷைத்தானுக்கு அபூஹுரைரா (ரழி) அவர்களுடன் மிக சுவாரசியமான ஒரு சம்பவம் நடைபெற்றது. இது ஸஹீஹுல் புஹாரியிலும் வேறுபலகிரந்தங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறினார்கள்: "ஒரு ரமழான மாதம் சேகரிக்கப்பட்ட ஸகாத் பொருட்களைப்பாதுகாப்பதற்காக நபி(ஸல்) அவர்கள்என்னைப் பொறுப்பாக்கினார்கள். அந்த இரவு வேளையில் ஒருவர்வந்து அந்தஉணவுப் பொருட்களை திருட்டுத் தனமாக எடுப்பதைக் கண்ட நான் அவனது கையைப்பிடித்து உன்னை நான் நபி (ஸல்) அவர்களிடம் ஒப்படைக்காமல் விட மாட்டேன்" என்று கூறியதும் அவன் நான் மிகவும் ஏழை, எனக்கு பிள்ளைகள் உள்ளனர், மிகவும் தேவைப்பாடு உள்ளது என்று கெஞ்சிக் கேட்டான். நான் அவனை விட்டுவிட்டேன்.

காலையானதும் நபி(ஸல்) அவர்கள், என்னிடம் "அபூஹுரைராவே! இரவு நீர் கைது செய்த கைதி என்ன செய்தான்" என வினவ, அல்லாஹ்வின் தூதரே! அவனது கடுமையான ஏழ்மையையும், குடும்ப கஷ்டத்தையும் முறையிட்டான். அவன் மீது இரக்கப்பட்டு அவனை விட்டுவிட்டேன்" என்று கூறினேன்.

“அவன்உன்னிடம் பொய் கூறியுள்ளான் மீண்டும் அவன் வருவான்” என நபி (ஸல்) அவர்கள் கூறியதனால், நிச்சயம் மீண்டும் அவன் வருவான் என எதிர்பார்த்து இருந்தேன். மீண்டும் மறுநாள் இரவு அவன் வந்து உணவுப்பண்டங்களை களவாடுவதைக் கண்டுஅவனைப்பிடித்துக் கொண்டேன். “இன்றையதினம் உன்னை நபியவர்களிடம் ஒப்படைக்காமல் விடமாட்டேன்” என்று கூறிய போது “இல்லை என்னை விட்டுவிடு! நான் மிகவும் ஏழை எனக்கு குடும்பம் உண்டு. நான் இனிமேல் வரமாட்டேன். என்று கெஞ்சினான் நான் அவன் மீது இரக்கப்பட்டு விட்டுவிட்டேன்.

மறுநாள் காலையில் நபியவர்களை சந்தித்தபோது “அபூஹுரை ராவே! இரவு உனது கைதி என்ன செய்தான்” என வினவ, “அல்லாஹ் வின் தூதரே! அவனதுவறுமை, குடும்ப கஷ்டம் பற்றி முறையிட்ட தால் அவன் மீது இரக்கப்பட்டு விட்டுவிட்டேன்” என கூறினேன்.

அப்போது நபியவர்கள் “அவன் உம்மிடம் பொய் கூறியுள்ளான். மீண்டும் நிச்சயம் வருவான்” எனக்கூற அவனை மூன்றாம் முறையும் எதிர்பார்த்து இருந்தேன். அவன் வந்து உணவுப் பொருட்களை திருடியவேளையில் அவனைப் பிடித்துக் கொண்டு “உன்னைக் கண்டிப்பாக நபியவர்களிடம் கொண்டுசெல்லப் போகிறேன் .இது மூன்றாவது தடவையும் கடைசித் தடவையுமாகும். நீர் திரும்பி வரமாட்டேன்” என்று சொல்லிக்கொண்டு மீண்டும் மீண்டும் வந்துவிட்டாய்!” என்று கூறியபோது அவன் கூறினான் “நீ என்னை விட்டுவிடு! நான் உனக்கு சில வார்த்தைகளைக் கற்றுத்தருகிறேன் அவற்றை நீர் ஓதினால் அவற்றினால் அல்லாஹ் உனக்குபயன் தருவான்.” என்று அவன்கூறியதும் “அது என்ன? என்றுகேட்டேன். அவன் கூறினான் “நீ தூங்குவதற்காக உனது விரிப்புக்குச்சென்றால் நீர்ஆயதுல் குர்ஷியை இறுதி வரை ஓதிக்கொள். நீர் அவ்வாறு செய்தால் உனக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஒரு பாதுகாவலர் இருந்துகொண்டே இருப்பார். நீ காலையாகும் வரை ஷைத்தான் உம்மை நெருங்கவே மாட்டான்” என்று அவன் கூறியதும் நான் அவனை விட்டுவிட்டேன். (அவர்கள் (ஸஹாபாக்கள்) நலவை செய்வதில் பேரார்வம் உள்ளவர்களாக இருந்துள்ளார்கள்.) நபியவர்கள் கூறினார்கள் “அவன் பொய்யன்

ஆனால் இந்த விடயத்தில் உண்மையைக் கூறியுள்ளான்” என்று கூறிவிட்டு “அபூஹுரைராவே! பல இரவுகளாக நீர்யாருடன் உரை யாடிக் கொண்டிருந்தீர் என்பதை அறிவாயா?” என வினவிய போது நான் “இல்லை நாயகமே! என்று கூறினேன். அதற்கு நபியவர்கள், **அவன்தான் ஷைத்தான் மனிதஉருவத்தில் வந்துள்ளான்”** எனக் கூறினார்கள். (புகாரி 2311)

சிலவேளை **ஷைத்தான் மிருகங்கள், கழுதை, ஒட்டகம், பசுமாடு, நாய், பூனை, பாம்பு போன்ற உருவங்களிலும் தோற்றமளிப்பான்.**

குறிப்பாக கறுத்த நாய் ஷைத்தான் என நபியவர்கள் குறிப் பிட்டுள்ளார்கள். “கறுத்த நாய் தொழுபவருக்கு முன்னால் குறுக்கிட்டால் தொழுகை முறிவடைந்துவிடும்” என நபி (ஸல்) அவர்கள் கூறி யுள்ளார்கள். எனவே ஜின்கள், கறுத்தநாய், கறுத்த பூனை, உருவத்தில் அதிகமாக தோற்றமளிப்பார்கள்.

வீட்டில் பாம்பு:

சில வேளை பாம்புஉருவத்தில் ஜின்கள் வீடுகளுக்குள்வரலாம், இதனால் “வீடுகளுக்குள் வரக்கூடிய பாம்புகளை கொல்ல வேண்டாம், அவைஇஸ்லாத்தை தழுவிய ஜின்களாக இருக்கலாம்” என்றும் நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்.

மேலும் “மதீனாவில் இஸ்லாத்தை தழுவிய ஜின் கூட்டம்ஒன்று உள்ளது, எவர் வீடுகளுள் இந்த பாம்புகள் வந்ததாக கண்டால் அதனைசென்று விடும்படி மூன்றுதரம் கூறவும், அவ்வாறு கூறியும் அது போகவில்லையென்றால் அதனைக் கொன்று விடவும் அது ஷைத்தானாகும்” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ சயீத் அல்குத்ரி (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

நபித்தோழர்களில் ஒருவர் வீட்டுப்பாம்பொன்றை கொலை செய்து விட்டார், அதுவே அவரது மரணத்திற்கு காரணமாகிவிட்டது. அந்த வரலாறு பின்வருமாறு :

அபுஸ்ஸாயிப் எனும் நபித்தோழர் அபூசயீத்அல்குத்ரிஎனும் நபித் தோழரின் வீட்டுக்குச் சென்ற போது அவர் தொழுது கொண்டிருப் பதைக் கண்டு அவர் தொழுகையை பூர்த்தியாக்கும்வரை எதிர் பார்த்திருந்ததாகக் கூறினார். அவ்வேளை அவ்வீட்டின் ஓரமாக வுள்ள ஈத்தம் பாளையிலேஏதோஒன்று அசையும் சப்தத்தை செவியுற்றேன், அதனைத் திரும்பிப் பார்த்தேன், அதுஒரு பாம்பு" உடனே அதனைக் கொல்வதற்காக விரைந்துஎழுந்தேன், அவர் என்னை உட்காருமாறுசாடை செய்தார், நான் உடனே உட்கார்ந்து விட்டேன். அவர் தொழுது முடிந்து வந்தபோது, இந்த வீட்டைப் பற்றி ஏதாவது உனக்கு தெரியுமா? எனக்கேட்க, ஆம் என்றேன். பின் கூறினார். இந்த வீட்டிலே புதிதாகதிருமணம் முடித்த ஒரு இளைஞன் குடியிருந்தான் அவ்வேளை நாங்கள் கந்தக் யுத்தத் திற்காக நபி (ஸல்) அவர்களுடன் வெளியே சென்றிருந்தோம். அந்தஇளைஞன் பகல் வேளைகளில் நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்று, அவரது வீட்டிற்கு வந்து செல்லும் வழக்க முள்ளவராக இருந்தார். வழமை போல ஒருநாள் அனுமதி கேட்ட போது, நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதிவழங்கி, "உம்மிடம் உள்ள ஆயுதத்தை உம்முடனேயே எடுத்துச்செல்! குரைழா கோத்திரத்தால் உமக்கு ஏதும் தீங்கு ஏற்பட்டாலாமென பயப்படுகின்றேன்" எனக்கூறினார்கள். அந்த இளைஞன் தனது ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வீடு நோக்கி வந்தபோது அவரது மனைவி, அவரது வீட்டின் கதவு நிலைகளுக்கிடையில் நின்று கொண்டிருப்பதைக் கண்டு, ஆக்ரோசம் உண்டாகி தனது ஈட்டியை எடுத்து மனைவியை குத்த முற்பட்டபோது உமது ஈட்டியை நிறுத்திவிட்டு, வீட்டினுள்ளே நுழைந்து, என்னை வீட்டை விட்டு வெளியேற்றியது எது? என்பதைப் பாருங்கள் என்று கூறினாள். உடனே அந்த இளைஞன் வீட்டினுள்ளே நுழைந்து பார்த்தபோது அங்கே மிக பிரமாண்டமான ஒருபாம்பு அவர்களது படுக்கை விரிப்பில் சுருண்டு படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு ஒரு ஈட்டியை எடுத்து குறிபார்த்து அதனை நோக்கி எறிந்து அதனைக் கொன்றுவிட்டார். அதேவேளை அவரும் உடனே மரணித்து விட்டார். முதலில் மரணித்தது பாம்பா? அல்லது அந்த இளைஞனா? என அறிய முடியாதளவு குறுகிய நேரத்தில் விரைவில் மரணித்து விட்டார்.

பின்னர் நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நடந்த விடயத்தைக்கூறி, அவர் உயிர் பெற்று எழுவதற்கு "நீங்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள்" என நாம் வேண்டிக்கொண்ட போது "உங்களது சகோதரருக்காக அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேடுங்கள்" என நபியவர்கள் கூறி, மதீனாவில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஜின்கள் இருக்கின்றார்கள் அவர்களில் யாரையும் உங்களின் வீடுகளில் கண்டால் வீட்டைவிட்டு வெளியேறுவதற்கு மூன்றுநாட்களுக்கு அவர்களுக்குகட்டளையிடுங்கள். அவ்வாறு அவர்கள் வெளியேறவில்லையென்றால் அவர்களைக் கொன்று விடுங்கள் திட்டமாக அவைஷைத்தான்தான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

மேற்கூறப்பட்ட சம்பவத்தில் ஜின்கள் பாம்பு உருவத்திலும் வரலாம் எனவும், அவ்வாறு வந்தால் அதனை திடீரென கொல்லாமல், நீமூமினான ஜின்னாக இருந்தால் போய்விடு! எனமூன்று முறை அல்லது மூன்று நாட்களுக்கு கூற வேண்டும் அதனையும் மீறிபோகவில்லை யானால், அதனைக் கொல்ல வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் "அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன் நீ இந்த வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று விடு! உனது தீங்கைவிட்டு எங்களைத் தூரப்படுத்து, இல்லாவிட்டால் உம்மைக் கொன்று விடுவோம்" என்று கூற வேண்டும்.

அது ஜின்னாக இருந்தால் போய்விடும், அது உண்மையில் பாம்பாகஇருந்தால் அதனைக் கொல்ல வேண்டும். அவ்வாறே மூர்க்கத்தனமான காபிரான ஜின்னாக இருந்தால் அதனைக் கொல்வதுதான் பொருத்தம். இல்லாவிட்டால் அதுவீட்டில் உள்ள வர்களுக்கு தீங்கு விளைவிக்கலாம்.

மனித உடலில் ஷைத்தான்நுழைவானா?

மனிதஉடலில் ஜின்,ஷைத்தான்கள் நுழையமாட்டார்கள் என சிலர் வாதிடுகின்றனர், இது பற்றி அல்குர்ஆன், சுன்னா ஆதாரங்களைப் புரட்டிப் பார்க்கும் போதுமனித உடலில் ஜின், ஷைத் தான்கள் நுழைவார்கள் என்பதற்கான ஆதாரங்கள் அதிகம் உள்ளன.

"நிச்சயமாக மனிதனின் இரத்தம் ஓடும்நாளங்களில் ஷைத்தான் ஓடிக்கொண்டிருக்கிறான்." என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி, முஸ்லிம்)

நபி(ஸல்) அவர்களின்மனைவி ***ஸபிய்யாபின்த்ஹுயய்*** *அவர்கள் அறிவித்துள்ளார்கள்.ஒருமுறைநபியவர்கள் பள்ளிவாயலில் இஃதிகாப் இருந்தார்கள். அவர்களை இரவுவேளையில் சந்திக்கச் சென்று அவர்களுடன் உரையாடிவிட்டு வீடுதிரும்ப தயாரானபோது நபியவர்களும் என்னை வீட்டிற்கு அழைத்துச்சென்று கொண்டிருந்தார்கள். அவ்வேளை, பாதையில் நடந்துகொண்டிருந்த இரு அன்சாரித் தோழர்கள் நபியவர்களைக் கண்டதும் விரைவாக நடக்க ஆரம்பித்தார்கள்.*

இதனை அவதானித்தநபியவர்கள் "சற்று நில்லுங்கள்" இவள்எனது மனைவி ஸபிய்யாபின்து ஹுயய் எனக்கூறியதும் "சுப்ஹானல்லாஹ்" அல்லாஹ்வின் தூதரே! (நாங்கள் சந்தேகப்படவே இல்லையே" எனவெளிப்படுத்தினார்கள்.) அதற்கு நபியவர்கள், நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் இரத்தம் ஓடுமிடமெல்லாம் ஓடிக்கொண்டிருக்கிறான். உங்கள் இருவரது உள்ளங்களிலும் அவன்தீய எண்ணத்தை ஊடுருவச் செய்து விடலாம் என நான் பயந்தேன்" என நபியவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மேலும் வட்டிசாப்பிடுபவர்கள் விடயத்தை அல்குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடும் போது,

"الــذين يــأكلون الربــا لا يقومــون إلا كمــا يقــوم الــذي يتخبطــه الشيطان من المــس (ســورة البقــرة:275)

"வட்டியைஉண்போர்மறுமைநாளில்ஷைத்தானால்பீடிக்கப்பட்டவன்போல் பைத்தியமாகவே எழும்புவார்கள்."(02:275)

"ஜின்னினால் பீடிக்கப்பட்ட மனிதனுடைய உடம்புக்குள் அதுநுழையாது" என்று சிலர்கூறுகின்றார்களே எனஇமாம்அஹ்மத் இப்னுஹம்பல் (ரஹ்) அவர்களிடம்கேட்ட போது ***அப்படிக்கூறுபவர்கள் பொய்***

சொல்கின்றார்கள்." ஜின் உள்நுழைந்து அதுபேசுவது போல் பேசுகின்றான். எனஇமாமவர்கள் பதிலளித்தார்கள்.

இது பற்றி இமாம் இப்னுதைமிய்யா (ரஹ்) அவர்களின் கருத்து: "ஜின் மனிதனின் உடம்பில் உட்செல்வது என்றசெய்தி பிரபல்யம் வாய்ந்தது. ஒரு மனிதனுக்கு ஜின் பீடித்துவிட்டால் சிலவேளை அவன் ஏதேதோபேசுகின்றான், கருத்துவிளங்காத வார்த்தைகளை அல்லது அவன்அறியாத மொழிகளைக்கூட பேசுகின்றான். இது எவ்வாறு அந்தமனிதனுக்குமுடிந்தது. சிலவேளை ஜின்னால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மிக கடுமையான அடி கொடுக்கப் பட்டாலும் அது பற்றிய எந்த உணர்வும், வேதனையும் அவர்களுக்கு இருக்காது. எனவே அந்த மனிதனின் நாவில் பேசியது ஜின்னே அன்றி அவனில்லை."

மேலும் இமாம் இப்னுதைமிய்யா (ரஹ்) குறிப்பிடும் போது: ஜின் மனிதனின் உடலில்நுழையமுடியாது என்று எந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர்களும் கூறவில்லை. அதை மறுக்கும் எந்த ஆதாரமும் இல்லை. இருப்பினும் அதை மறுத்தவர்கள் முஃதஸிலாக் கொள்கையைச் சேர்ந்த அபூபக்கர் அர்ராஸி அல்ஜுபாயி போன்றவர்களே. (அல்-மஜ்மூஃ, பாகம்: 19, பக்கம்: 12)

ஜின், ஷைத்தானின் பலவீனங்கள் :

"ஜின்,ஷைத்தான் பலவிடயங்களில் பலசாலிகளாகஇருப்பது போல் சில விடயங்களில் பலவீனர்களாகவும் இருக்கின்றார்கள். ஷைத் தானின் சூழ்ச்சி பலவீனமானதாக உள்ளது."(04:76)

எனஅல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. மேலும்மனிதர்களை நிர்ப்பந்தித்து வழிகேட்டிலும், இறைநிராகரிப்பிலும் ஈடுபடுத்தும் ஆற்றல் ஷைத்தானுக்கு அல்லாஹ் வழங்கவில்லை. இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:

"எனது அடியார்கள் மீதுஉனக்கு எந்த அதிகாரமும் இல்லை. உமது இறைவன் பொறுப்பேற்கப் போதுமானவன்."

إن عبادي ليس لك عليهم سلطان وكفى بربك وكيلا
(سورة الإسراء:65)

மற்றுமொரு வசனத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்:

“நம்பிக்கைகொண்டோர்மீதும், தமது இறைவனையே சார்ந்திருப் போர்மீதும், அவனுக்கு எந்தஅதிகாரமும்இல்லை. தன்னைபாது காப்பவனாக ஆக்கிக் கொண்டோர் மீதும், இறைவனுக்கு இணை கற்பிப்போர்மீதும் அவனுக்குஅதிகாரம் உள்ளது.” (16:99-100)

சில நல்லடியார்களைவிட்டும் ஷைத்தான் அஞ்சி ஓடுதல் :

ஒருமனிதன் இஸ்லாத்தில்உறுதியாக இருந்து, ஈமான் அவனது உள்ளத்தில் மிகவும் பலமானதாக இருந்து, அல்லாஹ்வின் கட்டளையை முழுமையாக எடுத்து நடப்பவராக இருந்தால் ஷைத்தான் அவரைக் கண்டு அஞ்சி விரண்டோடுவான். இதற்கு உதாரணமாக நபியவர்கள் ஹஸ்ரத் உமர் (ரழி) அவர்களைப் பார்த்து “உமரே! ஷைத்தான் உம்மைவிட்டு பயந்து ஓடுகிறான்.” எனக் கூறினார்கள். (அஹ்மத், திர்மிதி, இப்னு ஹிப்பான்)

இது ஹஸ்ரத் உமர் (ரழி) அவர்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக யாரெல்லாம் ஈமானின்உறுதியானவராகவும், பாவகாரி யங்களைவிட்டும் தவிர்ந்து ஹராம், ஹலால் பேணி நடப்பாரோ அவரைவிட்டும் ஷைத் தான் தூரவிலகிச் செல்வான்.

இதற்கு ஆதாரமாகநபியவர்கள் கூறினார்கள்: பிரயாணத்தில் செல்லும் போது ஒருவர் மற்றவருடைய குதிரையை மிகைத்து முந்திச் செல்வது போல, “நிச்சயமாக ஒரு முஃமின் ஷைத்தானை மிகைத்து, அடக்கி விடுவான்,” (அஹ்மத்)

மேலும்” ஜின் இனத்தைச்சேர்ந்த ஒரு தோழனும், மலக்குகளில் ஒரு தோழனும் சாட்டப்படாத எவரும் உங்களில் இல்லாமல் இல்லை என்று நபியவர்கள் கூறியபோது, அல்லாஹ்வின் தூதரே! உங்களுடனும் சாட்டப்பட்டுள்ளனரா? என வினவ, ஆம் என்னுடனும்தான். என்றாலும்

அல்லாஹ் எனக்கு உதவி புரிந்துள்ளான். அவன் எனக்கு வழிப் பட்டுவிட்டான். அவன் எனக்கு நல்லதைத் தவிர வேறு எதனையும் ஏவமாட்டான்." எனக் கூறியுள்ளார்கள். (அஹ்மத்)

ஸுலைமான் நபியும், ஜின்களும்

நபிஸுலைமான் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் பல்வேறு படைப்புக்களை வசப்படுத்திக் கொடுத்துள்ளான். அவற்றில் ஜின், ஷைத்தான்களையும் வசப்படுத்திக் கொடுத்தான். அவர்களை பயன் படுத்தி தேவையான வேலைகளை செய்வித்தார்கள். மாறு செய்த வர்களுக்கு தண்டனையும், சிலரை கைது செய்தும் சிறையிலிட்டார்கள். இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது, **"அவருக்கு காற்றை வசப்படுத்திக் கொடுத்தோம். அவரது கட்டளைப்படி, அவர் நினைத்தவாறு அது பணிந்து சென்றது "ஷைத்தான்களில் கட்டிடம் கட்டுவோரையும், முத்துக் குளிப்போரையும் விலங் கிடப்பட்ட வேறு சிலரையும் (அவருக்கு) வசப்படுத்திக் கொடுத்தோம்." (38: 36-38)**

மற்றுமொரு வசனத்தில்,

"ஸுலைமானுக்கு காற்றை வசப்படுத்தினோம். அதன் புறப் பாடு ஒரு மாதமாகும். அதன் திரும்புதல், ஒரு மாதமாகும். அவருக்கு செம்பு ஊற்றை ஓடச்செய்தோம். தனது இறைவனின் விருப்பப்படி அவரிடம் பணியாற்றும் ஜின்களும் இருந்தனர். அவர்களில் யாரேனும் நமது கட்டளைகளை புறக்கணித்தால் நரகின் வேதனையை அவருக்கு சுவைக்கச் செய்வோம்." (34:12)

"அவர் விரும்பிய போர்க் கருவிகளையும், சிற்பங்களையும், தடாகங்களைப் போன்ற கொப்பரைகளையும் நகர்த்த முடியாத பாத்திரங்களையும் அவருக்காக அவை செய்தன". (24: 12,13)

இவ்வாறு காற்று, பறவைகள் போன்ற படைப்பினங்களுடன் ஜின், ஷைத்தான்களையும் அல்லாஹ் நபி ஸுலைமான் (அலை)

அவர்களுக்கு வசப்படுத்திக் கொடுத்து நபி ஸுலைமான் அவர்களின் பிரார்த்தனையின் பிரதிபலனாகவே அமைந்தது. அவர்கள் பின்வருமாறு பிராத்தித்தார்கள். :

"رب اغفرلي وهب لي ملكا لاينبغي لاحد من بعدي إنك أنت الوهاب"
(سورة ص :35)

"என் இறைவா! என்னைமன்னித்து, உனக்குப்பின் யாருக்கும் கிடைக்காத ஆட்சியை எனக்கு வழங்கு. நீயே கொடையாளன்" எனக் கூறினார்.

இந்த பிரார்த்தனைதான் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு ஜின்னைப் பிடித்து பள்ளிவாசல் தூணில் கட்டிவைக்க நினைத்த போது அதனைச் செய்யவிடாமல் தடுத்தது. அந்தச் சம்பவம் பின்வருமாறு:

ஒருநாள் நபியவர்கள் தொழுகை நடாத்திக் கொண்டிருந்தபோது "உன்னைவிட்டும், அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்." என்று கூறிவிட்டு அல்லாஹ்வின் சாபத்தைக் கொண்டு உன்னை சாபமிடுகிறேன்". என மூன்றுமுறைகூற செவியுற்றோம். பின்னர் ஏதோ ஒன்றை பிடித்தது போன்று கையை விரித்தார்கள், தொழுகை முடிவடைந்ததும் "அல்லாஹ்வின் தூதரே!" இன்றைக்கு வழமைக்கு மாறாக ஏதோ சொல்லிக்கொண்டிருந்தீர்கள். உங்கள் கையையும் விரித்தீர்கள் என்ன காரணம்? என்று வினவ, அதற்கு ***"அல்லாஹ்வின் பகைவன் இப்லீஸ் ஒருநெருப்புப்பந்தத்தை எனது முகத்தில் வைப்பதற்காக கொண்டுவந்தான்.*** *அதனால்தான் நான் அல்லாஹ்விடம் பாதுகாவல்தேடுகிறேன். பிறகு அல்லாஹ்வின் பூரண சாபத்தைக் கொண்டு சாபமிடுகிறேன் என்று கூறியும் அவன் பின்வாங்கவில்லை பின்னர் அவனைப் பிடித்துக் கட்டிப் போடுவதற்கு நாடினேன்." "அல்லாஹ்வின் மீது ஆணையாக எங்களது சகோதரர் ஸுலைமான் அவர்களின் பிரார்த்தனை இல்லையாயின், மதீனாவின் சிறார்கள் அவனைப் பார்த்து, பிடித்து விளையாடும் படி பள்ளிவாசல் தூணில் கட்டிவைத்திருப்பேன்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

அதாவது நபிஸுலைமான் (அலை) அவர்களின் பிரார்த்தனையில் "எனக்குப் பின் யாருக்கும் வழங்கப்படாத ஆட்சி அதிகாரத்தை தா!" என்று பிரார்த்தனை செய்தது, நபி (ஸல்) அவர்களுக்கு நினைவுக்கு வந்த காரணத்தினால்தான் அவனைப் பிடித்து பள்ளி வாசல் தூணில் கட்டி வைக்கவில்லை. என நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். எனவே, இதுபோன்ற நிகழ்வுகள் நபி (ஸல்) அவர்களுக்கு பல விடுத்தங்கள் நடைபெற்றுள்ளன.

யூதர்கள் நபி ஸுலைமான் மீது பொய்யுரைத்தல்

யூதர்களும் ஜின்களை சூனியத்தின் மூலம் பயன்படுத்திய சிலரும், நபி ஸுலைமான் (அலை) அவர்கள் சூனியத்தின் மூலம்தான், ஜின்களைவசப்படுத்தி வைத்திருந்தார்கள், என்று பொய்களை புனைந்துள்ளார்கள். மேலும் சிலர் : ஸுலைமான் (அலை) அவர்கள் வபாத்தான போது, ஷைத்தான்கள் சூனியம், குப்ர் சம்பந்தமான சில நூல்களை எழுதி, சிம்மாசனத்தின் கீழ் மறைத்துவைத்துவிட்டு ஸுலைமான் (அலை) அவர்கள் இவற்றைப் பயன்படுத்தியே ஜின்களை வசப்படுத்தியிருந்தார்கள்" எனக் கூறினர்.

"இது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டிருக்காவிட்டால் இதனை ஸுலைமான் நபி பயன்படுத்தியிருக்க மாட்டார்கள்" என்றும் சிலர் வாதிட்டனர். எனவே அது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு தெளிவு படுத்தியுள்ளது.

"மேலும் அவர்கள்ஸுலைமானின் ஆட்சிக் காலத்தில் பொய்யாக ஓதியவற்றைப் பின்பற்றினார்கள். இன்னும் ஸுலைமான் (சூனியம் செய்து அல்லாஹ்வை) நிராகரிக்க வில்லை. எனினும் ஷைத்தான் கள்தான் நிராகரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சூனியத்தையும் பாபிலோன் நகரத்தில் ஹாரூத், மாரூத் என்னும் இரு மலக்குகளுக்கு இறக்கப்பட்ருந்த (தாககூறி பல) வற்றையும், மனிதர்களுக்கு கற்றுக் கொடுத்து வந்தார்கள். மேலும் அவ்விருவரும் நாங்கள் சோதனையாக இருக்கிறோம். ஆதலால் (இதைக் கற்று) நீர் காபிராகிவிட வேண்டாம் என்று கூறியே அன்றி, அதனை எவருக்கும் கற்றுக்கொடுக்கவில்லை." (02:102)

ஜின்களால் அற்புதங்களை நிகழ்த்த முடியாது

உலக மக்களுக்கு நேர்வழி காட்டிகளாக காலத்திற்குக் காலம் அனுப்பப்பட்ட நபி, ரஸூல்மார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களை போல் ஜின்களால் எதனையும் கொண்டுவரமுடியவில்லை. "அல்குர் ஆன்" ஷைத்தான்களினால் உருவாக்கப்பட்டது என்று சில மக்கா காபிர்கள் கூறிய போது அல்லாஹ் பின்வருமாறு சவால்விட்டான்.

இன்னும்(குர்ஆனாகிய)இவ்வேதத்தைக்கொண்டுஷைத்தான்இறக்கி வைக்கவில்லை. மேலும் அவர்களுக்கு அதுதகுதியுமன்று அவர்கள் (அதற்கு) சக்திபெறவும் மாட்டார்கள். "நிச்சயமாக அவர்கள் செவியேற்பதிலிருந்து தடுக்கப்பட்டவர்களாவர்." (42:210-212)

இந்த குர்ஆனைப் போன்று கொண்டு வருவதற்கு மனிதர்களும், ஜின்களும் ஒன்று சேர்ந்தாலும் இதனைப் போன்ற ஒன்றை அவர்களால் கொண்டு வர முடியாது. அவர்களில் சிலர் சிலருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே என்று நபியே! நீர் கூறுவீராக! (17:88)

கனவும் ஷைத்தானும்

ஜின், ஷைத்தான்கள் கனவில் நபி (ஸல்) அவர்களின் தோற்றத்தில் ஒருவருக்குகாட்சியளிக்க முடியாது. "யார் என்னை கனவில் காண் கிறாரோ அவர் என்னையே கண்டார். ஏனெனில் ஷைத்தான் எனது உருவத்தில் தோற்றமளிக்க மாட்டான்." என நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் திர்மிதி எனும் கிரந்தத்தில் பதிவாகியுள்ளது.

இதேபோன்ற கருத்தில் புஹாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் சில ஹதீஸ்கள் பதிவாகியுள்ளன.

மேற்படி ஹதீஸின் மூலம் பின்வரும் விளக்கத்தையும் பெற முடிகிறது. அதாவது ஷைத்தான் நபி (ஸல்) அவர்களின் உண்மையான

தோற்றத்தில் காட்சியளிக்காமல் வேறுசில மனிதர்களின் தோற்றத்தில் காட்சியளித்து **நான்தான் ரஸூலுல்லாஹ்** எனக் கூறவும் சாத்தியப் பாடுகள் உள்ளன.

எனவே நபியவர்களைக் கனவில் கண்டேன் என்று சொல்லும் ஒவ்வொருவரும் ரஸூலுல்லாஹ் அவர்களைத் தான் கண்டார்களா? என்பதைத் தெளிவு பெற வேண்டிய தேவையுள்ளது. ஷமாயில் திர்மிதி எனும் கிதாபில் நபி (ஸல்) அவர்களின் வர்ணணைகள், அங்க அடையாளங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அந்த பண்புகளைப் போன்ற உருவத்தில் நபி (ஸல்) அவர்களைக் கண்டதாக ஒருவர் கூறினால் நம்பலாம், அதற்கு மாறாக தென்பட்டால் நம்ப முடியாது.

ஜின், ஷைத்தான் விண்ணில் குறிப்பிட்டஎல்லையை விடதாண்ட முடியாது

ஜின்,ஷைத்தான்களுக்கு மனிதனை விட பல மடங்கு சக்திகள் கொடுக்கப்பட்ட போதிலும், விண்ணில் குறிப்பிட்ட எல்லையை விட அவர்களால் தாண்டிச் செல்ல முடியாது. அதே நேரத்தில், அல்லாஹ் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஏழு வானங்கள் வரை மனிதனால் செல்ல முடியுமா?

சென்ற14.07.2020 திகதி Jaffnamuslim.com செய்தியில் ஒரு அதிர்ச்சி தகவல் வாசிக்கக்கிடைத்தது அதாவது: "செவ்வாய் கோளுக்கு முதல்முறையாக அரபு விண்கலம் ஏவப்படத்தயாராக இருக்கிறது இந்ததிட்டத்திற்கு **"சாரா அமீரி"** எனும்பெண் தலைமை தாங்கு வார், என்றும் அந்த விண்கலம் 1.3 டன்கள் எடையுள்ளது என்றும் அது 15.07.2020 தமது பயணத்தை செவ்வாய் கோளுக்கு ஆரம்பிக்கும் என்றும், அதனைச்சென்றடைய 500மில்லியன் (50 கோடி) கி.மி தொலைவு பயணிக்க வேண்டும், அது 2021 பெப்ரவரி மாதம் செவ்வாய்கிரகத்தை சென்றடையும். (ஏறக்குறைய ஆறரை மாதங்கள் பயணிக்கவேண்டி ஏற்படும்)

இந்த செய்தியின் மூலம் நாம் பெறும் படிப்பினை என்ன?

1. *அல்லாஹ்வின் படைப்பின் விசாலம்,*
2. *50 கோடி கி.மி தூரத்தை கடக்க மனிதன் கருவிகளின் உதவியால் எடுத்த முயற்சி.*
3. *அங்கு செல்வதற்கு மட்டும் தேவைப்படும் கால அளவு (6 ½ மாதகாலம்)*
4. *நபி(ஸல்) அவர்களின் மிஃராஜ் பயணம் (அங்கு சென்று, திரும்பிவர) மிக குறுகிய நேரத்தில் இடம் பெற்றதானது எல்லாம்வல்ல அல்லாஹ்வின் சக்தி,வல்லமையை தெளிவு படுத்துதல்.*

ஜின்,ஷைத்தான்கள் வானுலகச் செய்திகளை அறிந்து கொள் வதற்காக வானத்தை நெருங்கும்போது அவர்களை, தீப்பந்தம் விரட்டும் என்றுஅல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.

அது போலவே உரையாடிக் கொண்டிருக்கும் அந்த இலக்கு வரை மனிதர்களால் செல்ல முடியாது. ஓர் அளவிற்கு மட்டுமே செல்ல முடியும் என்பதையும் சேர்த்து இஸ்லாம் கூறுகின்றது.

அல்லாஹ்வின் திருநாமம் கூறப்பட்டு மூடப்பட்ட கதவை திறக்க சக்தி பெறமாட்டார்கள்:

"நிச்சயமாக ஷைத்தான் அல்லாஹ்வின் திருநாமம் கூறி, மூடப் பட்ட கதவை திறக்க மாட்டான். மேலும் உங்களது தோல்பைகளையும், ஏனைய பாத்திரங்களையும் அல்லாஹ்வின் திருநாமம் கூறி மூடி வையுங்கள். அந்தப் பாத்திரங்கள் மீது ஏதாவது ஒன்றை குறுக்காக வைப்பதன் மூலமாவது மூடி வையுங்கள் மேலும் உங்களது விளக்குகளை (இரவில்) அணைத்து விடுங்கள்". (புஹாரி, முஸ்லிம்)

ஜின், ஷைத்தான்கள் படைக்கப்பட்ட நோக்கம்

மனிதர்கள் எந்த நோக்கத்திற்க்காக படைக்கப்பட்டார்களோ அதே நோக்கத்திற்க்காகவே ஜின்களும் படைக்கப்பட்டார்கள்.

“ஜின் இனத்தையும், மனிதஇனத்தையும் என்னை வணங்குவதற் காகவே அன்றி நான் படைக்கவில்லை.” என அல்லாஹு தஆலா கூறியுள்ளான். (51:56)

ஜின்களுக்கும் ஏவல், விலக்கல்கள் உள்ளன. யார் அதற்குவழிப் பட்டு நடக்கின்றாரோ அவரை அல்லாஹ் சுவனத்தில் நுளையச் செய்வான். எவர் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறுசெய்கின்றாரோ அவரை நரகத்தில் நுளையச்செய்வான்.

மனிதர்களிலும், ஜின்களிலும் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்காமல் மறுத்து, மாறு செய்தவர்களை கேவலமாக விழித்து மறுமை நாளில் அல்லாஹ் கேட்பான்.

“ஜின் மற்றும் மனித சமுதாயமே! உங்களுக்கு என்வசனங்களை எடுத்துக் கூறி, இந்த நாளை நீங்கள் சந்திக்கவிருப்பதை உங்களுக்கு எச்சரிக்கை செய்யும் தூதர்கள் உங்களில் இருந்து வரவில்லையா? எங்களுக்கு எதிராகவே நாங்களே சாட்சி கூறுகின்றோம் என்று அவர்கள் கூறுவார்கள், இவ்வுலக வாழ்வு அவர்களை மயக்கிவிட்டது. (ஏக இறைவனை மறுத்தோராக இருந்தோம். என தங்களுக்கு எதிராக அவர்கள் சாட்சியமளிப்பார்கள்.” (06: 130)

ஒரு சந்தேக நிவர்த்தி

நெருப்பினால் படைக்கப்பட்ட ஜின், ஷைத்தான்கள் நரக நெருப்பில் எவ்வாறு வேதனை செய்யப்படுவார்கள்? வானத்தில் மலக்குகள் உரையாடுவதை ஒட்டுக் கேட்கச் செல்லும் போது நெருப்பு பந்தங் களால் எறியப்படுவதால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுமா? என சிலருக்கு சந்தேகம் ஏற்படுவதுண்டு. அதற்கான பதில்.

ஜின் இனத்தின் தந்தைமாத்திரம்தான்நெருப்பின்மூலப்பொருளால் படைக்கப்பட்டான். அதன் பின் அவ்வாறில்லை, நெருப்புக்கு மாற்றமான படைப்பாக மாறிவிட்டார்கள். எவ்வாறு முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் மண்ணினால் படைக்கப்பட்டு சதையும், எலும்பும், இரத்தமும் உள்ள மனிதனாக மாற்றப்பட்டு, அதன்பின் அவர்களது சந்ததிகள் இந்திரியத்துளி மூலமாக உருவாக்கப் பட்டார்களோ அதேபோல் தான்,ஜின்களும் என்பதை நாம் புரிந்து கொண்டால் சந்தேகம் நீங்கிவிடும்.

மண்ணின் மூலப்பொருளால் படைக்கப்பட்ட மனிதனுக்கு, ஒரு மண்கட்டியை அல்லது செங்கல் ஒன்றை எடுத்து, அவனது உடம்பில் அடித்தால் வேதனை ஏற்படாமலா இருக்கும்?, அவ்வாறே ஜின் களும் நெருப்பில் போட்டு வேதனை செய்யப்படுவார்கள்.

ஜின் இனத்திற்கும் நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் ரஸுலாக அனுப்பப்பட்டார்களா?:

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் முழுமனித சமுதாயத்திற்கும் நபியாகவும், ரஹ்மத்தாகவும், வழிகாட்டியாகவும் அனுப்பப்பட்டிருப்பது போலவே, ஜின் இனத்திற்கும் அன்னார் நபியாக அனுப்பப் பட்டுள்ளார்கள். என்றகருத்து ஸஹாபாக்கள், தாபியீன்கள், மற்றும் அனைத்து சுன்னத் வல்ஜமாஅத் முஸ்லிம்களின் கொள்கையாக இருக்கிறது.அல்குர்ஆனை செவியேற்ற ஜின்களில் ஒரு கூட்டம் விரைவாக சென்று ஈமான் கொண்டதாக அல்லாஹ் கூறுகின்றான்.

“ஜின்களில் ஒருகூட்டத்தினர் செவியுற்று, நாங்கள் ஆச்சரியமான குர்ஆனை செவியுற்றோம். எனக் கூறியதாக எனக்கு அறிவிக் கப்பட்டது எனக் கூறுவீராக! அது நேர்வழியைக்காட்டுகிறது. எனவே அதனை நம்பினோம் எங்கள் இறைவனுக்கு எவரையும் இணை யாக்கமாட்டோம்.” (72:1,2)

ஜின்களின் தூதுக் குழு

நபி (ஸல்) அவர்களின் வருகையின்பின்னர் ஜின்களில்சிலர், நபி (ஸல்) அவர்களிடம்வந்து அல்குர்ஆனை செவியுற்று, ஈமான் கொண்டிருந்தார்கள். அதன்பின் அவர்கள் நேர்வழி காட்டிகளாகவும்

அழைப்பாளர்களாகவும்மாறினர். அதன்பின் ஜின்களின் தூதுக் குழுவொன்று நபியவர்களிடம் கல்விகற்க நேரம்ஒதுக்கி தருமாறு கேட்டு மார்க்கவிடயங்களையும், அல்குர்ஆனையும் கற்றுக் கொடுத் தார்கள். இது ஹிஜ்ரத்துக்கு முதல் மக்காவில் நிகழ்ந்தது.

அல்கமா (ரழி) அவர்கள் கூறினார்கள் : நான் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களிடம் நபியவர்கள் ஜின்களுடன் உரையாடச் சென்றஇரவில் நீங்கள் யாரும் கூடஇருந்தீர்களா? எனக் கேட்ட போது எங்களில் எவரும் கூடஇருக்கவில்லை., எனினும் ஒருநாள் இரவு நபியவர்களை காணவில்லை என்றுதேடி, அவர்கள் கடத்தப் பட்டுவிட்டார்களா? அல்லது எங்காவது பறந்து சென்று விட்டார்களா? என்ன நடந்தது என்று கவலையுடன் அன்றிரவைக் கழித்தோம்.

மறுநாள் அதிகாலை வேளையில் ஹிறாமலை பக்கத்திலிருந்து நபியவர்கள் வருவதைக்கண்டு "அல்லாஹ்வின் தூதரே! என்று அழைத்து நடந்த விடயத்தைக் கேட்டோம். அதற்கு நபியவர்கள் ஜின்களில் ஓர்அழைப்பாளி என்னிடம் வந்து என்னை அழைத்தார். நான் அவர்களிடம் சென்றேன், அவர்களுக்கு அல்குர்ஆனை கற்றுக் கொடுத்தேன். என்றும் பின்னர் அவர்களின் அடையாளச் சின்னங் களையும், அவர்களின் நெருப்புடைய அடையாளங்களையும் எனக்கு காண்பித்தார்கள்." என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

இவ்வாறு நபியவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இரவு வேளை களில் ஜின்களை சந்திக்கச் சென்றிருக்கிறார்கள். ஜின்களில் பல்வேறுபட்டதரப்பினர் உள்ளனர். அவர்களில் சிலர் பூரண ஈமான் உள்ள ஸாலிஹானவர்களாகவும், வேறு சிலர் அதைவிட குறைவான தரத்திலும், வேறுசிலர் காபிர்களாகவும் உள்ளனர். காபிராக உள்ள ஜின்கள்தான் அதிகம்.

இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

"நம்மில்முஸ்லிம்களும் உள்ளனர், அநீதி இழைத்தோரும் உள்ளனர், இஸ்லாத்தை ஏற்றோர் நேர்வழியைதேடிக் கொண்டனர், அநீதி இழைத்தோர் நரகத்திற்கு விறகுகளாக ஆனார்கள். என்று ஜின்கள் கூறினர். (72:14,15)

02

ஷைத்தான் ஏன்? எதற்காக மனிதனை வழி கெடுக்கிறான்?

மனிதனுக்கும்,ஷைத்தானுக்குமிடையிலான பகைமிக நீண்டகாலமாக உருவானதாகும். அதன் வரலாற்றுப் பின்னணியை ஆராயுமிடத்து முதல் மனிதன் ஆதம்நபி (அலை) அவர்களை அல்லாஹ் களி மண்ணினால் படைத்து றூஹ் ஊதுவெதற்கு முன்பிருந்தே ஆரம்பமானது. அவர்களை அல்லாஹ் உருவாக்கி றூஹ் ஊதுவதற்குமுன் சிலகாலம் அப்படியேவிட்டுவைத்தான். அதனை அவதானித்த ஷைத்தான் கூறினான்: "நீ என்மீது சாட்டப்பட்டால் நான் உனக்கு நிச்சயம் மாறு செய்வேன். நான்உன் மீது சாட்டப்பட்டால் உம்மைநான் நாசமாக்கி விடுவேன்." என்று கூறியிருந்தான்.

இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறும்போது, அல்லாஹுʼத ஆலா ஆதம் (அலை) அவர்களின் உருவத்தை செய்து, சுவர்க்கத்தில் சில காலம் விட்டு வைத்தான். இப்லீஸ் அந்த உருவத்தை சுற்றி நோட்டமிட்டான். அது நடுவில் துவாரமுள்ள படைப்பாக இருப்பதைக் கண்டு தன்னுடன் இணைந்து போகக்கூடிய ஒரு படைப்பாக இல்லை என்பதை அவன் அறிந்து கொண்டான். (முஸ்லிம்)

அதன் பின் ஆதம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் றூஹை ஊதிய போது மலக்குகளை ஆதம் (அலை) அவர்களுக்கு மரியாதை நிமீர்த்தம் சிரம்பணியுமாறு கட்டளையிட்டான்.

ஷைத்தானின் குறிக்கோள்கள்

ஷைத்தான் மனிதனுக்கு விரோதியாக இருந்து மனிதனை வழிகெடுப்பதற்கான சில குறிக்கோள்கள் இருக்கின்றன.

1. *தூரநோக்குடைய இலட்சியம்*
2. *குறுகிய கால இலட்சியங்கள்*

தூரநோக்குடைய இலட்சியம்

மனிதனை வழிகெடுக்க அனைத்து விதமான தந்திரங்களையும் பயன்படுத்தி, அவனை வழிகெடுத்து சுவர்க்கத்தின் வாடையை கூட நுகரவிடாமல் நிரந்தர நரகவாதியாகஆக்குவதே அவனதுதூர நோக்குடைய குறிக்கோளாகக் கருதப்படுகிறது.

குறுகிய காலஇலட்சியங்கள்

மனிதனை நிரந்தர நரகவாதியாக ஆக்கும் தூரநோக்குடைய இலட்சியத்தை அடைவதற்கான சில குறுகியகால இலட்சியங்களைக் கையாள்வான். அவைகள் பின்வருமாறு

1. மனிதர்களை குப்ரிலும் ஷிர்க்கிலும்வீழ்த்துவது

மனிதனை அல்லாஹ்வை மறுக்க கூடிய வார்த்தைகளை பேச வைப்பது, அவ்வாறே அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்ககூடிய எண்ணத்தையோ, பேச்சையோ, செயலையோ செய்யத்தூண்டுவது ஆகும்.

இந்த விடயத்தில் பலர் தவறிழைக்கின்றனர், பெயரளவில் தன்னை முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டு ஷிர்க்கான காரியங்களை செய்து கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக அவ்லியாக் களின் பெயரால் கட்டப்பட்ட கப்றுகள், தர்ஹாக்களை நாடிச் சென்று, அங்கு அடங்கப்பட்டிருப்பவர்களுக்கு சாஷ்டாங்கம் செய்தல், அல்லது தோப்புக்கரணம் போடுதல், அல்லது அந்த தர்ஹாக்களில் அடங்கப்பட்டிருப்பவர்களிடம் உதவி தேடுதல், அவர்கள் பெயரால் நேர்ச்சை, காணிக்கை, கந்தூரி, என்று எத்தனையோ ஷிர்க்கான காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள்.

உள்ளத்தில் அல்லாஹ்தான் படைத்தவன் பரிபாலிப்பவன், உண வளிப்பவன் என்ற நம்பிக்கை இருந்தாலும் நடத்தையில், செயலில் அல்லாஹ் அல்லாத அவ்லியாக்களாலும் உதவி செய்ய முடியும் என்பதை நடத்தையாலும் செயலாலும் காண்பிக்கின்றனர்.

இதே போன்று குறி, சாஸ்திரம் கேட்டல், சூனியம் செய்தல் அல்லது சூனியம் செய்பவர்களை நாடிச் செல்லல் அவ்வாறே மந்திரங்களைக் கொண்டு ஓதி ஊதிப்பார்த்தல், அல்லது அவ்வாறு செய்பவர்களை நாடிச்செல்லல், அச்சரம், தகடு, தாயத்துக்களில் நம்பிக்கை வைத்தல் இது போன்ற பல்வேறு ஷிர்க்கான விடயங்களை செய்தல், இவை அனைத்தும் ஒரு மனிதனை நரகின் பால் இட்டுச் செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது தான் ஷைத்தானின் முதல்வேலை.

"إن الله لا يغفر أن يشــرك بـــه ويغفـــر مـــا دون ذلـــك لمـــن يشـــاء"

"அல்லாஹ்வுக்கு இணைவைக்க கூடிய பாவத்தை அவன் மன்னிக்கவே மாட்டான். அது தவிர்ந்த ஏனைய பாவங்களை அவன் நாடியவர்களுக்கு மன்னிப்பான்." என அல்லாஹ் கூறியுள்ளான். (04:48)

எனவே இவ்வாறு ஷிர்க், குப்ர் போன்ற விடயங்களுக்கு மனிதனுக்கு ஆசையூட்டுவது யார்? நிச்சயமாக ஷைத்தான் தான் அதனைப் பற்றி அல்லாஹ் மற்றுமொரு வசனத்தில் கூறியுள்ளான்.

"كمثل الشـــيطان إذ قـــال للإنســـان اكفـــر فلمـــا كفـــر قـــال إنـــي بريء منـــك" (سورة الحشـــر:16)

(ஏக இறைவனை மறுத்துவிடு! என்றுமனிதனிடம் கூறி, அவன் மறுத்தபின்,

நான்உன்னைவிட்டும் விலகிக்கொண்டேன், அகிலத்தின் இறை வனாகிய அல்லாஹ்வை அஞ்சுகிறேன்" எனக்கூறிய ஷைத்தானைப் போன்றவர்கள். (59:16)

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள், மனிதர்களே! இன்றைய தினத்தில் உங்களுக்குத் தெரியாத பல விடயங்களை அல்லாஹ் எனக்குக் கற்றுத்தந்து, அவற்றை உங்களுக்குக் எத்திவைக்குமாறும், எனக்கு கட்டளையிட்டுள்ளான்.

“எனது அடியான் இது ஹலாலா, ஹராமா எனதெரியாமல் எதை சாப்பிடுகிறானோ அது அவனுக்கு ஹலாலாகும். மேலும் எனது அடியார்களை நான் தூய்மையான மார்க்கத்தில்தான் படைத்தேன். ஆனால் ஷைத்தான் அவர்களிடம்சென்று அவர்களை தூய்மையான மார்க்கத்தை விட்டும் வழிகெடுத்து, நான் (அல்குர்ஆனில்) இறக்கி வைக்காதவற்றை கொண்டு அவர்களை ஷிர்க் எனும் இணைவைப்பில் ஆக்கிவிட தூண்டினான்”. என நபியவர்கள் எங்களுக்கு ஒரு குத்பா பிரசங்கம் செய்தார்கள் என இயாழ் (ரழி) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

எனவே, மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் ஷைத்தான் மனிதனை குப்ர், ஷிர்க் போன்ற விடயங்களில் வீழ்த்த எப்படியெல்லாம் பிரயத்தனம் செய்கின்றான். என்பதை தெளிவுபடுத்துகின்றன.

2. பாவங்களில் வீழ்த்திவிடுதல்

ஒரு மனிதனை குப்ர், ஷிர்க்கில் வீழ்த்தமுடியாவிட்டால், ஷைத்தான் சோர்வடையமாட்டான். அதைவிட குறைந்த விடயங்களான பாவங்களில் மூழ்கச் செய்து அவர்களை வழிகெடுப்பான். குடும்பங்கள், இயக்கங்கள், சபைக்களுக்கிடையில் பகைமையை உருவாக்கி பிரிவினையை, குழப்பங்களை ஏற்படுத்த முயல்வான்.

சகல விதமான கெடுதிகளைக் கொண்டும் ஏவிக் கொண்டிருப்பான். இதைப் பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில்,

”إنما يـــأمركم بالســـوء والفحشـــاء وأن تقولـــوا علـــى الله مـــالا تعلمـــون“ (البقـــرة:169)

நிச்சமாக ஷைத்தான் உங்களை மானக்கேடான விடயங்களைக் கொண்டும், கெடுதிகளைக் கொண்டும் ஏவிக் கொண்டே இருப்பான். (02:169)

மேலும் அல்லாஹ்

"إنما يريد الشيطان أن يوقع بينكم العداوة والبغضاء في الخمر والميسر ويصدكم عن ذكر الله وعن الصلاة فهل انتم منتهون"

மது, சூதாட்டம், மூலம் உங்களுக்கிடையே, பகைமையையும் வெறுப்பையும் ஏற்படுத்தவும், அல்லாஹ் வின்நினைவைவிட்டும், உங்களைத் தடுக்கவுமே ஷைத்தான் விரும்புகிறான், எனவே விலகிக்கொள்ள மாட்டீர்களா? (05:91)

எந்தெந்த இபாதத் அல்லாஹ்வுக்கு விருப்பமானதாக இருக்கிறதோ, அவை அனைத்தும் ஷைத்தானுக்கு வெறுப்பானதாகவும், எந்தெந் தபாவங்கள் ரஹ்மானுக்கு வெறுப்பானதாக இருக்கின்றதோ அவை அனைத்தும் ஷைத்தானுக்கு விருப்பமானதாகவும் இருக்கும்.

3. மனிதர்களை நல்லமல்கள் செய்வவைவிட்டும்தடை செய்தல்

ஷைத்தான் மனிதர்களை ஷிர்க், குப்ரின்பால் அழைப்பதுடன் மாத்திரம் நிறுத்திக் கொள்ளாமல் அவர்களை அமல்கள் செய்வதை விட்டும் தடைசெய்வான்.

ஒரு அடியான் நல்வழியில் சென்றுகொண்டிருந்தால் அவனைத் தடுப்பதற்கு எந்தெந்த வழிகளிலெல்லாம் வந்து கெடுக்க முடியுமோ, அந்த வழிகளையெல்லாம் பயன்டுத்தி அவனைத்தடுக்க முயற்சி செய்வான். நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

"மனிதன் செல்லும் சகல நல்வழிகளிலும் ஷைத்தான் வந்து தடையாக உட்கார்ந்து கொள்வான். (ஒரு காபிராக இருப்பவன்) இஸ்லாத்தைத் தழுவ முற்பட்டால் அதற்கு தடையாக வந்து

உட்கார்ந்து, உனது மார்க்கத்தையும் உனது பெற்றோர், மூதாதையர்களின் மார்க்கத்தையும் விட்டுவிட்டு நீ இஸ்லாத்தை தழுவப் போகிறாயா? என்று கூறுவான். அதையும் மீறி அந்த மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் அவனை ஹிஜ்ரத் செல்ல தடையாக வந்து உட்கார்ந்து தடைசெய்வான். (அஹ்மத், நஸாயீ)

உதாரணமாக நபியவர்களின் பெரிய தந்தை அபூதாலிபுக்கு நடந்தது போல,

இந்த ஹதீஸில் கூறப்பட்ட விடயங்கள், அல்குர்ஆனில் ஷைத்தானுடைய உரையாடலை அல்லாஹ் எடுத்துக் கூறியதற்கு ஒப்பாக உள்ளது.

فبمـــا أغويتـــني لأقعـــدن لهـــم صـــراطك المستــــــقيم الـــخ "....

“யாஅல்லாஹ்! நீ என்னை வழிகெடுத்து கேவலப்படுத்தியதன் காரணமாக (மனிதர்களாகிய) அவர்கள் செல்லும், உனது நேரான பாதையில் நான்வந்து உட்கார்ந்து கொள்வேன். (அதற்கு முடியாவிட்டால்) அவர்களுக்கு முன்னாலும் (அதுவும் முடியாவிட்டால்) அவர்களுக்கு பின்னாலும் (அதுவும் முடியாவிட்டால்) அவர்களது வலது, இடது பக்கங்களிலும் வந்து உட்கார்ந்து கொள்வேன். அவர்களில் பெரும்பான்மையானவர்களை நன்றியுடையவர்களாக நீ கண்டுகொள்ள மாட்டாய். (07:16,17)

எனவே, நன்மையான எந்தக்காரியத்தைச் செய்ய முற்படும் போதும், ஷைத்தான் அதற்கு தடையாக வந்து உட்கார்ந்து அதைச் செய்யவிடாமல் தடுப்பான், அதைவிட மிக முக்கியமான ஒரு வேலை இருப்பதாக நினைவுபடுத்தி, அந்த நன்மையான காரியத்தை செய்யவிடாமல் தடுப்பான், அல்லது மறக்கடிக்கச் செய்து விடுவான். உதாரணமாக பர்ளான தொழுகையை உரிய நேரத்தில் தொழ விடாமல் தாமதப்படுத்துதல்

4. வணக்கவழிபாடுகளை பாழாக்குதல்

ஒரு மனிதன் வணக்கவழிபாடுகள் செய்வதற்கு ஷைத்தான் தடை யாக இருந்தும், அம்மனிதன் அதனை மீறி செய்ய முற்பட்டால், அந்த வணக்கங்களை குழப்பி பாழாக்கும் செயற்பாடுகளில் ஷைத்தான் ஈடுபடுவான். அதற்கு உதாரணமாக பின்வரும் சம்ப வத்தைக் கூறலாம்.

ஒரு நபித்தோழர் நபியவர்களிடம் வந்து "நான் தொழுது கொண்டிருக்கும் போது, ஷைத்தான் எனது தொழுகைக்கும் , ஓதல்களுக்கும் இடையில் தடையாக இருந்து எனக்கு குழப்பத்தை ஏற்படுத்துகின்றான்." (நாயகமே) எனக் கூறியபோது அதற்கு நபியவர்கள் "அவன்தான் (கின்ஸப்) எனக் கூறப்படும் ஷைத்தான், தொழுகையில் அவ்வாறான ஒருநிலைமை உமக்குஏற்பட்டால் நீ அல்லாஹ்வைக் கொண்டு பாதுகாப்பு தேடிக்கொள்." என்று கூறினார்கள். நான் அவ்வாறே செய்தேன். அந்த (வஸ்வாஸ்) நிலையை அல்லாஹ் என்னை விட்டும் போக்கிவிட்டான். என அந்த நபித்தோழர் கூறினார்கள். (முஸ்லிம்)

பாதுகாப்பு தேடும் முறை : அஊது பில்லாஹிஸ்ஸமீயில் அலீம், மினஷ் ஷைத்தானிர் ரஜீம், மின் ஹமஸிஹி, வநப்கிஹி, வநபதிஹி.

ஒரு மனிதன் தொழ முற்பட்டால் ஷைத்தான் அவனிடத்தில் விரைந்து சென்று தொழவிடாமல் வேறு ஏதாவது வேலைகளை நினைவு படுத்தி அவனை தொழுகையை விட்டும் பராக்காக்க முயல்வான். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். "தொழுகைக்கான அழைப்பான பாங்கு சப்தத்தை ஷைத்தான் கேட்டால் அவனது பின் துவாரத்திலிருந்து கெட்ட காற்று வெளியாகும் நிலையில், அந்த பாங்கு சப்தம் கேட்காத அளவு தூரத்திற்கு ஓடிவிடுகிறான். பாங்கு சப்தம் முடிவடைந்தால் மீண்டும் (அந்த மனிதனிடம்)வந்து பல்வேறு ஊசலாட்டங்களை ஏற்படுத்துகிறான். மீண்டும் தொழுகைக்காக இகாமத் கூறப்பட்டால் அந்தசப்தம் கேட்காத இடத்தில் சென்றுவிடுகின்றான். இகாமத் முடிவடைந் தால் மீண்டும் வந்து (அம் மனிதனுக்கு) உள்ளத்தில்பல ஊசலாட்டங்களை ஏற்படுத்துகிறான். (முஸ்லிம்)

மற்றுமொருஅறிவிப்பில்: "இகாமத் முடிவடைந்தால் (அம்மனிதனிடம்) மீண்டும் வந்து அவனதுஉள்ளத்தில் பல்வேறு சிந்தனைகளையும், எண்ணங்களையும், உருவாக்கி (அடே) அதை நினைத்துப்பார். இதை நினைத்துப்பார் என அவன் தொழுகைக்கு வருவதற்கு முன் ஏற்படாத எண்ணங்களை உருவாக்கி (இறுதியில்) எத்தனை ரகஅத்துகள் தொழுதோம் என தெரியாமல் தடுமாறக் கூடிய நிலைக்கு அம்மனிதனை ஆளாக்கிவிடுவான்." என நபியவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

எனவே, ஷைத்தான் சந்தர்ப்பத்திற்கும், காலத்திற்கும் பொருத்தமான அனைத்து விதமானகெடுதிகளையும் மனிதனுக்கு ஏவிக்கொண்டே யிருப்பான். அதனைத் தொடர்ச்சியாக ஆசையூட்டி உச்சாகப் படுத்திக் கொண்டே இருப்பான்.

மேலும் அனைத்து விதமான நலவுகளைவிட்டும், அந்தந்த சந்தர்ப்பத்திற்குஏற்ப தடுத்துக்கொண்டும், பயமுறுத்திக் கொண்டும் இருப்பான். உதாரணமாக "நீ ஸதகா செய்தால் உனது செல்வம் குறைந்துவிடும்", எனப் பயமுறுத்திக் கொண்டிருப்பான்.

5. மனிதனை உட, உள ரீதியாக நோவினை செய்தல்

மனிதனை ஷைத்தான் உளரீதியாக கெடுத்து பயமுள்ளவனாக, தைரியமற்றவனாக ஆக்கி நோவினை செய்தல் அல்லது மனிதனை நேரடியாக தாக்கமுறப்படுதல்.

நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது ஷைத்தான் ஒரு தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டுவந்து, அவர்களின் முகத்தில் வீச முற்பட்ட போது, நபியவர்கள் அவனது கையைப்பிடித்த சம்பவம் முன்னால் கூறப்பட்டுள்ளது.

6. ஷைத்தானிய கனவுகள்

ஒரு மனிதனின் கனவில் தோன்றி அவனைத் திடுக்கிடச் செய்யக் கூடிய, அல்லது அவனை கவலையில் ஆழ்த்தக்கூடிய பல கனவுகளை உருவாக்க ஷைத்தானுக்கு அல்லாஹ் சக்தியைக் கொடுத்துள்ளான்.

“ஒரு மனிதன் காணும் கனவுகள் மூன்று வகை

1. *இறைவனால் ஏற்படக்கூடிய நல்ல கனவு.*

2. *ஷைத்தானினால் ஏற்படக்கூடிய கவலையளிக்கக்கூடிய கனவு.*

3. *உள்ளத்தில் உதயமாகும் பழைய நிகழ்வுகளின் பிரதிவிம்பம்.*

என நபியவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் அல்ஜாமிஃ 3/,185)

மேலும், “உங்களில் ஒருவர் அவரை மகிழ்ச்சிப் படுத்தக்கூடிய கனவு ஒன்றைக்கண்டால் அது அல்லாஹ்விடம் இருந்து உருவான கனவு, அதற்காகஅவர் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொள்ளட்டும், அதை (மற்றவர்களுக்கும்) எடுத்துச் கூறட்டும், அதற்கு மாற்ற மாக வெறுக்கத்தக்க கனவு கண்டால் அது ஷைத்தானின் ஏற்பட்டால், நிகழ்ந்த கனவு (அதன் தீங்கை விட்டும்) அவன் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளட்டும், அதனை வேறுஎவரிடத்திலும் கூற வேண்டாம். அவ்வாறு நடந்து கொண்டால் அது அவனுக்கு எந்த தீங்கையையும் ஏற்படுத்தாது.” என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி)

7. நெருப்பின் மூலம் வீடுகளை எரித்தல்

சில பிராணிகளைப் பயன்படுத்தி வீடுகளை எரிக்க, ஷைத்தான் முயல்வான்: எனவேதான் நபியவர்கள் கூறியுள்ளார்கள். “நீங்கள் இரவில் தூங்குவதற்கு ஆயத்தமானால் உங்களது விளக்குகளை அணைத்து விடுங்கள் ஏனெனில் ஷைத்தான் இதுபோன்ற (எலிகளுக்கு) இந்த விளக்குகளைக் காட்டிவிடுவான். அதன் மூலம் உங்களை அவன் எரித்து விடலாம்.” (அபூதாவூத், இப்னுஹிப்பான்)

8. மரணத்தருவாயில் மனிதனின் நாவைத் தடுமாறச்செய்தல்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பின்வரக்கூடிய விடயங் களைவிட்டும் பாதுகாவல் தேடக்கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

اللهم إني أعوذ بك من التردي والهدم والغــرق والحــرق و أعــوذ بــك أن يتخبطني الشيطان عنــد المــوت وأعــوذ بــك أن أمــوت فــي ســبيلك مدبرا. وأعوذ بك من المـــوت لـــديغا

(رواه النســائي والحـــاكم صـــحيح الجـــامع :405\1)

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினத்தரத்தீ, வல்ஹத்மி, வல்கர்கி, வல்ஹர்கி, வஅஊதுபிக மின்அய்யதகப் பதனியஷ் ஷைத்தானு இன்தல்மௌத், வஅஊதுபிக அன்அமூத பீசபீலிக முத்பிறன், வஅஊதுபிக மினல்மௌதி லதீஹா,

உயரத்திலிருந்து கீழே விழுந்து மரணிப்பதைவிட்டும், இடிபாடு களினால் மரணிப்பதை விட்டும், நீரில் மூழ்கி மரணிப்பதை விட்டும், தீயில் எரிந்து மரணிப்பதை விட்டும்,உன்னிடம் பாது காவல் தேடுகிறேன்.

மேலும் மரண நேரத்தில் (கலிமாவை மொழிவதைவிட்டும்) ஷைத்தான் எனது நாவை தடுமாறச் செய்வதைவிட்டும், உனது பாதையில் புறமுதுகுகாட்டிஓடி மரணிப்பதைவிட்டும், விஷஜன்துக் களால் தீண்டப்பட்டுமரணிப்பதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். (நஸாயீ, ஹாகிம்,ஸஹீஹுல் ஜாமி : 1/405)

9. ஒரு குழந்தை பிறக்கும் போதுஅழவைத்தல்

“மர்யமையும், அவரதுமகனையும்தவிர உலகில்பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும், ஷைத்தான் தீண்டுகிறான்.” என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்) “மர்யம் (அலை) அவர்களையும், அவருடைய மகன் (ஈஸா) அவர்களையும், தவிர உலகில் பிறக்கும் எந்த குழந்தையையும், அதுபிறக்கும் போது ஷைத்தான் தீண்டாமல் விடுவதில்லை. அந்தஷைத்தானின் தீண்டுதலால் அக்குழந்தை சப்தமிட்டு அழுகிறது.” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மர்யம் (அலை) அவர்களையும் அவரது மகன்ஈஸா (அலை) அவர்களையும் ஷைத்தான் தீண்டாமல் பாதுகாப்பு கிடைப்பதற் கான காரணம், மர்யம் (அலை) அவர்களின்தாயின் பிரார்த்தனையை அல்லாஹ் அங்கீகரித்ததன் காரணமாகத்தான் அதாவது:

(யாஅல்லாஹ்!) மர்யமையும், அவரது சந்ததியினரையும் சபிக் கப்பட்ட ஷைத்தானை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். (03:36)

03

ஷைத்தானும் ஈகோவும் (Ego)

ஈகோ என்றால் தற்பெருமை, தலைக்கனம், உயர்வுமனப்பான்மை, பணிவின்மை, சுயநலம் ஆகிய தீயகுணங்களை ஆங்கிலத்தில் ஈகோ என்று கூறப்படும். சிறியவர் முதல் பெரியவர் வரை யாரையும் விட்டு வைக்காத பண்புதான் இந்த ஈகோ!. ஈகோ வந்துவிட்டால் ஒருவரிடம் இந்த பண்புகளை வெளிப்படையாக காணமுடியும். எனவே மலக்குகளுடன் இணைந்து நீண்ட காலம் வணக்கத்தில் ஈடுபட்ட ஷைத்தான் முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள் விடயத்தில்,

அவர்கள் றூஹ் ஊதப்படுமுன்னரேயே, ஏற்பட்ட அகம்பாவமும் உயர்வு மனப்பான்மையும், பொறாமையும் மனதில் குடி கொண்டிருந்த நிலையில், அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களுக்கு றூஹை ஊதி அனைத்துப் பொருள்களின் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். அதன் பின் அந்த பொருள்களின் பெயர்களை கூறுமாறு மலக்கு களிடம் அல்லாஹ் வினவிய போது, அவர்கள் கூறமுடியாமல் திகைத்தனர்.

"யாஅல்லாஹ் நீஙங்களுக்கு கற்றுத்தந்ததைத் தவிர வேறுஎதுவும் எமக்குதெரியாது" என்று தமதுபலவீனத்தை வெளிப்படுத்தியபின், அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களை அழைத்து "நீர் அந்த பொருட்களின் பெயர்களைக் கூறு," என்று கட்டளையிட்டதும் ஆதம் (அலை) அவர்கள் அந்தபொருட்களின் பெயர்களை ஒழுங்காக கூறினார்கள். (இதன் விபரம் சூரதுல் பகரா : (31,32,33 வசனங்களை பார்க்கவும்)

அதன் பின் "ஆதமுக்கு சிரம்பணியுங்கள் என்று நாம் வானவர் களுக்கு கூறி போது இப்லீஸை தவிர அனைவரும் சிரம்பணிந்தனர். அவனோ மறுத்துபெருமையடித்தான் நம்மை மறுப்பவனாக மாறிவிட்டான்." என்று அல்லாஹ் கூறினான். (02:34)

இந்த வசனத்திலும் இது போன்ற ஏனைய வசனங்களிலும் மலக் குமார்கள் அல்லாஹ்வின் கட்டளையை மதித்து மரியாதை நிமித்தம் சிரம்பணிந்த போது அந்த மலக்குமார்களுடன் இருந்த ஜின் இனத்தை சேர்ந்த ஷைத்தான் மாத்திரம் மரியாதை நிமித்தம் சிரம்பணிய மறுத்தான். அவனுக்கு ஈகோ தலைக்கேறியது. அவன் கூறினான்.

" خلقـــتني من نـــار وخلقتـــه مـــن طيـــن

நீ என்னை நெருப்பினால்படைத்தாய், அந்த (ஆதத்தை) களி மண்ணினால் படைத்தாய்" (07:12)

أنا خير منـــه *"நான் அவரைவிட சிறந்தவன்" எனப் பெருமை யடித்து அகங்காரம் கொண்ட காரணத்தினால் தான், சிரம்பணிய மறுத்தான். சிரம்பணியுமாறு இடப்பட்ட கட்டளை யாரால் ஏவப்பட்டது? என்று சிந்திக்காமல் ஈகோ எனும் ஆணவம் அவனை வழிகெடுத்து விட்டது. அதனால் அவனைப் பார்த்து அல்லாஹ் கூறினான்:*

اذهب فإنك رجيـــم

"அடே நீ எனதுரஹ்மத்தை விட்டும் தூர விலகிச் செல்! நீ சபிக் கப்பட்டவன்" என்று அல்லாஹ் கூறினான். அப்போது ஷைத்தான் அல்லாஹ்விடம் கேட்டான்,

"யா அல்லாஹ்! என்னைவிட நீ சிறப்பித்த இந்த ஆதத்தை, கியாமத் நாள்வரை நான் உயிர் வாழ்வதற்கு நீ எனக்கு அவகாசம் தந்தால், சிலரைத் தவிர இவரது சந்ததிகளில் (பெரும்பான்மையினரை) வழி கெடுத்துவிடுவன்." எனவும் கூறினான்.

"நீ போ! அவர்களில் யாரெல்லாம் உன்னைப் பின்பற்றினார் களோ அவர்களுக்கும் உனக்கும் நரகமே கூலி, அது நிறைவான கூலி" என்று (இறைவன்)கூறினான்.

“உனது குரல் மூலம் அவர்களில் உனக்கு முடியுமானவர்களை வழிகெடுத்துக் கொள். உனது குதிரைப் படையையும், காலாட் படையையும் அவர்களுக்கு எதிராக ஏவிக்கொள்! மேலும் அவர்களது செல்வத்திலும் பிள்ளைக்குட்டிகளிலும் நீ பங்காளியாக ஆகிவிடு, மேலும் அவர்களுக்கு வாக்குறுதியும் அளித்துக் கொள்!” என்றும் இறைவன் கூறினான். ஏமாற்றத்தைத் தவிர வேறு எதையும் ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை.

“எனது அடியார்கள் மீது, உனக்கு எந்த அதிகாரமும் இல்லை. (என்றும் இறைவன் கூறினான்) உமது இறைவன் பொறுப்பேற்கப் போதுமானவன்.” (17:61-65)

மேலும் மற்றமொரு வசனத்தில், சுவர்க்கத்தை விட்டும் அவன் விரட்டப்பட்டபோது அவன் அல்லாஹ்விடம் அவகாசம் கேட்டான்.

“قال فانظرني إلـــى يـــوم يبعثـــون قـــال انـــك مـــن المنظـــرين”

“(யா அல்லாஹ்)அவர்கள் மீள எழுப்பப்படும் நாள் வரை (நான் உயிர் வாழ்வதற்கு) எனக்கு அவகாசம் தா!எனக்கேட்டான். (சரி) நீ அவகாசம் அளிக்கப்பட்டவனாவாய்” என (இறைவன்) கூறினான். (07:14)

“நீ என்னை வழிகெட்டவனாய் ஆக்கியதன் காரணமாக (ஆதமுடைய சந்ததிகள்) உன்னுடைய நேரான வழியில் (செல்லாது தடை செய்து வழி மறிந்து அதில்) உட்கார்ந்து கொள்வேன்” என்றும் கூறினான்.

பின்னர் அவர்களின், முன்னும், பின்னும், வலமும், இடமும் அவர்களிடம் நான்வந்து (அவர்களை வழிகெடுத்துக் கொண்டேயிருப்பேன்) அவர்களில் அதிகாமானோரை நன்றி செலுத்துவோராக நீ காணமாட்டாய்.” (என்றும் கூறினான்)

“இங்கிருந்து இழிவுபடுத்தப்பட்டவனாவும், விரட்டப்பட்டவனாகவும் வெளியேறிவிடு, (மனிதர்களாகிய) அவர்களிலும், (ஜின்களிலும்) உங்களிலும் உன்னைப் பின்பற்றுவோர் அனைவரையும் சேர்த்து நரகத்தை நிரப்புவேன்.” (என்று அல்லாஹ் கூறினான்)

மேற்படி அல்குர்ஆன் வசனங்கள் அனைத்தும், ஷைத்தான் ஆதம் (அலை) அவர்களுக்கு சிரம்பணியமறுத்ததன் விளைவாக அல்லாஹ் வினால் அவமானப்படுத்தப்பட்டு, சபிக்கப்பட்டு, விரட்டப்பட்ட காரணத்தினால் ஆதம் (அலை) அவர்களையும் அவர்களுடைய சந்ததியினரில் பெரும்பான்மையினரையும் வழிகெடுத்து நரகத்துக் குரியவர்களாக ஆக்குவேன். என்ற சபதத்தின் அடிப்படையில் மனித சமுதாயத்தை வழிகெடுக்க எத்தனையோ பிரயத்தனங்களை செய்து, வழிகெடுப்பதற்கான தந்திர உபாயங்களை எடுத்துக் கூறியதை அல்லாஹ் மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனங்களின் மூலம் எமக்குதெளிவுபடுத்தி கூறியுள்ளான்.

ஒரு மனிதனை வழிகெடுக்க முடியுமான அனைத்துவழிகளிலும் வருவான். அவனுக்கு முன்னாலும், பின்னாலும்,வலதாலும், இடதாலும் என எல்லாவிதமான வழிகளையும் பயன்படுத்தி வழி கெடுக்க பிரயத்தனம் செய்வான் என்பதை இங்கே தெளிவுபடுத்தியுள்ளான்.

அத்துடன் அவனது ஓசையின் மூலமும், குதிரைப்படை, காலாட படை போன்ற எத்தனையோ உபாயங்களைக் கையாண்டு மனிதனை வழிகெடுக்க முயற்சிக்கின்றான். என்பதையும் அல்லாஹ் தெளிவு படுத்தியுள்ளான்.

ஷைத்தானைப் பற்றி அல்லாஹ்வின் முன் எச்சரிக்கை

“ஷைத்தான் உங்களை வழிகெடுப்பான் என்று பல இடங்களில் அல்லாஹுதஆலா முன்னெச்சரிக்கை செய்துள்ளான். “நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோதி, அவனை விரோதியாகவே எடுத்துக்கொள்ளுங்கள்.” (35:06)

“ஆதமின் மக்களே! உங்கள் பெற்றோர் இருவரையும் ஷைத்தான் சுவனத்தில் இருந்து வெளியேற்றியது போன்று, உங்களையும் அவன் குழப்பிட வேண்டாம். அவர்களின் வெட்கஸ்தலங்களை அவன் அவர்களுக்கு காட்ட, ஆடைகளை அவர்களை விட்டும் கழற்றினான். நீங்கள் அவர்களை காணாத வகையில் அவனும்,

அவனது கூட்டத்தாரும் உங்களை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நம்பிக்கை கொள்ளாதோருக்கு ஷைத்தான்களை உற்ற நண்பர் களாக நாம் ஆக்கிவிட்டோம்." (07: 27)

எனவே மனிதனுக்கு எதிரான ஷைத்தானின் பகைமையும், சதி முயற்சிகளும் தொடர்ச்சியாக, காலத்திற்கேற்றவாறு திட்டமிடப் பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஏனெனில் ஷைத்தான் சபிக்கப் பட்டதும், சுவர்க்கத்தைவிட்டு விரட்டப்பட்டதும் எமது தந்தை ஆதம் (அலை) அவர்களின் காரணமாகத்தான் என்பதை உணர்ந்த அவன்,ஆதம் (அலை) அவர்களையும், அவர்களது சந்ததிகளான எம்மையும் பழிவாங்குவதே அவனது இலட்சியம்.

எனவே, ஷைத்தானின் இலட்சியங்களையும், சதிவலைகளையும் அறிந்திருப்பது எம் அனைவர் மீதும் கட்டாயக்கடமையாகும்.

மனிதர்களும், ஈகோவும்

பொதுவாக உலகில் படைக்கப்பட்ட மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக படைக்கப்படவில்லை. பல்வேறு வித்தியாசமான தன்மைகள், குணங்கள், ஏற்றத்தாழ்வு போன்ற பண்புகளை வைத்து அல்லாஹ் படைத்துள்ளான். சில மனிதர்களை அறிவாளிகளாகவும், சிலரை அறிவு குறைந்தவர்களாகவும் சிலரை விளக்கசாலிகளாகவும், சிலரை விளக்கம் குறைந்தவர்களாகவும் படைத்துள்ளான்.

மேலும் சிலரை பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையிலுள்ளவர் களாகவும், மற்றும் சிலரை ஏழைகளாகவும் இன்னும் சிலரை நடுத்தரவகுப்பினராகவும் படைத்துள்ளான். இவ்வாறே குடும்ப அந்தஸ்து, பட்டம், பதவி, கௌரவம் என்ற பண்புகளால் சில மனிதர்கள் ஷைத்தானுடைய பண்பான ஈகோ, எனும் ஆணவம், அகம்பாவம், கர்வம், இறுமாப்பு போன்ற பண்புகளால் தன்னை விட குறைவான தரத்திலிருப்பவர்களை இழிவாககருதி, நான் உயர்ந்தவன் எனக்கூறி பெருமையடிக்கின்றனர்.

இதனால் ஷைத்தானின் குறிக்கோள் நிறைவேறுகின்றது. குடும் பத்தில்குழப்பம், அரசியல் ரீதியான குழப்பம், இயக்கங்களுக் கிடையே குழப்பம், பள்ளி நிர்வாகிகளுக்கிடையில் முரண்பாடு, கணவன் மனைவிகளுக்கிடையில் குழப்பம், மாமியார் மருமகளுக் கிடையில் குழப்பம், திருமண சம்மந்தங்களுக்கிடையில் விட்டுக் கொடுப்பின்மை இவையெல்லாம் யாரால் ஏற்படுகின்றன?

ஈகோ உள்ளவர் நமக்கு நன்கு அறிமுகமானவர் என்றாலும், கண்டும்காணாது போலவே இருப்பர். அதிகம் பேசமாட்டார். தம் இனத்தோடு மட்டும் பழகுவார், தம்மை நாடியே மற்றவர்கள் வரவேண்டும் என்பதையே அதிகம் விரும்புவர். மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும். புகழவேண்டும், என்பதில் அதீத ஆசை கொள்வர், வறியவர்கள் தம் அருகில் வருவதைக் கூட இழிவாக கருதுவர்.

தம்மை விட குறைந்த படிப்பு, பதவி, அந்தஸ்து,உள்ளவர்களிடம் அதிகம் பேசமாட்டார்கள். தவறுசெய்தால் மன்னிப்பு கேட்க மாட்டார்கள். ஈகோ என்ற கொடிய நோய் இன்னார் என்று இல்லாமல் யாருக்கும் வரலாம். நம் உறவினர்களுக்கும் வரலாம், நம் வாழ்க் கைத் துணைகளுக்கும் வரலாம், திருமண சம்மந்தர்களுக் கிடையிலும் வரலாம், ஒருவரின் அறிவுக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு ஈகோவின் மோதல்கள் அமையும்.

ஈகோவினால் ஏற்படும் பாதிப்பு

கணவன், மனைவி இடையே ஈகோ தகராறு ஏற்பட்டு வாழ்க்கை விரிசலடைந்தால் அது பிள்ளைகளை பெரிதும் பாதிக்கின்றது. சொந்தபந்த உறவுகளுக்கிடையில் வந்த ஈகோ, திருமணம் போன்ற வைபவங்களின்போது தன்வினைகளை வெளிப்படுத்தும், ஒரு சிறு பிழையையும் பெரிதாக்கி தன்னை திருப்தியடைவதையே குடும்ப உறவுக்குள்வந்த ஈகோ விரும்பும்.

ஆனால் ஈகோ வந்தவருக்கு எதிராக இன்னொருவர் செயல் பட்டால் அதைஅவரால் தாங்கி கொள்ள முடியாது. அது அவரின்

ஈகோவை அதிகப்படுத்திவிடும். கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் ஈகோ, அவர்களை (தலாக்) விவாகரத்து வரை கொண்டு சென்றுவிடும். ஈகோ பிரச்சினையால் வாழ்க்கையை தொலைத்த பெண்கள் மிகமிக அதிகம். இந்த ஈகோ நோயால் அனாதரவாக் கப்பட்ட பெண்கள் பலர் உண்டு. அதிகமான குடும்ப உறவுக்கு ஈகோதான் வேட்டு வைக்கின்றது. உறவுகள் இயற்கையாக முறிவதில்லை. ஈகோவினால் சிதைக்கப்படுகின்றது. ஈகோதான் மனிதனின் மிகமோசமான எதிரியாகும்.

யாருடைய தலையில் ஷைத்தான் வந்து குடிகொண்டுவிட்டானோ அவரிடம் ஈகோ வந்துவிடும், ஈகோவின் அடித்தளம் ஷைத்தான்தான், அவன் முதலில் தூண்டுவது பெருமையடிப்பதை, ஈகோவின் துலக்கம் பெருமை, பெரும்பாலும் அதன்முடிவு மன நோய் அல்லது மன அழுத்தம்.

ஈகோ வருவதற்கு அடிப்படைக் காரணம்

ஈகோ வருவதற்கு முக்கிய காரணம் பெருமையாகும். ஈகோ வருவதற்கு முன்னால் உள்ளத்தில் பெருமைதான் முதலில் ஏற்படுகின்றது. பெருமையை தன்நடையில் கூடகாட்டிவிடுவான். அதனால் எம்மைப் படைத்த அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்.

”ولا تمش في الأرض مرحا ،انك لن تخرق الأرض ولن تبلغ الجبـــال طـــولا (17:37)

“நீர் பூமியில் பெருமையாக நடக்க வேண்டாம். (ஏனெனில்) நிச்சயமாக நீர் பூமியை பிளந்து விடமுடியாது. மலையின் உச்சி (யளவு)க்கு உயர்ந்து விடவும் முடியாது”. (17:37)

பெருமைவந்தவனுக்கு அவனுடைய பகட்டை உணர்த்துவதற்கு, அவனுடைய பெருமையை உடைத்து நொறுக்குவதற்கு மேற் கூறப்பட்ட ஒருவசனம் போதுமானது.

“ولا تصعر خــدك للنـــاس ولا تمـــش فـــي الأرض مرحـــا إن الله لا يحـــب كل مختال فخــــور”

“(பெருமையோடு) உன்முகத்தை, மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே!. பெருமைக் காரர், ஆணவங்கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான்.” (31:18)

நன்றாக தெரிந்து அறிமுகமான ஒருவரை கண்டும், காணாதது போல் இருப்பது, பெருமையாக நடப்பது, அல்லாஹ் வழங்கிய செல் வத்தில் பெருமையடித்து ஆணவம் கொள்வது போன்ற முழு ஈகோ வந்தவனின் பண்புகளை மேற்கூறப்பட்ட 31:37 வசனம் தெளிவுபடுத்துகின்றது.

“وإذا أنعمنا على الإنسان أعرض ونأى بجانبه وإذا مسه الشر كـــان يؤوســـا”

“நாம் மனிதனுக்கு அருட்கொடைகளை வழங்கினால் அவன் (நன்றி செலுத்தாமல்) புறக்கணித்துத்(தோளைஉயர்த்திப்) பெருமை கொள்கிறான். அவனை ஏதேனுமொரு தீங்கு பீடித்தால் அவன் நிராசை கொண்டவனாகி விடுகின்றான்.” (17:83)

உள்ளத்தில் பகட்டு வந்தவன், படைத்த இரட்சகனுக்கு நன்றி செலுத்த மாட்டான். மனிதர்களுக்கும் நன்றி செலுத்த மாட்டான். ஈகோ நிறைந்துள்ள ஒருவனுக்கு ஏதாவது ஒரு (முஸீபத்) தீங்கு ஏற்பட்டுவிட்டால் அல்லது அல்லாஹ் அவனுக்குவழங்கிய வாழ்க்கை வசதிகளுக்கு ஏதாவது ஒருஆபத்து ஏற்பட்டால் அதனை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது. அடுத்த நிமிடமே அவனை வைத்தி யசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் (ICU) கொண்டு சேர்க்க வேண்டி ஏற்படும். அந்த அளவுக்கு அவன் நிராசையாகிப்போவான்.

ஈகோவின்பாதிப்பு எதுவரை

இந்த ஈகோவின் பாதிப்பு இந்த உலகத்தோடு மட்டும்முடிவதில்லை. மறுமையில் சுவனம் செல்வதற்கும் அதுதடையாக அமைகிறது.

நபித்தோழர் அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊத் (ரழி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவித்துள்ளார்கள்.

"لا يدخل الجنة من كان فـــي قلبـــه مثقـــال حبـــة مـــن كـــبر"

"யாருடைய உள்ளத்தில்அணுவளவு தற்பெருமைஇருக்கிறதோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்". என்று கூறினார்கள். அப்பொழுது ஒரு மனிதர் தமது ஆடை அழகாக இருக்க வேண்டும், தமது காலணி அழகாக இருக்க வேண்டும் என ஒருவர் விரும்பு கிறார். (இதுவும் தற்பெருமையில் சேருமா? என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் "அல்லாஹ் அழகானவன் அழகையே அவன் விரும்புகின்றான். தற்பெருமை என்பது (ஆணவத்தோடு) உண்மையை மறுப்பதும், மக்களை கேவலமாக மதிப்பதும் தான்" என நபியவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்: 147)

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: "சுவர்க்கமும், நரகமும் இறைவனிடம் வாக்குவாதம் செய்தன. அப்போதுசுவர்க்கம் என் இறைவா! எனக் கென்ன ஆயிற்று? மக்களில் பலவீனர்களும், சாமானியர்களும் தானே என்னுள் நுழைகின்றார்கள் என்றுகேட்டது. நரகம் நான் தற்பெருமைக்காரர்களுக்கு மட்டுமே உரியவனாகிவிட்டேன். என்று முறையிட்டது. அப்போது அல்லாஹ் சுவர்க்கத்திடம் "நீ கருணை (யின் பரிசு) ஆவாய்." என்று சொன்னான்.

நரகத்திடம் "நீ நான்வழங்கும் வேதனை ஆவாய்." நான் விரும்பு கின்றவர்களை உன்மூலம் தண்டிக்கிறேன் என்று சொல்லிவிட்டு இரண்டையும் நோக்கி, "உங்கள் ஒவ்வொருவரையும் நிரப்புபவர்கள் மக்களிடையே உள்ளனர். என்று கூறினான் (புஹாரி 7449)

பெருமை என்றால் என்ன?, அந்தபண்பு உள்ளவர் யார்? ஏன் அவர் நரகம் செல்லுகிறார்? சுவனவாசிகள்யார்? அவர்கள் ஏன்சுவனம் செல்லுகின்றனர். அந்த பண்பு உள்ளவர்கள் யார்? என்பன போன்ற விளக்கத்தை மேற்கூறப்பட்ட நபிமொழி தெளிவுபடுத்தியுள்ளது.

ஈகோவின் பண்புகளை தவிர்ப்பது எப்படி?:

பட்டமும், பதவியும், செல்வச்செழிப்பும், சமூக அந்தஸ்தும், வசதியான வாழ்க்கையும் நிரந்தரமானது அல்ல, என்பதைமுதலில் உணர வேண்டும். பதவியோ, பொறுப்போ கிடைத்ததும் அதைவைத்து

அதிகப்படியான அதிகாரம் செலுத்துவதை விடவேண்டும். மற்ற மனிதர்களை மதிக்கவேண்டும், தவறுகள் சுட்டிக்காட்டப்படுகின்ற போது அதனை தயங்காமல் ஏற்றுக் கொள்ளவேண்டும். எவ்வளவு உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் சாதாரணவேலைகளை தயங் காமல் செய்ய வேண்டும். குடும்ப உறவுகளைவிட்டு பிரிந்து தனித்து வாழ்வதை விட்டு, அவர்களோடு ஒட்டியுறவாடி வாழ வேண்டும். நமக்குள்ள அறிவும், திறமையும், சக்தியும், பலமும் நாமாக உருவாக்கிக் கொண்டதல்ல. அது எமது இறைவன் தந்த அருட் கொடை என்பதை உணர்ந்தால் ஈகோ என்ற நோயிலிருந்து தன்னை காத்துக்கொள்ளலாம்.

ஈகோ ஒருவரிடம் ஏற்படுகின்றதென்றால் அவரிடம் ஷைத்தான் ஆதிக்கம் செலுத்துகின்றான் என்பதே அதன் அர்த்தமாகும். எதுவெல்லாம் நம்மிடம் இல்லையோ, எது நமக்கு கிடைக்க வில்லையோ, அதைப் பற்றி பேராசை கொண்டு துக்கப்படுவதையும், எதுவெல்லாம் நம்மிடம் இருக்கிறதோ அதைப் பற்றி அதிகம் மகிழ்ச்சி கொண்டு பெருமையடிப்பதையும் விட்டுவிட்டால் ஈகோ இல்லாத வாழ்வை சுவைத்துப் பார்க்கலாம்.

"لكيــلا تأســوا علـــى مـــا فـــاتكم ولا تفـــرحوا بمـــا آتـــاكم والله لا
يحب كل مختـــال فخـــور" (57:23)

"உங்களை விட்டும் தவறிப்போன ஒன்றின் மீது நீங்கள் துக்கப் படாமல் இருக்கவும், அவன் உங்களுக்கு கொடுத்தவற்றின் மீது நீங்கள் அதிகம் மகிழாதிருக்கவும், (இதனை உங்களுக்கு அல்லாஹ் அறிவிக்கின்றான்.) கர்வமுடையவர்கள், தற்பெருமை உடையவர்கள், எவரையும்அல்லாஹ் நேசிப்பதில்லை." (57:23)

ஈகோ இல்லாத வாழ்வு மிகவும் இலகுவான வாழ்க்கையாகும்.

"سيد القوم خـــادمهم" *"மக்களின் தலைவன், அவர்களுக்கு பணிவிடை செய்பவனே." எனும் நற்பண்பை நினைவில் வைத்துக்கொண்டு பணிவு, அடக்கம், பேணுதல் போன்ற நற்பண்புகளை கடைப்பிடித்து நடக்க எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் உதவி புரிவானாக!*

04

கொரோனா போன்ற தொற்றுநோய்கள் ஜின்களினால் பரவுதல்

இன்று உலகளாவிய ரீதியில் மக்களை ஆட்டிப்படைத்துக் கொண் டிருக்கும் கொரோனா வைரஸ் இந்தஅளவு அதிதீவிரமாக பரவி உலக வல்லரசுகளையே மண்டியிடவைத்துள்ளது. பல இலச்சங்களைத் தாண்டிய மரணங்கள், பல கோடியைத் தாண்டிய பாதிப்புக்கள், பலகோடிக்கணக்கான மக்கள் வீடுகளில் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்ட விளைவுகள் பசி, பட்டினியால் ஏற்படும் மரணங்கள். இவை அனைத்துக்கும் அல்லாஹ்வின் நாட்டத்திற்குப் பிறகு, ஜின்களின் சேட்டைகள் தான் காரணம். அவ்வாறே சென்ற நூற்றாண்டுகளில் கொலரா நோய் போன்ற நோய்கள் பரவியிருந்ததற்கும் ஜின்களின் தீண்டுதல்கள்தான் காரணம் என்றால் அதுமிகையாகாது.

“எனது சமூகத்தில் கொலைகள் மூலமும், (தாஊன்) கொலரா எனும் தொற்று நோய்கள் மூலமும், அதிக மரணங்கள் ஏற்படும் என நபியவர்கள் அறிவித்தபோது “அல்லாஹ்வின் தூதரே! கொலை யுத்தம் என்றால்என்ன? என்று எங்களுக்கு தெரியும். கொலரா என்றால் என்ன? எனவினவிய போது (தாஊன்) கொலரா நோய் உங்களது சகோதர இனமான ஜின்களில்தாக்கத்தினால் ஏற்படுகிறது. அந்த எல்லா நிலைகளிலும் ஷஹீதுடைய மரணம் (அந்தஸ்து) கிடைக்கும் என நபியவர்கள் தெளிவுபடுத்தினார்கள். (அஹ்மத், முஸ்னத் அத்தயாலிஸீ 536)

வேறு ஒருஅறிவிப்பில், உங்களது எதிரிகளான ஜின் இனத்தினால் கொள்ளை நோய்ஏற்படுகிறது” என நபியவர்கள் கூறியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஸஹீஹ் அல்ஜாமிஃ அல்பானி, 4231 ஹதீஸ்) மேற்கூறப்பட்ட ஹதீஸில் இரண்டு காரணங்களினால் இந்த சமூகத்தில் அதிக மரணம் ஏற்படும்:

முதலாவது யுத்தங்களினால் அதிகம்பேர் மரணித்தல்.

இரண்டாவது கொலாரா நோய்" என்று கூறியதற்கு ஹதீஸ் கலை அறிஞர்கள் விளக்கமளிக்கும் போது கொலாரா நோய் என்ற தொற்று நோய் கலீபா உமர் (ரழி) காலத்தில் ஏற்பட்டு முப்பதா யிரதுக்கும் மேற்பட்ட ஸஹாபாக்கள் மரணித்தார்கள். ஷஹீது களுடைய அந்தஸ்தையடைந்தார்கள். அதுபோலவே அதற்குப் பிறகு ஏற்படக் கூடிய அனைத்து விதமான தொற்று நோய்களும் இந்த ஹதீஸில் கூறப்பட்ட தாஊன் என்ற வார்த்தைக்குள் உள்ளடங்கும்.

எனக் கூறயிருப்பதன் மூலம் 2019/2020 ஆண்டுகளில் 215 நாடுகளில் ஏற்பட்ட இந்த கொரோனா வைரஸ் இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள அந்த தாஊன் என்ற வார்த்தைக்குள் உள்ளடக் கப்பட்டிருக்கிறது.

எனவே,இதனை இந்தளவு வேகமாகப் பரப்புவதற்கு காரணமாக இருந்தவர்கள் இந்த ஜின் இனம்தான் என்றால் அது மறுக்க முடியாதஉண்மையாகும்.

இஸ்லாத்தின் பார்வையில் தொற்றுநோய் உண்டா?

ஒரு இஸ்லாமியனின் பார்வையில் தொற்று நோய் உண்டா? இல்லையா? என்பதில் அறிஞர்கள் மத்தியில் பல கருத்து வேறு பாடுகள் நீண்ட காலமாக நிலவுகின்றன. அதற்கு காரணம் விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் தொற்றுநோய் இருக்கின்றது என்று நிரூபித் துள்ளர்கள்.

இஸ்லாத்தின் பார்வையில் தொற்று நோய் இல்லை என்று ஒரு சாராரும், தொற்று நோய் இருக்கின்றது. என மற்றொரு சாராரும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருவதைக் காண்கின்றோம். இதற்கு காரணம் நபி (ஸல்) அவர்கள் மூலம் கூறப்பட்ட ஹதீஸ் களில் அதன் வெளித்தோற்றத்தில் தொற்று நோய் கிடையாது என்று புரியக்கூடிய சில ஹதீஸ்களும் உள்ளன.

தொற்று நோய் இருக்கின்றது என்பதை உணர்த்தக்கூடிய சில ஹதீஸ்களும் உள்ளன.

எனவே, இரண்டு விதமான கருத்துக்களையும் இணைத்து விளங்கிக் கொள்ளாமல் ஒவ்வொரு சாராரும் தமது கருத்துக்கு ஆதாரமான ஹதீஸ்களை எடுத்து எதிராக வந்துள்ள ஹதீஸ்களை மறுப்பதன் காரணமாக குழப்ப நிலை உருவாகின்றது. ஒரு காலமும் இஸ்லாத்தில் கூறப்பட்ட ஆதார பூர்வமான ஹதீஸ்களின் விளக்கம், விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மைகளுக்கு முரண்பட வாய்ப்பில்லை.

எனவே, முதலில் தொற்று நோய்இல்லை என்றுகூறுபவர்கள் முன்வைக்கும் ஆதாரங்களைப் பார்ப்போம்.

عن أبـــي هـــريرة قـــال ان رســـول الله صـــلي الله عليـــه وســـلم قـــال: لا عدوى ولاصفر ولا هامـــة فقـــال أعـــرابي يـــا رســـول الله فمابـــال إبلـــي تكـــون فـــي الرمـــل كأنهـــا الظبـــاء فيـــأتي البعـــير الأجـــرب فيـــدخل بينهـــا فيجربهـــا فقـــال فمـــن أعـــدى الأول؟ (رواه البخـــاري)

தொற்று நோய் கிடையாது ஸபர் மாத பீடை கிடையாது ஆந்தையால் சகுனம் பார்ப்பதும் கிடையாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது கிராமவாசி ஒருவர் அல்லாஹ்வின் தூதுரே! மணலில் மான்களை போன்று (ஆரோக்கியத்துடன் துள்ளித்) திரியும் என் ஒட்டகங்களிடம் சொறி சிரங்குபிடித்த ஒட்டகம் வந்து அவற்றுக் கிடையே கலந்து அவற்றையும் சிரங்கு பிடித்தவையாக ஆக்கி விடுகின்றனவே, அவற்றின் நிலை என்ன? என்று கேட்டார், அதற்கு நபியவர்கள் அப்படியென்றால் முதல் ஒட்டகத்திற்கு (அந்த நோயைத்) தொற்றச் செய்தது யார்? என்று திரும்பிக் கேட்டார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) (புகாரி: 5717)

தொற்று நோய் கிடையாது என வாதிடுவோர் முன்வைக்கும் பிரதானமான ஆதாரம் இது தான். இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் பல விடயங்கள் இல்லை என நிராகரித்துள்ளார்கள். அவற்றில்

தொற்று நோய் இல்லை என்று கூறியது முதலாவது விடயம் எனவே, தொற்று நோய் இல்லை என வாதிடுகின்றனர்.

தொற்று நோய் இருக்கிறது என வாதிடுவோர் மேற்கூறப்பட்ட ஹதீஸுக்கு கூறும் விளக்கம் பின்வருமாறு:

மேற்கூறப்பட்ட ஹதீஸ் இஸ்லாமியஅடிப்படை அகீதா கொள்கையோடு தொடர்பான பல விடயங்களைத் தெளிவுபடுத்திய நபியவர்கள் தொற்று நோய் சம்பந்தமான விடயத்தில் இங்கே மறுத்துக் கூறிய விடயம் யாதெனில் அன்றைய காலத்தில் வாழ்ந்த ஜாஹிலியா கால மக்கள் மத்தியில் பரவியிருந்த ஒரு மூடநம்பிக்கை யாதெனில் : சில நோய்கள் ஒருவரிடத்திலிருந்து இன்னொருவருக்கு தானாகத் தொற்றும் என்றும் அதனுடன் அல்லாஹ்வின் நாட்டம் தொடர்பு படத் தேவையில்லை என்றும் நம்பியிருந்தனர். அந்த பிழையான நம்பிக்கையை நிராகரித்து அல்லாஹ்வின் கழா கத்ரின் அடிப் படையில் ஒருவரிடத்திலிருந்து இன்னொருவருக்கு தொற்றலாம் என்பதையும் தெளிவுபடுத்தி பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்:.

لا يودر ممرض على مصح "நோயான பிராணி உள்ளவன் அவனது பிராணிகளை சுகதேகியான பிராணி உள்ளவனிடம் கொண்டு செல்ல வேண்டாம் "என்றும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்.

மேலும் புகாரியில் தொற்றுநோய் சம்பந்தமாக வந்தஹதீஸில் ஒரு ஒட்டகத்திலிருந்து இன்னொரு ஒட்டகத்திற்கு சொறி தொற்றிக் கொள்வதை அனுபவபூர்வமாக உணர்ந்த ஒரு கிராமிய வாசி நபி (ஸல்) அவர்களிடம் கேள்வி எழுப்புகின்றார். அதற்கு நபிய வர்களின் பதில் இங்கு கவனிக்கத்தக்கதாகும். முதல் ஒட்ட கத்திற்கு அந்த நோயைத் கொடுத்தவன் யார்? என்ற வாதத்தை நபி (ஸல்) அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

இதன்மூலம் தொற்று நோய் இல்லை என்று நபி (ஸல்) அவர்கள் ஒரேயடியாக மறுக்காமல் தொற்று நோயை காரணம் காட்டி அல்லாஹ்வின் விதியை மறந்துவிடக்கூடாது என்பதை உணர்த்து கிறார்கள்.

ஒருவருக்கு தொற்றுநோய் ஏற்படுகின்றது என்றால் அது அல்லாஹ்வின் நாட்டப்படியே ஏற்படுகின்றது என்று நம்ப வேண்டும்.

ஒருவரிடத்திலிருந்து மற்றொருவருக்கு நோய் தொற்றும் என்பதை நபியவர்கள் மறுக்கவில்லை. தொற்றுவதால் மட்டுமே நோய் ஏற்படுகின்றது என்பதைதான் இங்கே மறுத்துள்ளார்கள்.

முதல் ஒட்டகத்திற்கு நோயைக் கொடுத்தவன் யார்? என்று கேள்வி எழுப்பியதன் மூலம் முதன்முதலில் ஒருவருக்கோ சிலருக்கோ அல்லாஹ் இந்த நோயை ஏற்படுத்துகின்றான், அதன் மூலம் மற்றும் சிலருக்கு அதனை பரவச் செய்கின்றான் என்றும் தெளிவு படுத்துகிறார்கள்.

மேலும் ஒரு ஹதீஸில் :

لا عدوى ولا طيرة ولا هامة ولا صفر وفر من المجـــذوم كمـــا تفـــر مـــن الأسد (أخرجه البخـــاري 5707)

“தொற்று நோய் கிடையாது பறவைகளைக் கொண்டு சகுனம் பார்ப்பது கூடாது. ஆந்தையால் சகுனம் கிடையாது, ஸபர் மாத பீடை கிடையாது என்று கூறிய நபியவர்கள் குஷ்டரோகியைக் கண்டால் சிங்கத்தைக் கண்டு விரண்டோடுவது போல் விரண்டோடு! எனக் கூறியிருக்கின்றார்கள். எனவே, இந்த ஹதீஸின் மூலம் தொற்று நோய் பரவக் காரணமாக இருக்கும் சேர்ந்திருத்தலை தவிர்த்து, தனிமைப்படுத்தலை வலியுறுத்திருப்பதையும் நாம் காண்கின்றோம்.

குறிப்பிட்ட ஒரு நோய் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. பின்னர் அந்த நோய் உலகில் அறவே இல்லாமல் போகின்றது. சில வருடங்கள் கழிந்து மீண்டும் ஏற்படுகின்றது. நோய்கள் இயற்கையாக ஏற்படுவதில்லை. மாறாக அல்லாஹ் நாடும் போது அதை ஏற்படுத்துகிறான், என்பதை இது உறுதிசெய்கின்றது.

மேலும் ஒரு வீட்டில் ஒருவருக்கு தொற்றுநோய் ஏற்படுகிறது, அந்த நோய் அந்த வீட்டில் வேறு யாருக்கும் தொற்றாமல், வேறு

ஒரு தெருவில் உள்ளவருக்கு தொற்றுவதைக் காண்கின்றோம். தொற்றுதல் என்பது அல்லாஹ்வின் நாட்டத்தைப் பொறுத்தது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இதைத்தான் மேற்கண்ட ஹதீஸ் உணர்த்துகின்றதே தவிர தொற்று நோய் அறவே கிடையாது என்று கூறவில்லை.

நோய் தொற்று உள்ள ஒருவருடன் கலந்திருப்பதன் மூலம், மற்றவருக்கு நோய் ஏற்பட்டால் உடனே அவர் அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தி அந்த விடயத்தைப் பேசாமல், இன்னாரோடு சேர்ந்திருந்த காரணத்தினால் நோய் தொற்றிவிட்டது. என்று நம்பி சில வேளை அவருடைய ஈமானைப் பாதிக்கக்கூடிய வார்த்தை களைப் பேசிவிடலாம்.

எனவே, தனிமைப்படுத்தல், சமூக இடைவெளியைப் பேணல் எனும் நடைமுறையை இன்று உலக சுகாதார மையம் வலியுறுத் துகின்றது. நோய்தொற்று ஒரு கிராமத்தில் ஏற்பட்டால் அக்கிரா மத்தவர்கள் அங்கிருந்து வெளியேறுவதோ, விரண்டோடுவதோ கூடாது. அந்த ஊருக்கு வெளிஊரைச் சேர்ந்தவர்கள் உள் நுழைவதும் கூடாது என சர்வதேசரீதியில் சட்டம் வகுத்து நடை முறைப்படுத்துகின்றார்கள்.

இந்த தனிமைப்படுத்தல், தற்பாதுகாப்பு ஏற்பாட்டு நடைமுறைக்கு அத்திவாரம் இன்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னாலேயே நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வழிகாட்டல்களில் அமைந்துள்ளது. அது பின்வருமாறு:

إذا سمعتم به بأرض فلا تقدموا عليه وإذا وقع بأرض وأنتم بها فلا تخرجوا فرارا منه (رواه البخاري)

ஒரு ஊரில் கொள்ளை நோய்பரவி இருப்பதாக நீங்கள் கேள்விப் பட்டால் அந்த ஊருக்கு நீங்களாகச் செல்லாதீர்கள்!, நீங்கள் ஒரு ஊரில் இருக்கும் போது அங்கு கொள்ளை நோய் ஏற்பட்டால், அதிலிருந்து விரண்டோடுவதற்காக (அங்கிருந்து) வெளியேறா தீர்கள். என்று நபி (ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டேன்

என அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி) அவர்கள் கூறினார்கள். (புஹாரி 5729)

கொள்ளை நோய் ஏற்பட்டுள்ள ஊருக்கு செல்ல வேண்டாம் என்றும் அந்த ஊரில் இருப்பவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டாம் என்றும் இந்த ஹதீஸ் கூறுகின்றது. தொற்று நோய் இல்லை என்றால் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கட்டளையிடத் தேவையில்லை. எனவே, தொற்றுநோய் உண்டு என்பதை இந்த ஹதீஸ் விளக்குகிறது.

வைரஸ்கள் மூலமாக நோய் தொற்றிக்கொள்வதையும் அதனை ஜின்கள் பரப்புகிறார்கள் என்பதையும் இஸ்லாம் மறுக்கவில்லை அதேசமயம் அல்லாஹ்வின் நாட்டப்படியே அந்தநோய் பரவுகிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

வேறு பல நோய்களும் ஜின்ஷைத்தான்களில் தீண்டுதலால் ஏற்படுதல்

நபி அய்யூப் (அலை) அவர்கள் பாரிய நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். அதற்கு காரணம் ஜின் ஷைத்தானின் பாதிப்பினால் தான் என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

“واذكر عبدنا أيوب إذ نادى ربه أنـــي مســـني الشــيطان بنصــب وعــذاب” (38:42)

“எமது அடியான் அய்யூபை நினைவூட்டுவீராக! “ஷைத்தான் வேதனையாலும், துன்புறுத்தலாலும் என்னை தூண்டிவிட்டான்.” என்று தமது இறைவனிடம் அவர் பிரார்த்தித்த போது (38:42) அவ்வாறே சில பெண்களுக்கு ஏற்படக்கூடிய தொடர் மாதவிடாய் இரத்தப்போக்கு பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது: “இது ஷைத்தானின் தீண்டுதலினால் ஏற்படும் ஒன்றாகும்.” எனக் கூறியுள்ளார்கள். (திர்மிதி, நஸாயி, அபூதாவூத் ஸஹீஹுல் ஜாமி : 3:196)

மனிதனின் உணவு, குடிபானம், தங்குமிடம் போன்றவற்றில் ஜின் ஷைத்தான் பங்கெடுத்தல்

ஷைத்தான்கள் மனிதர்களிடம் உணவு, குடிபானம், தங்குமிடம் போன்றவற்றில் உரிமையின்றி பங்கு எடுக்கிறார்கள்.மனிதன் அல்லாஹ்வின் திக்ரைவிட்டும் மறந்திருக்கும் போதும், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறுசெய்யும் போதும், ஷைத்தான் எல்லை மீறி மனிதனுடைய உரிமைகளில் பங்கு கொள்கின்றான்.

ஒரு முஸ்லிம் உண்ணும் போதும், பருகும் போதும் வீட்டில் நுளையும் போதும், அல்லாஹ்வின் திருநாமத்தை 'பிஸ்மில்லாஹ்வை' உச்சரித்து செயற்படும்போது, ஜின், ஷைத்தான்களின் அத்து மீறல்களிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது இதற்கு பின்வரும் சம்பவம் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

ஹுதைபா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்: "நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் விருந்துக்குச் சென்றால் உணவுத்தட்டில் நபி (ஸல்) அவர்கள் கையை வைத்து ஆரம்பிக்கும் வரை நாங்கள் கைவைக்கமாட்டோம். ஒரு நாள் நபியவர்களுடன் ஒரு இடத்திற்குச் சென்றிருந்தோம். அந்தவேளையில் ஒருபெண் குழந்தை விரைந்து வந்து ஸஹனில் கையை வைத்தாள், நபி (ஸல்) அவர்கள் அக் குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டார்கள். அதன்பின் ஒரு கிராம வாசி விரைந்துவந்து அந்தஉணவுத் தட்டில் தனதுகையை வைத்தார். அதனையும் நபியவர்கள் பிடித்துக் கொண்டார்கள்.

எந்த உணவில் பிஸ்மில்லாஹ் கூறி ஆரம்பிக்கப்படவில்லையோ, அந்த உணவில் ஷைத்தான் பங்கெடுக்கின்றான். இந்த உணவுத் தட்டில் பங்கு எடுப்பதற்காக ஷைத்தான் இந்த சிறுமியை தூண்டி விட்டு, பங்குகொள்ள முயற்சித்தான். அவளது கையை நான் இறுகப்பிடித்துக் கொண்டேன். அதன்பின் இந்த கிராமவாசியைத் தூண்டிவிட்டு, அந்த உணவில் பங்கெடுக்க முயற்சித்தான். அதனையும் நான் பிடித்துக்கொண்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக, அவனது கையையும் சேர்த்து, நான்பிடித்துக்கொண்டேன்., என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

எமது வீட்டிலுள்ள உணவுப் பொருள்களையும், பாத்திரங்களையும் ஷைத்தான்கள் களவாடுவதை விட்டும் எச்சில் படுத்துவதை விட்டும் பாதுகாப்பாக வைக்குமாறும் பிஸ்மில்லாஹ் சொல்லி மூடி வைக்குமாறும் இஸ்லாம் எமக்கு ஏவியுள்ளது.

ஒரு மனிதன் இடது கையால் சாப்பிட்டால் அல்லது குடித்தால், அல்லது நின்றுகொண்டு குடித்தால் ஷைத்தானும் அவனுடன் சேர்ந்து உண்ணுகிறான், பருகுகிறான்.

"எவர் தனதுஇடது கரத்தால் உண்ணுகிறானோ அல்லது பருகு கிறானோ அவனுடன் ஷைத்தானும் உண்ணுகிறான். பருகுகிறான். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத்)

ஒரு முறை ஒரு நபித்தோழர் நின்று கொண்டு நீர் அருந்துவதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் "நீ வாந்திஎடு, எனக்கூற, அவர் ஏன்? எனக்கேட்டார். நீ ! நீர் அருந்தும் போது உன்னுடன் ஒரு பூனையும் சேர்ந்து அருந்துவதை நீ விரும்புவாயா? என நபியவர்கள் கேட்க, இல்லை (அதை விரும்பமாட்டேன்) என அந்த ஸஹாபி கூறிய போது, அதைவிட மோசமான ஷைத்தான் உன்னுடன் பருகினான்.," என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

எனவே, நின்று கொண்டு ஏதாவது பானத்தை அருந்துபவருடன் ஷைத்தானும் கூடவே வாய்வைத்து அருந்துகின்றான். என்பதை மேற்கூறப்பட்ட ஹதீஸ் தெளிவு படுத்துகின்றது.

அவ்வாறே வீட்டை விட்டும் ஷைத்தானை விரட்டுவதற்கு, வீட்டில் நுழையும் போது அல்லாஹ்வின் திக்ரை (பிஸ்மில்லாஹ் வை) கூறினால் ஷைத்தான் விரண்டோடிவிடுகின்றான்.

ஒரு மனிதன் அவனது வீட்டில் நுழையும்போதும், உணவு உண்ணும் போதும் பிஸ்மில்லாஹ் எனக்கூறினால், இங்கே உங்களுக்கு உணவும் இல்லை, தங்குமிடமுமில்லை. என ஷைத்தான் அவனது நண்பர்களுக்கு கூறுவான்.

பிஸ்மில்லாஹ் எனக் கூறாமல் ஒருமனிதன் அவனது வீட்டில் நுழையும் போது உங்களுக்கு இங்கே தங்குமிடத்தைப் பெற்றுக் கொண்டீர்கள் என்றும், அவன் உணவு உட்கொள்ளும் போது பிஸ்மில்லாஹ் கூறாவிட்டால் இங்கே உங்களுக்கு தங்குமிடத் தையும், இரவு உணவையும் பெற்றுக் கொண்டீர்கள் எனவும் ஷைத்தான் கூறுவான்.

எனவே, ஒரு முஸ்லிம் தனது வீட்டிற்குள் நுழையும் போது பிஸ்மில்லாஹ் கூறி, வீட்டிலுள்ளவர்களுக்கு ஸலாம் கூறிக் கொண்டு, உள்நுழைய வேண்டும், வீட்டில் எவரும் இல்லா விட்டாலும், ஸலாம் கூறிக் கொண்டு நுழைவது சுன்னத்தாகும்.

05

சுத்ராவும் ஷைத்தானும்

சுத்ரா எனும் அரபுச்சொல்லுக்கு மறைப்பு, திரை என்பது பொருளாகும். இஸ்லாமிய ஷரீஆ கண்ணோட்டத்தில் "சுத்ரா" என்பது தொழுகையை நிலைநாட்ட நாடிய ஒருவர் தான், தொழுமிடத்திற்கு முன்னால் மூன்று முழ எல்லைக்கு அப்பால் ஆகக் குறைந்தது ஒரு முழம் அளவு உயரமான ஒரு பொருளை வைத்துக்கொள்வதாகும்.

சுத்ரா வைத்து தொழாதவரின் தொழுகையின் நிலைஎன்ன? என்பது பற்றி பெரும்பான்மையான முஸ்லிம்கள் அறியாத காரணத்தினால் தொழுகையின் முழுமையான நன்மைகளை அடைந்து கொள்ளத் தவறி விடுகின்றனர். சுத்ராவை வலியுறுத்தும் ஆதார பூர்வமான ஹதீஸ்கள் பின்வருமாறு:

1. *நபி (ஸல்)அவர்கள் சுத்ராவுக்கு சமீபமாக நின்றுதொழுவார்கள். நபியவர்களுக்கும், (முன்னுள்ள) சுவருக்குமிடையிலுள்ள தூரம் மூன்று முழமாக இருந்தது. (புஹாரி, முஸ்லிம்)*

2. *நீ சுத்ரா இன்றி தொழவே வேண்டாம்! (தொழுகையில்) உனக்கு முன்னால் எவரையும் நடக்க அனுமதிக்காதே. தடையைமீறி எவனாவது நடக்க முனைந்தால் அவனுடன் போராடு, ஏனெனில் அவனுடன் அவனது தோழன் (ஷைத்தான்) இருக்கின்றான். என்று இப்னு உமர் (ரழி) அவர்களைப் பார்த்து நபியவர்கள் கூறினார்கள். (இப்னு ஹுஸைமா)*

3. *நபி (ஸல்) அவர்கள் தொழும்போது பள்ளியில் உள்ள தூணை நெருங்கிச் சென்று தொழுதார்கள். (புஹாரி 502)*

4. நபி (ஸல்) அவர்கள் அரபாமைதானத்தில் தனது ஒட்டகத்தை படுக்க வைத்து அதனை சுத்ராவாக பயன்படுத்தி தொழுதார்கள். (அஹ்மத், இப்னு ஹுசைமா)

5. “தொழுது கொண்டிருக்கும் ஒருவருக்கு முன்னால் நடப்பது தொழுபவரின் தொழுகையின் அரைவாசி நன்மையைக் குறைத்து விடுகின்றது.” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸன்னப் அப்துர் ரஸ்ஸாக் பாகம்2 ப.25)

6. “தொழுது கொண்டிருக்கும் ஒருவருக்கு முன்னால் நடப்பது அவரது நன்மையிலிருந்து எந்தளவு குறைக்கப்படும் என்பதை ஒருவர் அறிவாராயின் அவர் சுத்ரா இல்லாமல் தொழ வேமாட்டார்”. என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸன்னப் அப்துர் ரஸ்ஸாக், அபூநுஅய்ம் பாகம்2 ப-584)

7. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், பர்ளு தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும் போது தனது கையை பொத்திக் கொண் டிருந்ததைக் கண்ட ஸஹாபாக்கள் - நபி (ஸல்) அவர்களிடம் காரணம் வினவிய போது, எனக்கு முன்னால் ஷைத்தான் குறுக்கிட முனைந்த போது அவனது கழுத்தை இறுக்கிப் பிடித்துக்கொண்டேன். அதனால் அவனது நாவின் ஈரம் எனது கையில் பட்டது என்றுகூறிய, நபி (ஸல்) அவர்கள் அந்த ஷைத்தான் உங்களுக்கு குறுக்கீடு செய்யாமல் இருப்பதற் காக கிப்லாப் பக்கமாக ஒரு மறைப்பை ஏற்படுத்த முடியுமானால் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அஹ்மத், தாரகுத்னி, புஹாரி, முஸ்லிம்)

மேற்கூறப்பட்ட ஹதீஸ்கள் சுத்ராவின் அவசியத்தை வலியுறுத்து கின்றன. ஒருமுறை பள்ளியிலுள்ள இருதூண்களுக்கிடையில் தொழுதுகொண்டிருந்த என்னைஉமர் (ரழி) அவர்கள்கண்டு, எனது பிடரியைப் பிடித்திழுத்து, சுத்ராவுக்கு நேராக நிறுத்தி, சுத்ராவை நோக்கித் தொழு! எனக் கட்டளையிட்டார்கள் என குர்ரா பின் இயாஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள், (நூல்: புகாரி)

நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் மக்ரிப் தொழுகை நேரம் பள்ளியில் தூண்கள் உள்ள இடங்களை நோக்கி விரைந்து ஓடுவார்கள் எனஅனஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (புகாரி)

இவை சில ஸஹாபாக்களின் முன்மாதிரிகள் இதுவரை சுத்ரா வைப்பதன்அவசியம் பற்றியும், சுத்ரா இல்லாமல் தொழுபவர்களின் நன்மைகளில் குறைவு ஏற்படும் என்பதையும் தெளிவாக விளங்கி யிருப்பீர்கள். இனி அந்த சுத்ராவின் அளவு பற்றி விபரத்தை அவதானியுங்கள்.

1. சுத்ராவில் ஆகக்குறைந்த அளவு உயரம் ஒருமுழமாகும்.

2. சுத்ராவுக்கும், தொழுபவருக்கு மிடையிலுள்ள தூரம் மூன்று முழம் இருக்க வேண்டும்.

3. சுத்ரா தொழுபவருக்கு சரி நேராகஇருக்க வேண்டும்.

4. தொழுது கொண்டிருக்கும் ஒருவருக்கு முன்னால் கோடிட்டிருப்பது சுத்ராவாக அமையாது.

நிலத்தில் கோடிடுவதன்மூலம் அதனை சுத்ராவாக எடுத்துக் கொள்வது சம்பந்தமாக வந்த ஹதீஸ் பலவீனமானதும், அதனை ஆதாரத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது என இமாம் ஷாபிஈ, இமாம் மாலிக், இமாம் நஸாயீ, தாரகுத்னி போன்ற பல அறிஞர்கள் கூறியுள்ளர்ர்கள். (பார்க்க: அக்தாஉல் முஸல்லீன் பக்கம் 85)

சுத்ராவை தனது வலது பக்கத்தில், அல்லது இடது பக்கத்தில் சற்றுதள்ளி வைத்துக் கொள்ளலாம்" எனக் கூறிய சிலஅறிஞர்கள் கருத்து ஆதாரமற்றதும், நபி வழிக்கு முரணானதுமாகும்.

(பார்க்க : அல்கௌலுல் முபீன் பீ அக்தாயில் முஸல்லீன் பக்கம் 83)

மேலும் தொழுது கொண்டிருக்கும் ஒருவரின் தொழுகையை பருவ வயதை அடைந்த ஒரு பெண், கழுதை, கறுப்பு நாய் போன்றவை குறுக்கிடுவதனால் அவருடைய தொழுகை முறிந்துவிடும் எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம், அபூதாவூத்)

ஐயமும் தெளிவும்

சுத்ராவை முன்வைத்து தொழும் போது - நாம் சுத்ராவை வணங் குகின்றோம் என்று பிற சமயத்தவர்கள் நினைத்துவிடுவார்களோ என்ற ஐயம் சிலருக்கு இருக்கின்றது. மனித யூகம் மார்க்கமாகாது. எந்த நபி (ஸல்) அவர்கள் சிலை வணக்கத்தை - ஷிர்க்கைக் கண்டித் தார்களோ, அதே நபி (ஸல்) அவர்கள்தான் சுத்ராவை வைத்துத் தொழுதிருக்கிறார்கள். அதனை வலியுறுத்தியுமுள்ளார்கள். எனவே, அல்லாஹ்வின் தூதருடைய தீர்ப்புக்கு மாற்றமாக அபிப்பிராயம் தெரிவிப்பவர்கள் பற்றி அல்லாஹ் அல்குர் ஆனில் பின்வருமாறு எச்சரிக்கை விடுக்கின்றான்.

"அல்லாஹ்வும், அவனது தூதரும் யாதொரு காரியத்தை முடி வெடுத்துவிட்டால் அவருடைய அக்காரியத்தில் சுயமாகவேறு அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும் எந்த பெண்ணுக்கும் உரிமையில்லை. அதில் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் எவர் மாறு செய்கிறாரோ அவர் பகிரங்கமான வழி கேடாக திட்டவட்டமாக வழிகெடுத்துவிட்டார்." (33:36)

ஜமாஅத்தாக தொழுகை நடைபெறும்போது மஃமூம்களுக்கு, இமாம் சுத்ராவாக இருப்பார். ஆனால் இமாம் சுத்ராவுக்கு பின்னால் நிற்க வேண்டும், மேலும் தனித்து தொழுபவர்கள் கிப்லாப் பக்கமாக உள்ள சுவரை, அல்லது தூணை அல்லது தொழுது கொண்டிருக்கும் ஒருவரை, அல்லது தொழுதுவிட்டு உட்கார்ந்து இருப்பவரை, அல்லது ஏதாவது ஒரு பொருளை மறைப்பாக வைத்துத் தொழவேண்டும்.

தொழுகையின் ஸப்புகளுக்கிடையில் ஷைத்தான்

தொழுகையில் நிற்கும்போது காலோடுகால், தோளோடு தோள் சேர்த்து நிற்றல்

“உங்களது ஸப்புகளை சீர்செய்து கொள்ளுங்கள். ஏனெனில் எனக்குப் பின்னால் நீங்கள் எவ்வாறு நிற்கின்றீர்கள், என்பதை நான் காண்கின்றேன்.” என நபியவர்கள் கூறிய போது எங்களில் ஒருவர் தனது கால்பாதத்தை அருகாமையில் நிற்பவரின் கால் பாதத்துடனும் ஒருவருடைய தோள் மற்றவருடைய தோளோடு இணைத்தவர்களாக நிற்போம் என நபித்தோழர்அனஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (புஹாரி 725)

மேற்கூறப்பட்ட ஹதீஸ் மூலம் நாம் இமாமைப் பின்பற்றி தொழும் போது எவ்வாறு நெருக்கமாக நிற்கவேண்டுமென்ற விடயம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அந்த நபிவழி இன்று அதிகமான பள்ளிவால்களில் கடைப்பிடிக்கப்படாமல் விடுபட்ட ஒரு விடயமாக மாறிவிட்டது.

மேற்கூறப்பட்ட ஹதீஸை மேலும் தெளிவு படுத்துவத்துவதாக பின்வரும் நுஃமான் பின் பஷீர் (ரழி) அவர்களின் ஹதீஸ் அமைந் துள்ளது. நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடாத்த நின்றபோது மனிதர்களை நோக்கி “அகீமுஸ்சுபூப்” ஸப்புகளை சீர் செய்து கொள்ளுங்கள், என மூன்றுமுறை கூறியபின் “அல்லாஹ்வின் மீது ஆணையாக உங்களது ஸப்புகளை சீர் செய்துகொள்ள வில்லையானால் உங்களது உள்ளங்களுக்கிடையில் அல்லாஹ் முரண்பாட்டை ஏற்படுத்துவான். என்று கூறியபோது ஒவ்வொரு மனிதரும் தத்தமது தோள்புயத்தை தனக்கு அருகில் நிற்ப வருடைய தோள்புயத்துடனும், தனது முழங்காலை மற்றவருடைய முழங்காலுடனும், தனது காலை மற்றவருடைய காலுடனும் இணைத்து நின்றதைக் கண்டேன். மேற்கூறப்பட்ட இரு ஹதீஸ் களையும், ஆய்வு செய்த ஹதீஸ்கலை அறிஞர்கள் பின்வரும் கருத்துக்களை கூறியுள்ளார்கள். “தொழுகையின் போது ஸப்புக் களில் நெருக்கமாக நிற்பது வாஜிப் என வலியுறுத்திக்கூறப்பட்ட

ஒருவிடயம்". அதைசெய்யவில்லையானால் உள்ளங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படும். என எச்சரிக்கப்பட்ட ஓர்விடயமாகும். சாதாரண சுன்னத்துக்களுக்கு நபியவர்கள் அவ்வாறு எச்சரிக்கை செய்ய வில்லை.

தொழுகையில் நபி (ஸல்) அவர்கள் எங்கள் தோள்களைதொட்டு நேராக நில்லுங்கள். முன்னும் பின்னும் மாறுபட்டு நிற்காதீர்கள். அதனால் உங்களது உள்ளங்கள் மாறுபட்டு விடும். என்னை அடுத்து அறிவில் சிறந்தவர் நிற்கட்டும். அதற்கடுத்து அவர்களுக்கு அடுத் தடுத்த நிலையிலுள்ளவர்கள் நிற்கட்டும். என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

ஸப்பை சீர்செய்வது என்பது மற்றவரின்: காலோடு கால் சேர்த்து, தோளோடு தோள் சேர்த்து நேராக நிற்பதையே சுட்டிக்காட்டுகின்றது. ஸஹாபாக்கள் அதனையே விளங்கிச்செய்தார்கள். வெளிரங்கம் சீர் பெற்றால் உள்ளமும் சீராகும். வெளிரங்கம் சீர்கெட்டால் உள்ளமும் சீர்கெட்டுவிடும். என்ற உளவியல் ரீதியான உண்மையை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

ஸப்பில் நெருக்கமாக நிற்கும் போது ஏழையின் தோளுடனும் காலுடனும், செல்வந்தனின் தோளும்காலும், ஒன்றுபட்டு இணைந் திருக்கிறது. இது அல்லாஹ்வின் முன் அனைவரும் சமமான வர்கள். என்ற உணர்வை ஏற்படுத்தி உள்ளங்கள் ஒற்றுமைப்பட வழி அமைத்துக்கொடுக்கிறது.

நெருக்கமாக நிற்கும்போது மற்ற சகோதரனுடன் மிருதுவாக நடந்துகொள்ள வேண்டுமென்று இஸ்லாம் வலியுறுத்துகின்றது. உங்களில் மிகச்சிறந்தவர் தொழுகையின்போது தோள்புயங்களை மிருதுவாக அமைத்துக்கொள்பவர்களே, எனவும் தனக்கு முன்னால் உள்ள ஸப்பில் ஓர் இடைவெளி தென்பட்டால் அதனை நிறப்பு வதற்காக நடந்து செல்லும் எட்டைவிட சிறந்த நற்கூலி கிடைக்கும் வேறு எந்த எட்டும் இல்லை", எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (தப்ரானி, தர்கீப், இப்னுஹிப்பான்)

“எவர்ஸப்பில் இடைவெளியைக் கண்டு அதனை பூரணப்படுத்து கின்றாரோ அவருக்கு அல்லாஹ் ஒரு அந்தஸ்தை உயர்த்தி, சுவர்க்கத்தில் ஒரு மாளிகையைக் கட்டிகொடுக்கின்றான்.” என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (தப்ரானி, தர்கீப்)

உங்களது ஸப்புகளை நேராகவும் நெருக்கமாகவும் நின்று கொள்ளுங்கள். உங்களது தோள்களை நேராக ஆக்கிக்கொள்ளுங்கள். ஏனெனில் எனது உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக ஸப்புகளுக்கிடையிலுள்ள இடைவெளியூடாக கறுத்த ஆட்டுக்குட்டி நுளைவதைப் போல் ஷைத்தான் நுளைவதைக் கண்டேன். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நாம் தொழும் போது இடைவெளிவிட்டு தொழுவோமேயானால் அதன்மூலம் ஷைத்தான் எமதுதொழுகையை கெடுப்பதற்குதளம் அமைத்துக்கொடுக்கின்றோம் என்பதில் சந்தேகம் இல்லை.

ஹஜ்ரத் உமர் (ரழி) அவர்கள் தொழுகைக்காக இகாமத் கூறப் பட்டால் ஸப்புகளை சீர்செய்ய சிலர்களை பொறுப்பாக்கி, ஸப்பு களை சீராக்குவார்கள். “ஸப்புகள் சீராகிவிட்டன” எனக் கூறப்படும் வரை, தக்பீர் கட்டி தொழுகை நடாத்தமாட்டார்கள். மேலும் கலீபா உஸ்மான் (ரழி), அலி (ரழி) அவர்கள் போன்றோர்களும் இவ்வாறே செய்பவர்களாக இருந்துள்ளார்கள். (திர்மிதி, முவத்தா, உம்மு)

இவ்வாறு ஸப்புகளை உரிய முறையில் சீராக்காத, தொழுகை நடாத்தும் இமாம்கள் பாவிகள் குற்றமிழைத்துவிட்டார்கள் என இமாம் இப்னு ஹஸ்ம் அறிவித்துள்ளார்கள். (அல்முஹல்லா, பாகம் : 04 பக் 114)

குறிப்பு : ஒருவருடைய கால் மற்றவருடைய காலில் பட்டுவிட்டால் அதைக் குற்றம் எனவும், மரியாதைக்குறைவு எனவும் கருதும் பழக்கம் எம்மிடத்தில் காணப்படுவதால்தான், நாம் தொழுகையில் நிற்கும்போது காலோடுகால் சேர்த்து நிற்பதற்கு தயங்குகின்றோம்.

அதனால் தொழுகையின் அணிவரிசைக்கிடையில் பாரிய இடைவெளியைக் காண்கின்றோம். அதனால் மிகமுக்கியமான சுன்னத்தை கைவிட்டு தவறுசெய்து கொண்டிருக்கின்றோம். அந்த தவறை இனிமேலும் தவிர்த்து கொள்வோமாக.

முக்கிய குறிப்பு

சமீபத்தில்ஏற்பட்ட கொரோனா வைரஸ் காரணமாக சப்புகளுக் கிடையில் இடைவெளிவிட்டு பள்ளிகளில் தொழுதோம்,இது நிற்பந்தமான சூழல் என்பதால் அதனைமார்க்கம் அனுமதித்துள்ளது.

எனவே, அன்பின் இஸ்லாமிய சகோதரர்களே! நபி வழியில் நமது தொழுகைகள் அமைய வேண்டுமென ஆசைப்படும் நாம் அன்னாரின் சுன்னாக்களை முழுமையாகப் பின்பற்றி ஸப்புகளை சீராகவும் நெருக்கமாகவும் (காலோடு கால், தோளோடு தோள் சேர்த்து) நின்றுதொழுது ஷைத்தானுக்கு இடமளிக்காமல் தொழுது, தொழு கையின் முழுமையான பயனை அடைய எல்லாம்வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் தவ்பீக் செய்வானாக.

06

போர்க்களத்தின் தலைவன்

மனிதனின் எதிரி ஷைத்தான், நாளாந்தம் ஷைத்தானுக்கும் மனிதனுக்கும் இடையில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டே யிருக்கிறது. அந்த போராட்டகளத்திற்கு தலைமை தாங்குபவன் இப்லீஸ், அவன்தான் மனித இனத்துடன் எவ்வாறு அதனை முன்னெடுத்துச் செல்வது எனத் திட்டமிட்டு வழிநடாத்திக் கொண் டிருக்கிறான். அவனது தலைமைப்பீடத்திலிருந்தே படைகளும் தூதுக்குழுக்களும், உலகில் நாற்திசைகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

அதன் பின்னர் அவன்அனுப்பிய படைகள் என்னென்ன செய்தார்கள் என விசாரணை நடைபெறுவதற்காக அவனது படைகளை ஒன்று திரட்டி கலந்தாலோசனை நடைபெறும், யார்யார் மனிதர்களை வழி கெடுப்பதிலும் குழப்புவதிலும் திறன்படச் செயல்பட்டார்களோ அவர்கள் பாராட்டுக்கும், புகழுக்கும் உரித்தாகுவார்கள்.

இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறும் போது, "ஷைத்தான் அவனது சிம்மானத்தை நீரின் மீது வைப்பான், பின்னர் அவனது படைகளை மனிதர்களிடம் அனுப்புவான். அதிக குழப்பங்களை ஏற்படுத்திய வர்தான் அவனிடத்தில் மிகவும் நெருக்கமானவன், விருப்பத்திற் குரியவன்."

அவர்களில் ஒருவன் கூறுவான்: நான் இன்னாரிடத்தில் சென்று அவனை இப்படி இப்படியெல்லாம் பேச வைத்து விட்டுவந்தேன். என்று கூறியதும் "அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீ ஒன்றும் (பெரிதாக) செய்யவில்லை" என்று இப்லீஸ் கூறுவான், மற்றுமொரு ஷைத்தான் வந்து "ஒரு மனிதனுக்கும், அவனது மனைவிக்கு

(இப்னு ஸாயித் என்பவன் அவன் தஜ்ஜாலாக இருப்பானோ என நபி (ஸல்) அவர்கள் சந்தேகப்பட்ட) அவனிடம் நபி (ஸல்) அவர்கள் " நீ எதைக் காண்கின்றீர்!" என வினவியபோது கடல் நீர்மீது ஒரு சிம்மாசனம் இருப்பதையும், அதனைச் சூழபாம்புகள் இருப்பதையும் காண்கின்றேன். எனஅவன் கூறியதும், அவன் உண்மையே கூறினான். அது தான் இப்லீஸுடையசிம்மாசனம் என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத்)

ஷைத்தான் மனித இனத்தை வழி கெடுப்பதில் மிகநீண்டகால அனுபவத்தை உடையவன், அதனால் அவனது செயற்திட்டங் களையும், சதிவலைகளையும் விரிப்பதில் மிகத்திறமையாக திட்ட மிட்டு செயல்படும் ஆற்றல்மிக்கவன், மனித இனத்தின் தந்தை ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டதிலிருந்து இது கால வரை கியாமத் நாள்வரை ஓயாமல் சலிக்காமல்மனித சமுதாயத்தை வழி கெடுத்துக் கொண்டே இருக்கின்றான்.

அவன் அவ்வாறு செயல்பட அல்லாஹ்விடம் நீண்ட காலம்- கியாம நாள்வரை உயிர்வாழ அவகாசம் கேட்டு, அதற்கான அவகாசம் அவனுக்கு வழங்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால் மனிதர்களாகிய நாம் அவனது சதித்திட்ட தந்திரங்களையும் அறியாமல் அவனது சதிவலைகளில் வீழ்ந்து நாசமாகிக் கொண்டிருக்கின்றோம்.

"மனிதர்களின் உடல்களில் உயிர் இருக்கும்வரை உனது கண்ணி யத்தின் மீது ஆணையாக உனது அடியார்களை வழி கெடுத்துக் கொண்டேயிருப்பேன்" என்று அல்லாஹ்விடம் சபதம் எடுத்த போது, எனது வல்லமையின் மீதும், கண்ணியத்தின் மீதும் ஆணையாக அவர்கள் என்னிடம் பிழை பொறுக்கத் தேடும் காலமெல்லாம் அவர்களது பாவங்களை மன்னித்துக்கொண்டிருப்பேன்." என அல்லாஹ் கூறியுள்ளான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத்)

ஷைத்தானின் படைகள்

ஷைத்தானுக்கு இரண்டு விதமானப் படைகள் உள்ளனர்.

1. ஜின்களிலுள்ள படைப் பிரிவு.
2. மனிதர்களைச் சேர்த்த படைப் பிரிவு.

ஜின்களிலுள்ள படைப் பிரிவு

ஷைத்தானுக்கு பல படைப்பிரிவுகளும், பல உதவியாளர்களும் உள்ளனர். இதைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு தெளிவு படுத்துகின்றான்.

" واستفزز من استطعت منهم بصوتك واجلب عليهم بخيلك ورجلك...." (سورة الاسراء: 64)

உனது குரல் மூலம்,அவர்களில் உனக்கு முடிந்தோரை வழி கெடுத்துக் கொள் ! உனது குதிரைப்படையையும், காலாட் படை யையும், அவர்களுக்கு எதிராக ஏவிக்கொள், பொருட்செல்வத் திலும் மக்கள் செல்வத்திலும், அவர்களுடன் நீ கூட்டாகச் சேர்ந்துபங்குஎடுத்துக்கொள்! அவர்களுக்கு வாக்குறுதியும் அளித்துக் கொள்" (என்றும் இறைவன் கூறினான்) ஏமாற்றத்தைத்தவிர வேறுஎதனையும் ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை. (17:64)

மேற்கூறப்பட்ட வசனத்தின் பிரகாரம் ஷைத்தான் அவனது குதிரைப் படை, காலாட்படை போன்ற படைகளை மனித இனத்தின்பால் அனுப்பி அவர்களை பாவமான, மானக்கேடான விடயங்களை செய்யத்தூண்டி வழிகெடுத்துக் கொண்டேயிருப்பான். மேலும் இதுபற்றி அல்குர்ஆன்,

ஒரேயடியாகத் தூண்டி விடுவதற்காக (நம்மை) மறுப்போரிடம் ஷைத்தான்களை அனுப்புகிறோம் என்பதை நீர் அறிய வில்லையா? (19:83)

ஒவ்வொரு மனிதனுடனும் ஒவ்வொரு இணைபிரியா தோழன்

ஒவ்வொரு மனிதனுடனும் சதாவும் கூடவே இருக்கும் ஓர் இணை யனாக ஷைத்தான் சாட்டப்படுகிறான்.

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்: ஒருநாள் இரவு வேளையில் நபி (ஸல்) அவர்கள் எனது வீட்டிலிருந்து வெளி

யாகிச் சென்று (மீண்டும் வந்த போது) நான் எனது ரோச உணர்வை வெளிப்படுத்தக்கூடிய செயலை செய்து கொண்டிருந்தேன். (ஆயிஷா (ரழி) அவர்களுக்குரிய இரவில் மற்ற மனைவிமாரிடம் சென்றிருக் கலாம் என்ற எண்ணத்தில் ஏற்படும் ரோச உணர்வு) ஆயிஷாவே! உனக்கு என்னநடந்தது? ரோசம்வந்துவிட்டதா? எனக் கேட்க, உங்களைப் போன்ற ஒருவர் மீது என்போன்ற ஒருவர்ரோசம் அடையாமல் இருக்கலாமா? என ஆயிஷா நாயகி கூறியதும் உம்மிடத்தில் உனது ஷைத்தான் (ஈகோ) வந்துவிட்டானா? எனக் கேட்க அல்லாஹ்வின் தூதரே! என்னுடன் ஷைத்தான் இருக் கின்றானா? என வினவ, ஆம்" எனக் கூறிய நபியவர்களிடம், ஒவ்வொரு மனிதனுடனும் ஷைத்தான் இருக்கின்றானா? எனக் கேட்க ஆம் என்றார்கள். அப்படியாயின் அல்லாஹ்வின் தூதரே! உங்களுடனும் இருக்கின்றானா? எனக் கேட்க, ஆம் எனக் கூறிய நபி (ஸல்) அவர்கள்: என்றாலும் அல்லாஹ் எனக்கு உதவி செய்துவிட்டான். அதனால் அவன் எனக்கு வழிபட்டுவிட்டான். எனக் கூறினார்கள்.(முஸ்லிம்)

ஸஹீஹ் முஸ்லிம், முஸ்னத் அஹ்மத் ஆகிய நூல்களில் வரும் மற்றுமொரு ரிவாயத்தில்,

ஜின் இனத்தைசேர்ந்த இணைபிரியாநண்பனும், மலக்குகளில் ஒருகூட்டாளியும் சாட்டப்படாமல் உங்களில் எவரும் இல்லை." என்று நபியவர்கள்கூறியபோது, "அல்லாஹ்வின் தூதரே! உங்க ளுடனுமா? எனக்கேட்க ஆம், என்னுடனும் தான், எனினும் எனது இரட்சகன் அவனுக்கு எதிராக எனக்கு உதவிசெய்துவிட்டான். அதனால் அவன் எனக்கு சரணடைந்துவிட்டான். அவன் நல்லதைத் தவிர வேறு எதையும் எனக்கு ஏவமாட்டான். என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம், அஹ்மத்)

"எவர் அளவற்ற அருளாளனின் அறிவுரையை புறக்கணிக்கிறாரோ அவருக்கு ஒரு ஷைத்தானைச் சாட்டுவோம். அவன்அவருக்கு தோழனாவான்." (43:36)

மனித இனத்தைச் சேர்ந்த அவனது நேசர்கள்

முதல் மனிதரை வழிகெடுத்து, அழித்து விடுவதற்காக முயற்சி செய்த எதிரியான ஷைத்தானை பெரும்பான்மையான மனிதர்கள் நேசனாக ஏற்றுக்கொண்டு, அவனது செயற்திட்டங்களுக்கு அமைவாக நடக்கின்றனர். அவனது சிந்தனையை திருப்திப்படுத்தவே முனைகின்றனர்.

இந்த பகுத்தறிவு கொடுக்கப்பட்ட மனிதன் அவனது எதிரியை நண்பனாக எடுத்துக் கொள்வது எவ்வளவு கேவலமான செயலாக உள்ளது. "என்னையன்றி அவனையும், அவனது சந்ததிகளையும் நேசர்களாக ஆக்கிக்கொள்கிறீர்களா? அவர்கள் உங்களுக்கு எதிரிகள் அநீதி இழைத்தோர் பகரமாக்கியதுமிகவும் கெட்டது. (18:50) என அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான்.

ஷைத்தான் அவனது நேசர்களை முஃமின்களுடன் போராடவும், தமது பணிகளுக்காகவும் வகைப்படுத்தல்

மனிதர்கள் இரண்டு வகையினர்

1. *ரஹ்மானுடைய நேசர்கள்.*
2. *ஷைத்தானுடைய நேசர்கள்*

ஷைத்தானுடைய நேசர்கள் இவர்கள்தான் காபிர்கள், இறை நிராகரிப்பாளர்கள் அவர்கள் எந்தசமயத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் முஃமின்களுக்கு எதிரியாகவே செயல்படுவார்கள்.

"நம்பிக்கை கொள்ளாதோருக்கு ஷைத்தான்களை உற்ற நண்பர்களாக நாம் ஆக்கிவிட்டோம்." (07:27)

ஷைத்தான் முஃமின்களை வழிகெடுப்பதற்காக இவர்களை வசப்படுத்தி மார்க்கத்தில் பல்வேறு சந்தேகங்களையும், வீண்குற்றச் சாட்டுக்களையும் சுமத்துகின்றனர்.

கீழைத்தேய ஆராய்ச்சியாளர்களும் யூத, கிறிஸ்தவ பிரச்சாரகர் களும், நாஸ்திகர்களும், ஏனைய மதவெறியர்களும் இஸ்லாத் திற்கு எதிராகசுமத்துகின்ற குற்றச்சாட்டுக்கள் இந்த வகையைச் சேர்ந்தவையே.

அந்த அடிப்படையில் முஸ்லிம்களை உளரீதியாக நோவினை செய்வதற்கும், பல சதிமுயற்சிகளை அவனது நேசர்களான மனிதர்கள்மூலம் செய்து கொண்டிருக்கின்றான். சிலவேளை முஸ்லிம்களை கொலை செய்வதற்கும், பலவேறு யுத்தங்களை மூழச்செய்வதற்கும் தூண்டிக் கொண்டிருப்பான். இது பற்றி சூறா அந்நிஸா 76 வசனத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான். “அந்த ஷைத்தான் எப்பொழுதும் முஃமின்களை, அவனது உற்ற நண்பர்களான இஸ்லாத்தின் எதிரிகளால், அச்சுறுத்திக் கொண்டே இருப்பான்.”

இதனால்தான் இஸ்லாத்தின் வரலாற்று நெடுகிலும் அடிக்கடி யுத்தங்களும், குழப்பங்களும் முஸ்லிம்களுக்கு எதிராக நடை பெற்ற வரலாறுகளைப் பார்க்கின்றோம்.

சமகாலத்திலும் உலகில் எட்டுத்திக்கிலும் முஸ்லிம்கள் துன்புறுத் தப்படுவதும், சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதையும் நாளாந்தம் மீடியாக்கள் மூலம்அறிந்த வண்ணமுள்ளோம். இவைகளெல்லாம் எமது பரம எதிரியான ஷைத்தானின் நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் நிகழ்கின்றது. என்றால் அது மிகையாகாது.

07

மனிதனை வழிகெடுப்பதற்கு ஷைத்தான் பயன்படுத்தும் தந்திரங்கள்

ஷைத்தான் ஒரு மனிதனை வழிகெடுப்பதற்காக அவனிடம் சென்று இந்தநல்ல விடயத்தை செய்யாமல் விட்டுவிடு, அந்த கெட்ட காரியங்களைசெய் என்று நேரடியாக ஏவுவதோ, தடுப்பதோ கிடையாது. அந்த நடைமுறையை கடைப்பிடித்தால் யாரும் அவனுக்கு வழிப்படமாட்டார்கள். அதனால் அவன்பல தந்திர உபாயங்களைப் பயன்படுத்தி மனிதனை வழிகெடுக்கிறான். அவை பின்வருமாறு,

1. தீய விடயத்தை நல்லதாக அலங்கரித்து காட்டுதல்

ஷைத்தான் மனிதனை வழிகெடுப்பதற்கு பயன்படுத்தக்கூடிய மிகபிரதானமான வழிமுறை, ஒரு பாவத்தை அல்லது தவறான விடயத்தை நல்லதுபோன்று அலங்கரித்துக் காட்டி வழிகெடுப்ப தாகும். உதாரணமாக நிர்வாணமான ஆபாசப்படங்களைப் பார்ப்பதை ஒரு கலையாக கற்றுக்கொள்வது, அல்லது மனைவியை திருப்திப்படுத்துவதற்கான வழிகளைக் கற்றுக் கொள்ளல், என்பன போன்ற மாயைகாட்டி அதனை அலங்கரித்து ஷைத்தான் அதனைப் பார்க்கத் தூண்டுவதால் அதிகமான இளைஞர், யுவதிகள் இந்தப் பாவத்தில் ஈடுபடுவதாக அறிகின்றோம்.

இதனைப் பற்றி அல்லாஹ் தனது திருமறைக் குர்ஆனில் ஷைத் தானின் கூற்றை பின்வருமாறு கூறுகின்றான்.

“என்இறைவா! நீ என்னை வழிகெடுத்தன்காரணமாக பூமியில் (தீமைகளை) அழகாக்கிக் காட்டுவேன். அவர்களில் உன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட உனது அடியார்களைத் தவிர மற்றவர்கள் அனைவரையும் வழிகெடுப்பேன். என்று கூறினான். (15:39)

இமாம் இப்னு கையும் (ரஹ்) அவர்கள் மேற்படி தலைப்பில் கூறியுள்ளார்கள் : ஷைத்தானுடைய சதி திட்டங்களில் ஒன்றுதான்: மனிதனை வழிகெடுப்பதற்காக அவனது புத்தியை, அறிவை மழுங்கடிக்கச்செய்து அவன் செய்யநினைக்கும் பாவத்தின் விபரீதத்தையோ, அல்லது அதன் பின்விளைவுகளையோ பற்றி யோசிக்கவிடாமல் அவனை அவசரப்படுத்தி அந்த பாவமான காரியத்தை செய்ய வைத்தல். இவ்வாறான தந்திரத்தைப் பயன் படுத்தி எத்தனையோ நல்ல மனிதர்களை மிக மோசமான பாவங் களைச் செய்யத் தூண்டி வழிகெடுத்துள்ளான்.

விக்கிரக வணக்கங்ளை அலங்கரித்துக்காட்டி மனித சமுதாயத்தில் பெரும்பான்மையினரை வழிகெடுத்துள்ளான். அவ்வாறே முஸ்லிம் களில் பொரும்பான்மையினரை கப்று, தர்கா வழிபாடுகளை அலங்கரித்துக் காட்டி அவ்லியாக்கள் மீது அளவு கடந்த நேசம் பக்திபரவசத்தை ஏற்படுத்தி வழிகெடுத்துக் கொண்டிருக்கிறான்.

அதே போல் அல்லாஹ்வைப் பரிசுத்தப்படுத்துகின்றோம் என்ற போர்வையில் அல்லாஹ்வுக்குரிய அஸ்மா வஸ்ஸிபாத் விடயங்களை திரிவுபடுத்தி அல்லது அவற்றிற்கு மாற்றுக் கருத்து கொடுத்து நம்பவைத்து வழிகெடுத்துள்ளான்.

நன்மையை ஏவி தீமையை தடை செய்தால் சமூகத்தில் பிரச்சினைகள் உருவாகும், என பயமுறுத்தி நீ மாத்திரம் நல்லவனாக இருந்தால் போதும், யார் எக்கேடு கெட்டால் உனக்கென்ன? என்பன போன்ற ஆலோசனைகளை உள்ளத்தில் ஊசலாடச் செய்து அனேகமான வர்களை வழிகெடுத்துக் கொண்டிருக்கிறான்.

இந்த அடிப்படையில் தான் நபி ஆதம் (அலை) அவர்களுக்கு உண்பதற்கு தடைசெய்யப்பட்ட மரத்தை ஷைத்தான் அலங்கரித்துக்

காட்டிஅதன் கனியை சாப்பிட்டால் சுவர்கத்தில் நிரந்தரமாக இருக்கலாம், அல்லது மலக்குகளில் ஒருவராக மாறலாம் என வர்ணித்துக் காட்டி அதனை உண்ணச்செய்து அவர்களிருவரையும் சுவர்க்கத்தை விட்டும் வெளியேற்றினான்.

அவ்வாறே பெண்களுக்கு உரிமை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனும் கோசங்களை எழுப்பி, அதன் மூலம் பெண்களை முழுநிர்வாணக் கோலத்திலோ, அரை நிர்வாணக் கோலத்திலோ உலாவச் செய்து விபச்சாரிகளாக மாறுவதற்கு பல்வேறு கொள்கைகளை முன்வைப்பதும் செயற்படுத்துவதும் நடைமுறையாகஉள்ளது.

அவர்கள் நாம் நல்லதுதான் செய்கின்றோம் என்று நினைத்து தமது வாழ்க்கையைத் தொலைத்துக் சீரழித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறே வட்டி வங்கிகளில் பணங்களை சேமிக்கச்செய்து அன்பளிப்பு, இலாபம் என்ற பெயரில் வட்டியை ஆகுமாக்கியுள்ளார்கள்.

அவ்வாறே மதுபானம், சாராயம் போன்றவற்றிக்கு வேறு பெயர் களைச் சூட்டி மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது போல் பயன்படுத்துதல். மேலும் இசையையும், இசைக் கருவிகளையும் கலையுணர்வு, கலையை ரசித்தல்எனும்பெயரில் அனுமதிக்கின்றனர்.

முஸ்லிம் பாடசாலைகளில் மாணவர்களுக்கான பாடசாலைக்கீதம் என்பது ஒரு துஆப்பிராத்தனை அதைக்கூட இசையுடன்கலந்து பாடப்படுகின்றது. இவை அனைத்தையும் ஷைத்தான்தான் அலங் கரித்துக் காட்டுகின்றான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

2. இபாதத்களில் கூட்டல், குறைத்தல் செய்தல்

இமாம் இப்னு கைய்யும் (ரஹ்) அவர்கள் இந்தவிடயத்தில் கூறியுள்ளார்கள் : அல்லாஹுத்தஆலா ஒரு விடயத்தை மனிதனுக்கு கட்டளையிட்டிருந்தால் அதிலே ஷைத்தான் இரண்டு விதமான விடயங்களைக் கையாளுகின்றான்.

i. குறைத்து சுருக்கிக்காட்டுதல்
ii. எல்லை மீறலும், மிகைப்படுத்தலும்

இந்த இரு விடயங்களில் ஒன்றைக் கடைப்பிடிக்கத்தூண்டுவான். ஒரு அமலைச் செய்ய ஒரு அடியான் நினைக்கும் போது ஷைத் தான் அவனிடம் சென்று அவனது உள்ளத்தில் பல ஊசலாட்டங் களை ஏற்படுத்தி அந்த அமலை செய்யவிடாமல் அவனுக்கு சோம்பலை ஏற்படுத்துவது, அல்லது சற்று தாமதித்து செய்யத் தூண்டுவது, அல்லது அதை செய்யவிடாமல் பல குறுக்கு வழி களைக் காண்பித்து அதனை திசை திருப்புவது, சிலவேளை அந்த அமலை முற்றாகவே செய்யவிடாமல் தடைசெய்து விடுவான். உதாரணமாக தூங்குவதற்கு முன்னர் வுழு செய்வது நபியவர் களின் சுன்னத் அதைச்செய்யவிடாமல் சோம்பலை ஏற்படுத்தி தடுத்தல்.

அந்த மனிதன் ஷைத்தானின் ஊசலாட்டத்திற்கு அடிபணியாமல் அந்த அமலை செய்ய முற்படும் போது அவனுக்கு அந்த அமலை குறைவானதாக காண்பித்து, இது போதாது இதைவிட கூடுதலாக செய்தால் தான் அல்லாஹ்விடம் கூடிய நன்மைகளைப் பெறலாம் எனத் தூண்டுவது, உதாரணமாக ஒருவர் வுழு செய்யும் போது முகத்தை மூன்று முறை கழுவினால் அது போதாது, அதனை ஐந்து முறை செய்வது தான் அதிக சிறப்பானது, என்பன போன்ற சிந்தனைகளை உருவாக்கி ஏவப்பட்டதைவிட மேலதிகமாக செய்விப்பான். அதேபோல் நபியவர்கள் கற்றுத்தந்த திக்ர், துஆக்களில் கலப்படத்தை ஏற்படுத்தி அதனை ஓதுவதால் அதிக சிறப்பு கிடைக்கும் என ஓதத் தூண்டுவது, உதாரணமாக பாங்கு துஆவில் கலப்படம், நபியவர்களின் மீது ஓதும் ஸலவாத்துக்களில் கலப்படம், பராஅத் நோன்பு, மிஃராஜ் நோன்பு போன்ற, நோன்புகளை உருவாக்கி நன்மைகளை இழக்கச் செய்ய, ஷைத்தான் பல்வேறு உபாயங்களை கையாண்டு அந்த இபாதத்தை பயனற்றதாக ஆக்க முயன்றுகொண்டே இருப்பான்.

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் வுழுசெய்யும் முறையை அறிவிக்கும் போது, கழுவப்படக் கூடிய உறுப்புக்களை மும்மூன்றுமுறை கழுவ வேண்டும் எனக் கூறிவிட்டு, "இதைவிட யார் அதிகப்படுத்துகின்றானோ

அவன்குற்றமிழைத்து விட்டான், அநியாயம் செய்துவிட்டான், எல்லை மீறிவிட்டான் “எனக்கூறினார்கள்.

فمن زاد على هذا فقد أساء وظلم واعتدى (رواه النسائي)

மேற்படி ஹதீஸில் மூன்று முறைக்கு மேல் கழுவதை கண்டித்து மூன்று விதமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி குற்றம், அநியாயம், எல்லை மீறல், எனக்குறிப்பிட்டிருப்பதன் மூலம் ஏனைய இபாதத்களில் நாம் எல்லைமீறினால் என்ன நிலமை ஏற்படும் என்பதை நாம் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டியது கட்டாயக் கடமையாகும்.

மேலும் ஒருமனிதர் தும்மியவுடன்-

اَلْحَمْدُ لِلَّهِ ، وَالسَّلَامُ عَلَى رَسُوْلِ اللَّهِ

அல்ஹம்துலில்லாஹ் வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ் எனக் கூறினார். இதைச் செவியுற்ற இப்னு உமர் (ரழி) அவர்கள்

ما هكذا علمنا رسول الله ص

علمنا أن نقول الحمد لله على كل حال(رواه الترمذي)

“நபியவர்கள் எங்களுக்கு இவ்வாறு கற்றுத் தரவில்லை” என்று கண்டித்து அல்ஹம்துலில்லாஹி அலாகுல்லிஹால் என்றுதான் நபியவர்கள் எங்களுக்கு கற்றுத்தந்தார்கள். எனும்வரலாறு மிக முக்கியமான ஒன்றாக இங்கே நோக்கப்படுகின்றது. எமது பார்வையில் நாம் அதை நோக்கினால் அந்த நபித் தோழர் என்ன தவறு செய்தார்? அவர் தும்மியதும் அல்லாஹ்வைப் புகழ்ந்ததும், நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துத் தானே கூறினார் இதுதவறா? என்று கேள்வி கேட்கலாம். ஆம் அதுதவறேதான்.

நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தில் எமது சுயவிருப்பத்தின் பேரில் கூட்டுவதும், குறைவு செய்வதற்கும் எமக்கு உரிமை கிடையாது. இதை செய்வித்தது யார் ஷைத்தானே அன்றி வேறு யாருமில்லை.

அவ்வாறே தூங்கும் போது ஓதும் துஆவில் நபி نبي என்ற வார்த்தைக்குப் பகரமாக ரஸூல் رسول என்ற வார்த்தையைப்

பயன்படுத்திய சஹாபியை நபியவர்கள் கண்டித்து நான் கற்றுத் தந்த முறைப்படியே கூறவேண்டும், வார்த்தையை மாற்றிக் கூற முடியாது என்று எச்சரித்த சம்பவம் (புகாரி 247, முஸ்லிம் 2710) ஆகிய ஹதீஸ்கிதாபுகளில் வந்துள்ளது. விரிவை அஞ்சி சுருக்க மாகக் கூறியுள்ளேன்.

எனவே, நபி (ஸல்) அவர்கள் வரையறுத்துக் காட்டித்தந்த மார்க் கத்தில் நல்லது தானே, எனக் கருதி கூட்டல், குறைத்தல் செய்வ தற்கு எமக்கு எந்த அனுமதியும் இல்லை. அவ்வாறு செய்பவர்கள் ஷைத்தானின் தோழர்களே. அதன்மூலம் அவர்கள் தமது அமல்களை பாழாக்கியவர்களாகக் கருதப்படுவார்கள்.

3. மனிதர்களை அமல் செய்வதை விட்டும்பராக்காக்குதலும் பிந்தி செய்யலாம் எனக்கூறி சோம்பேறித்தனத்தை ஏற்படுத்தலும்

மேற்கூறப்பட்ட விடயங்களைக்கையாண்டு மனிதனை அமல் செய்யவிடாமல் சோம்பேறியாக ஆக்குவதில் ஷைத்தான் பல்வேறு வழிகளைக் கையாள்வான்.

“உங்களில் ஒருவன் தூங்கினால் அவரது தலையின் பிடரியில் ஷைத்தான் மூன்று முடிச்சுக்களை போடுகிறான். ஒவ்வொரு முடிச்சையும் அதற்குரிய இடத்தில் போடுகின்றான். “இன்னும் நீண்ட இரவு இருக்கின்றது இன்னும் தூங்கு!” என்ற உணர்வை ஏற்படுத்துகின்றான், அவன் கண்விழித்து அல்லாஹ்வை திகர் செய்தால் ஒரு முடிச்சு அவிழ்ந்து விடும், அவன் வுழு செய்தால் மற்ற முடிச்சும் அவிழ்ந்து விடும், அவன் தொழுதால் மற்றைய எல்லாமுடிச்சுக்களும் அவிழ்ந்து நல்லஉள்ளம் கொண்ட சுறு சுறுப்பானவனாக காலையை அடைகின்றான். அப்படி இல்லை என்றால் தீய உள்ளமுடையசோம்பேறியாக அவன்காலை நேரத்தை அடைகின்றான்.” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி)

மேலும், “உங்களில்ஒருவர் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து வுழு செய்ய ஆரம்பித்தால், தனது நாசிக்கு நீர்செலுத்தி மூன்று முறை சீறிக்கொள்ளவும்! ஏனெனில் ஷைத்தான் அவனது மூக்குத்து

வாரத்தில் இராத்தரிக்கின்றான்" எனநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

"ஒருமனிதன்சுபஹ்தொழுகைக்காக எழும்பாமல்விடியும்வரை தூங்கிக் கொண்டிருக்கிறான்" என நபியவர்களிடம் கூறப்பட்ட போது அந்தமனிதனின் இரு காதுகளிலும் ஷைத்தான் சிறுநீர்கழித்துவிட்டான்" எனக் கூறினார்கள். (புஹாரி)

நான் மேலே கூறிய ஹதீஸ்கள் ஷைத்தான் மனிதனை அமல் செய்வதை விட்டும் பராக்காக்கி, சோம்பேறித்தனத்தை ஏற்படுத்தி அமலை செய்யவிடாமல் ஆக்குவதற்காக பயன்படுத்தும் தந்திரங்கள், என்பதைதெளிவுபடுத்துகின்றன. மேலும் ஒரு மனிதன் பாவத்திலிருந்து தௌபா செய்ய விரும்பினால் ஷைத்தான் அவனிடம் சென்று அவசரப் படாதே! இன்னும் உனக்கு நீண்ட ஆயுள் இருக்கின்றது. உலகில் அனுபவிக்க வேண்டியவை இன்னும் எவ்வளவோ இருக்கின்றது. அவற்றையெல்லாம் அனுபவித்துவிட்டு இறுதியில் தௌபா செய்யலாம். அல்லது ஒரு ஹஜ்ஜோ, உம்ராவோ செய்துவிட்டு வந்தால் அன்று பிறந்த பாலகன் போல் பாவங்களை விட்டும் தூய்மையாகிவிடலாம் என உள்ளத்தில் பல ஊசலாட்டங்களை ஏற்படுத்தி காலத்தைக் கடத்திக்கொண்டே செல்வான்.

ஒவ்வொரு மனிதனும் மரணத்தை சுமந்தவர்களாகவே இருக்கின்றோம். எந்த நேரத்தில் யாருக்கு மரணம் வரும் என்பதை, எவரும் அறிய மாட்டோம். இந்த சிந்தனையை ஷைத்தான் மறக்கடிக்கச் செய்து பாவத்தில்இன்பத்தைக்காட்டி வழிகெடுத்துக் கொண்டே இருக்கின்றான்.

இமாம் இப்னுல்ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் இந்த விடயத்தில் பின் வருமாறு கூறியுள்ளார்கள் "எத்தனையோ யூதர்களும், கிறிஸ்த வர்களும், பாதிரிமார்களும், (பௌத பிக்குகளும்) இஸ்லாத்தைக் கற்று நன்கு விளங்கி இஸ்லாத்தை ஏற்க வேண்டுமென்ற ஆசை யுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களை இஸ்லாத்தை தழுவ விடாமல் ஷைத்தான் அவர்களின் எதிர்காலம், குடும்பம், பொருளாதாரம், சமூக அந்தஸ்து என்பன போன்றவிடயங்களை கண்முன்காட்டி "அவசரப்படாதே! தாமதமாக இஸ்லாத்தை ஏற்கலாம்" என ஏமாற்றி இஸ்லாத்தை தழுவவிடாமல் மரணிக்கச் செய்கின்றான்.

அவ்வாறே ஒரு மனிதன் இரவுத் தொழுகை, தஹஜ்ஜுத் தொழ வேண்டுமென்று எழும்ப முற்பட்டால், "இன்னும் சற்று நேரம் உறங்கு" என்று கூறி தொழுகைக்கு எழும்ப விடாமல் தூக்கத்தை ஏற்படுத்தி விடுவான். அவ்வாறே இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய திக்ர் துஆக்களை படுக்கையிலிருந்து கொண்டு ஓதலாம், என கூறி அதனை ஓதாமல் ஆக்கி தூக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றான்.

எனவே, நாம் ஒரு அமலை செய்ய நினைத்தால் அதனை உரிய வேளையில் செய்து முடிக்க திடஉறுதிபூண வேண்டும். நாளைக்கு செய்யலாம் அல்லது பிறகு செய்யலாம் என அலட்சியம் செய்தோமேயானால் நாம் ஷைத்தானுக்கு வழிப்பட்டவர்களாக ஆகிவிடுவோம்.

ஒரு முஃமின் எப்பொழுதும் அமல்கள் செய்யும் விடயத்தில் தேனீக்களைப் போல் அல்லது எறும்புகளைப் போல் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். ஸஹாபாக்கள் நோன்பு காலங்களில்கூட பகலில் யுத்தவீரர்களாகவும் இரவில் துறவிகள்போலும் இபாதத்துக்களில் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். இதனால் தான் அவர்களை அல்லாஹ் புகழ்ந்து رضي الله عنهم ورضوا عنه *அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டார்கள்" எனும் வசனத்தை இறக்கிவைத்துள்ளான்.*

4. பொய்யான வாக்குறுதிகளும் இனிமையான மேலெண்ணங்களும்

அந்த ஷைத்தான் மனிதர்களுக்கு போலியான வாக்குறுதிகளையும் இனிமையான கற்பனைகளையும் மேலெண்ணங்களை உருவாக்கி வழிகெடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டேஇருப்பான்.

"அவர்களுக்கு அவன் வாக்களிக்கிறான். ஆசை வார்த்தை கூறுகிறான். ஷைத்தான் அவர்களுக்கு ஏமாற்றத்தையே வாக்களிக்கிறான்." (4:120) உதாரணமாக பத்று யுத்தத்தின் போது ஷைத்தான் முஸ்லிம்களுக்கு எதிராக போர்தொடுப்பதற்கு காபிர்களை உற்சாகப்படுத்தி, உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்றும் உங்களுக்கு உதவியாக நான்கூடவே

இருந்து வெற்றியீட்டித் தருவேன். என்றெல்லாம் போலியான வாக்குறுதிகளை அள்ளிவழங்கி, யுத்தம்நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மலக்குமார்கள் வானத்திலிருந்து இறங்கிபோர் வீரர்கள் போல் செயல்பட்டதைக் கண்ட ஷைத்தான் தாக்குப் பிடிக்க முடியாமல் விரண்டோடிய நிகழ்வை அல்லாஹ் சூரதுல் அன்பால் 48 வசனத்தில் தெளிவுபடுத்துகின்றான்.

(وإذ زين لهم الشـيطان أعمـالهم ....سـورة الأنفـال:48;)

“ஷைத்தான் அவர்களின் செயல்களை அவர்களுக்கு அழகானதாக காட்டியதை ஞாபகப்படுத்திப்பாருங்கள், இன்று மனிதர்களில் உங்களை வெல்ல யாருமில்லை நான் உங்களுக்கு அருகில் இருக்கிறேன்” எனவும் கூறினான். இரு அணிகளும் நேருக்குநேர் சந்தித்த போது ஷைத்தான் பின்வாங்கினான். உங்களை விட்டும் நான் விலகிக்கொண்டேன். நீங்கள் பார்க்காததைநான்பார்க்கிறேன். நான்அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன். அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன்.” என்றும் கூறினான். (08:48)

5. மனிதனுக்கு நல்லுபதேசம் செய்வதைப்போல் வெளிப்படுத்தல்

ஷைத்தான் ஒரு பாவத்தை செய்வதற்கு மனிதனுக்கு ஆசை காட்டி அதிலே அவன் நலவை நாடுவதாகவும் உபதேசிப்பான். உதாரணமாக் எமது தந்தை ஆதம் (அலை) அவர்களையும் எமது தாய் ஹவ்வா (அலை) அவர்களையும் வழிகெடுப்பதற்காக திட்டமிட்டு அவ்விருவரிடத்திலும் போய் சத்தியம் செய்து, திட்டமாக உங்களுக்கு நல்லுபதேசம் செய்வதற்காகவே இதனைக் கூறுகின்றேன் என்று கூறி, தடுக்கப்பட்டமரத்தின் கனியை உண்ணச் செய்தான்.

ஒரு அன்னிய பெண்ணுக்கு உதவி உபகாரம் செய்வதுபோல் ஆரம்பத்தில் ஆசை வார்த்தைகளைக் கூறி, இறுதியில் விபச்சாரத்தில் ஈடுபடுத்தி கொலை செய்த சில சம்பவங்களை இமாம் இப்னு கய்யூம் (ரஹ்) அவர்கள் தமது “தல்பீஸ் இப்லீஸ்” எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். விரிவை அஞ்சி இங்கே தவிர்த்துக் கொண்டேன்.

6. வழிகெடுப்பதில் படிமுறைகளைக் கையாளுதல்

ஒரு மனிதனை வழிகெடுக்க ஷைத்தான் திட்டமிட்டால், கட்டம் கட்டமாக அவனை வழிகெடுப்பதற்காக பல படிமுறைகளைக் கையாண்டு கொண்டே இருப்பான். அதில் அறவே சோர்வடைய மாட்டான். இறுதியில் அவனது இலக்கை அடையச் செய்து, அவனை நரகத்தில் வீழ்த்தும்வரை வரை ஓய்வு பெறவேமாட்டான். "அவர்கள் தடம் புரண்டபோது அவர்களின் உள்ளங்களை அல்லாஹ் தடம் புரளச்செய்துவிட்டான்". (61:05)

7. மனிதனுக்கு நலவான விடயங்களைமறக்கடிக்கச் செய்தல் :

மனிதனுக்கு நன்மைபயக்கக்கூடிய நலவானவிடயங்களை ஷைத்தான் மறக்கடிக்கச் செய்வான். உதாரணமாக ஆதம் (அலை) அவர்களுடைய விடயத்தில், அவர்களுக்கு அடிக்கடி வஸ்வாஸை ஏற்படுத்தி அல்லாஹ்வால் அவர்களுக்கு தடுக்கப்பட்ட விடயத்தை மறக்கடிக்கச் செய்தான். அவ்வாறே நபி மூஸா (அலை) அவர்கள், அவரது அடிமையுடன் ஹிழ்ர் (அலை) அவர்களைச் சந்திப்பதற்காக சென்ற பயணத்தில் அவர்கள் கொண்டு சென்றமீன் விழுந்த விடயத்தை ஷைத்தான் மறக்கடிக்கச் செய்தான்.

"நான் அப்பாறையில் ஒதுங்கியபோது கவனித்தீரா! நான் மீனை மறந்துவிட்டேன். அதை உம்மிடம் கூறுவதைவிட்டும் ஷைத்தான் என்னை மறக்கடிக்கச் செய்துவிட்டான்." (18:63)

என்று (ஊழியர்) கூறினார் எனவே, நல்ல விடயங்ளை செய்ய விடாமல் ஷைத்தான் மறக்கடிக்கச் செய்து விடுவதைநாம் இயல்பாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு நபி யூசுப் (அலை) அவர்கள் சிறையில் இருந்த போது அவரது சிறைத் தோழரிடம் என்னை பற்றி அரசனிடம் எடுத்துக் கூறு, என்று கூறிய செய்தியை ஷைத்தான் மறக்கடிக்கச் செய்த காரணத்தினால் பல வருடங்கள் மேலதிகமாக யூசுப் (அலை) அவர்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றவிபரத்தை அல்குர்ஆன் சூறா யூசுப் 43 வசனத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

8. அடிப்படை (அகீதா) ஏகத்துவக் கொள்கையில் சந்தேகங்களை உருவாக்குதல்

ஷைத்தான் மனிதனை வழிகெடுக்க கையாளும் வழிமுறைகளில் ஒன்று மனிதனது அடிப்படைக் கொள்கையில் சந்தேகங்களை உருவாக்குவான். இதைப் பற்றி முன்னறிவித்தலாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். "உங்களில் ஒருவரிடம் ஷைத்தான் வந்து இதைப் படைத்தது யார்? அதைப் படைத்ததுயார்? என்று வினாத் தொடுத்துவிட்டு, உமது இறைவனைப் படைத்தது யார்? என்று வினாத் தொடுக்கும்வரை கேட்டுக்கொண்டே இருப்பான். அந்த நிலைமையை ஒருவர்அடைந்துவிட்டால் அவன் அல்லாஹ்வைக் கொண்டு பாதுகாவல் தேடிக்கொண்டு, அத்துடன் நிறுத்தி விடட்டும்". என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி, முஸ்லிம்)

அறிஞர் ஷகீக் அல்பல்கீ அவர்கள், ஷைத்தான் ஒருமனிதனின் உள்ளத்தில் ஊசலாட்டம் செய்யக்கூடிய சந்தேகங்கள் பற்றி தெளிவு படுத்தும் போது : ஒவ்வொரு நாள் காலையிலும் ஷைத்தான் என்னிடம் நான்கு திசைகளிலும் வந்து உட்கார்ந்து பின்வருமாறு கூறுவான்:

i. *எனக்கு முன்னால்வந்து உட்கார்ந்து "நீ பாவங்களை தயங்காமல் செய், ஏனெனில் அல்லாஹ் பாவங்களை மன்னிப்பவனும், கிருபையுள்ளவனுமாக இருக்கின்றான்" என்று கூறுவான். அதற்கு நான் "திருந்தி, நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்து பின்னர் நேர்வழி பெற்றவரை நான் மன்னிப்பேன்" (20:82) எனும் அல்குர்ஆன் வசனத்தை ஓதுவேன்.*

ii. *மீண்டும் எனக்குப் பின்னால் வந்து உனது குடும்பத்தினருக்கு எதைவிட்டுச் செல்கின்றாய்? அவர்களுக்கு வறுமை பீடிக்குமே? என என்னை பயமுறுத்துவான். அதற்கு நான் "பூமியில் உள்ள உயிரினம் எதுவாக இருந்தாலும் சரி, அவற்றுக்கு உணவளிப்பது அல்லாஹ்வின் பொறுப்பதாகும்." (11:06) எனும் வசனத்தை ஓதுவேன்.*

iii. *மீண்டும் எனது வலது பக்கம் வந்து பெண்கள் சம்பந்தமான விடயங்களில் இச்சைகளைத் தூண்டுவான். அதற்குநான்" இறுதி முடிவு பயபக்தியாளர்களுக்கே" (அஃராப்:28) எனும் வசனத்தை ஓதுவேன்.*

iv. *மீண்டும் எனது இடதுபக்கமாகவந்து மனோ இச்சைகளை தூண்டும் விதமாக பேசுவான். அதற்கு நான் "இவர்களைப் போன்றோருக்கு முன்னர் செய்யப்பட்டதைப் போன்று இவர் களுக்கும் அவர்கள் விரும்பியவற்றுக்குமிடையே திரை போடப்பட்டுவிட்டது. (34:54) எனும் வசனத்தை ஓதுவேன் எனக் கூறினார்கள்.*

9. போதைப் பொருள், சூதாட்டம், சகுனம்பார்த்தல் போன்றவை.

ஷைத்தான் மனிதனை வழிகெடுப்பதற்காக பயன்படுத்தக்கூடிய சாதனங்களில் மிக முக்கியமானவை போதை வஸ்துக்களைப் பயன்படுத்த தூண்டுவது ஒருமனிதன் போதைவஸ்துவைப் பயன் படுத்தினால் அவன் அவனது மதியை புத்தியை இழந்துவிடுவான். புத்தியை இழந்துவிட்டால் அவன் அனைத்து விதமான பாவங் களையும் செய்வதற்கு துணிந்துவிடுவான். கொலை, கொள்ளை, விபச்சாரம், போன்ற அனைத்துக் குற்றச்செயல்களும், அவன் கண்முன்னே அற்பமாதானதாக ஆகிவிடும்.

இதனால் இன்று உலகளாவிய ரீதியில் அதிகம் பேர் போதைவஸ்து பாவனையில் ஈடுபடுகின்றனர். அந்த போதைப் பொருட்கள், சாராயம், பிஸ்கி, பிராண்டி, அபின், ஹிரோயின், கொக்கோயின், மர்ஜுவானா, கஞ்சா என எத்தனை பெயர்களில் இருந்தாலும் அவை மனிதனின் புத்தியை கெடுக்கக்கூடியவையே அதேபோல் பாடசாலை மாண வர்களிடையே போதைவஸ்து மாத்திரைவடிவங்களிலும் சமீப காலங்களில் பரிமாறப்படுகின்றன. இவைகள் எந்தரூபத்திலும் பாவனைக்கு வந்தாலும் அவை அனைத்தும் மனிதனின் மதியை மயக்கி, உணர்விழந்தவனாக பாதை ஓரங்களில் நடைப்பிணமாக கூட சிலர் கிடப்பதைக் காண்கின்றோம். அதைப் பயன்படுத்தத் தூண்டுவது யார்? ஷைத்தான்தானே!

இதைப் பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் :

"ஈமான் கொண்டவர்களே! மது, சூதாட்டம்,பலிபீடங்கள் (குறிகேட் பதற்கான) அம்புகள் ஆகியவை அருவெருப்பானதும், ஷைத்தானின் நடவடிக்கையுமாகும். எனவே, இதிலிருந்து விலகிக்கொள்ளுங்கள். வெற்றி பெறுவீர்கள்". (05:90)

எனவே, சூதாட்டமும் மதுவைப் போல மிக மோசமான ஒரு நோயாகும். எனவே, இந்த நோயால் பீடிக்கப்பட்டால் இதற்கு நிவாரணம் பெறுவது மிகவும் கஷ்டமான ஒரு விடயமாகும்.

சூதாட்டம் நேரத்தை வீணடித்து, பணத்தையும் வீணடிக்கக் கூடிய தாகும். சூது குரோதத்தையும், பொறாமையையும் ஏற்படுத்தி ஹராமான பொருளீட்டலின் பால் இட்டுச் செல்லும். எனவே, இதனையும் ஷைத்தானே தூண்டுகின்றான்.

மேலும் பலிபீடமும் ஹராமாக்கப்பட்ட ஒன்றாகும்.

பலிபீடத்தை நட்டி வைத்து அதற்காக அறுத்துப்பலியிடும் வழக்கம் அன்றைய அரேபியர்களிடம் இருந்தது. அது மட்டும்தான் தடை செய்யப்பட்டதுஎன்று நாம்புரிந்து கொள்ளக் கூடாது. அன்றைய காலத்தில் இதுதான் வழக்கமாக இருந்ததனால் இதுமட்டும் கூறப்பட்டுள்ளது.

மரத்தால் செய்யப்பட்ட வழிபாட்டுப் பொருட்களாக இருந்தாலும், படுக்கையாக போடப்பட்ட கற்களாக இருந்தாலும், உயிருடன் இருக்கும் மனிதனாக இருந்தாலும் மரணித்தவரின் அடக்கஸ்தல மாக தர்ஹாவாக இருந்தாலும், அவைகளுக்காக அறுத்துப்பலி யிடுவதுதடை செய்யப்பட்டுள்ளது. என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று தர்கா வழிபாடு, கப்ரு வணக்கம் பரவலாக முஸ்லிம்கள் வாழக்கூடிய பிரதேசங்களில் காணப்படுகின்றன. அந்த தர்காக்களை நாடிச்செல்லல், அங்கு அடக்கம் செய்யப்பட்டவர்களுக்கு நேர்ச்சை

வைத்தல் அறுத்துப்பலியிடல் கப்ருகளுக்கு பூமாலை இடல், ஊதுபத்தி, குத்துவிளக்கு எரித்தல் போன்ற ஷிர்க்கான பல செயற்பாடுகளை, வணக்கம் எனும் போர்வையில் அல்லது மகான்களை கண்ணியப் படுத்தல் என்ற போர்வையில், அல்லாஹ்வுக்கு இணை வைக்கக் கூடிய ஷிர்க்கான காரியங்கள் நடைபெறுகின்றன. இவற்றையும் செய்யத் தூண்டுடியது யார்? ஷைத்தானே அன்றி வேறுயாருமில்லை.

மேலும் குறி பார்ப்பதற்காக அம்புகளை திருவுளச்சீட்டு போல் பயன்படுத்தும் வழக்கம் அன்றைய அரேபியர்களிடம் இருந்து வந்துள்ளது. தற்காலத்தில் பால்கிதாபு என்றபெயரில் முஸ்லிம் களிடம் காணப்படும் மூடநம்பிக்கையும்கூட இத்தடையில் அடங்கும், மனிதனுக்கு கட்டளையிடுகின்ற அதிகாரத்தை மனிதனால் உருவாக் கப்பட்ட பொருட்களுக்கு வழங்குவது அடிப்படையிலேயே தவறானதாகும்.

நாம் கண்ணை மூடிக்கொண்டு ஒருசீட்டை எடுத்துவிட்டு இறைவனின் விருப்பம் இதுதான். எனக்கூறுவது இறைவனின் மீது இட்டுக்கட்டு வதாக அமையும் அல்லாஹ் மறைத்து வைத்திருப்பதை எங்களால் அறிந்துகொள்ளமுடியாது.

எனவே, ஒரு காரியத்தைச் செய்வதில் நன்மையா?, தீமையா? என்று குழப்பம் ஏற்படும் போது “இஸ்திகாரா” எனும் சிறப்புத்தொழுகை தொழுது யாஅல்லாஹ்! இக்காரியம் நன்மைதரும் என்றால் இதில் என்னை ஈடுபடச்செய்! இல்லாவிட்டால் என்கவனத்தை அக்காரியத்திலிருந்து திருப்பிவிடு! என்று பிராத்தனைசெய்வதற்கு மட்டுமே அனுமதிஉள்ளது. பார்க்க- நூல் புஹாரி 1166,6382,7390.

10. சூனியம்

மனிதர்களை ஷைத்தான் வழிகெடுக்கும் வழிகளில் ஒன்றுதான் சூனியம். மனிதனுக்கு எந்த பயனுமளிக்காத, தீங்கு விளைவிக்கக் கூடிய ஒருகலை தான் சூனியக்கலை. இந்த சூனியத்தின் மூலம் கணவன், மனைவிக்கிடையில் பிரிவினையை உண்டுபண்ணுதல் நடைபெறுகிறது. இந்த செயற்பாட்டை ஷைத்தான் அவனது படையினர் செய்யக்கூடிய மகத்தான ஒரு காரியமாக பாராட்டுகின்றான்.

சூனியம் என்பது உண்மையா?

இது விடயத்தில் அறிஞர்களுக்கிடையே கருத்து முரண்பாடுகள் உள்ளன. சிலர் அது வெறும்மெஜிக் கண்கட்டு வித்தை, அதில் எவ்வித உண்மையுமில்லை என்றும், வேறுசிலர் சூனியம்என்பது உண்மையானதுதான் என்றும் கூறுகின்றார்கள். என்றாலும் அதில் சரியான கருத்து யாதெனில் : சூனியம் இரண்டு வகை. அதில் ஒரு வகை மெஜிக் கண்கட்டு வித்தை அதில் அறிவுரீதியான சில தந்திரங்களையும் அவசரமாக மறைக்கும் வித்தையுமாகும். இரண்டாவது வகை அது உண்மையானது அதன் மூலம் கணவன் மனைவிக்கிடையில் பிரிவினையை உண்டுபண்ணுகிறது.இதுபற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

“கணவன் மனைவிக்கிடையில் பிரிவைஉண்டாக்கும் ஒன்றை அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள், எனினும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அவர்கள் எவருக்கும்எத்தகைய தீங்கும் இதன் மூலம் இழைக்க முடியாது (02:102)

11. பெண்களும், உலகஆசையும்

இன்றைய காலகட்டத்தில் அதிகமான இளைஞர்கள் வழி கெட்டுப் போவதற்குக் காரணம் பெண்கள் தான். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். “தனது காலத்திற்குப் பிறகு ஆண்களுக்கு பெண் களைவிட மிகமோசமான பித்னா- குழப்பத்தை நான் விட்டுச்செல்ல வில்லை” என்றும் அதனால்தான் ஒருபெண் அன்னிய ஆண்களுக்கு முன் தனது கையையும், முகத்தையும் தவிர ஏனைய முழு உடலையும் மறைப்பதை இஸ்லாம் கண்டிப்பானதாக ஆக்கியுள்ளது. ஆண்கள் தங்களது பார்வைகளை தாழ்த்திக் கொள்ளவேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது.

மேலும் ஒரு ஆண் ஒருஅன்னிய பெண்ணுடன் தனித்திருக்க வேண்டாமென்றும் அவ்வாறு தனித்திருந்தால் மூன்றாவது நபராக ஷைத்தான் அவர்களுடன் இருக்கின்றான் என்றும் பல ஹதீஸ்கள்

வலியுறுத்துகின்றன. பெண்என்பவள் “அவ்ரத்” முழுமையாக மறைக்கப்பட வேண்டியவள்.அவள் வீட்டைவிட்டு வெளியேறினால் ஷைத்தான்அவளை அடுத்தவர்களுக்கு அலங்கரித்துக் காட்டுகின்றான்.” எனவும் நபி(ஸல்)அவர்கள் அறிவித்துள்ளார்கள். (நஸாயி)

இன்றைய நவீனயுகத்தில் பெண்கள் அரைகுறைநிர்வாணிகளாக வெளியில் சுற்றுவதுதான் நாகரீகம், என சிலர் நினைக்கின்றனர். மேற்கத்தேய ஊடகங்கள் அதனையே ஊக்குவிக்கின்றன. இதனையே ஷைத்தானும் விரும்புகின்றான்.

ஒரு பெண் முழுமையாக தனது உடலை மூடிஆடைஅணிந்து சென்றால் அதை அநாகரீகமாக கருதுகின்றனர். அதனை எதிர்ப் பதற்கான சதி முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இவற்றுக்கெல்லாம் பின்னணியில் ஷைத்தான் இருக்கின்றான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

உலக ஆசை

உலக ஆசைதான் அனைத்து பாவங்களுக்கும் தலைபோன்றது. உலகில் குடும்ப உறவுகளுக்கிடையில் பிரிவினை,பெற்றோரை வெறுத்து நோவினை செய்தல், சொத்துக்கள் சூறையாடப்படல், மானம் மரியாதை சீரழிக்கப்படல், கொலைகள், குத்துவெட்டுக்கள் இவை அனைத்திற்கும் மூல காரணம் உலகஆசையே என்றால் அது மிகையாகாது. அதன் பின்னணியில் ஷைத்தான் செயல்படு கின்றான். என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

12. காதல் பாடல்களும், இசையும்

இசையும், காதலைத் தூண்டக்கூடிய பாடல்களும், ஷைத்தான் மனிதர்களின் உள்ளங்களை வழிகெடுக்கப் பயன்படுத்தும் வழி முறைகளாகும். இமாம் இப்னு கையும் (ரஹ்) அவர்கள் இந்த விடயத்தில் பின்வருமாறு கூறியுள்ளர்கள்:

“அல்லாஹ்வின் விரோதியான ஷைத்தானின் சதிவலையில் மனிதர்களை சிக்கவைப்பதற்காக அவன் பயன்படுத்தும் கவர்ச்சிகரமான ஒரு ஏற்பாடுதான்

அல்குர்ஆனை செவிமடுப்பதைவிட்டும் மனிதர்களை தடை செய்யும் இசைக் கருவிகளின் துணையோடு பாடப்பட்ட பாடல்களை செவி மடுக்கத் தூண்டுவதும், இசைகளை ரசிக்கச் செய்வதும், காதல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய பாடல்களை அரங்கேற்றுவதுமாகும்.

இசைக் கருவிகள் மூலம் பாடப்பட்ட பாடல்கள் ஷைத்தானுடைய வேதவாக்கு, அதன் மூலம் விபச்சாரம் ஓரினச்சேர்க்கை, போதைப் பொருள்பாவனை என ஏனைய கேளிக்கைகளை தூண்டும் சாதன மானவும் அமைந்துள்ளது.

மனிதனின் உள்ளத்தை ஷைத்தான் எவ்வாறு சென்றடைகின்றான். வஸ்வாஸ் - ஊசலாட்டம்

ஷைத்தான் மனிதனுடைய உள்ளத்திலும், சிந்தனையிலும் எவ்வாறு ஊடுறுவிச் செல்கின்றான் என்பதை ஆய்வு செய்யுமிடத்து எங்களால் அறியமுடியாத வழிகளின் மூலம் மனிதனின் உள்ளத்தைச் சென்ற டைகின்றான். இதைத்தான் வஸ்வாஸ், ஊசலாட்டம் என்று கூறப்படும். இதைப் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது

مِــــنْ شَــــرِّ الْوَسْــــوَاسِ الْخَنَّـــاسِ الَّــــذِي يُوَسْــــوِسُ فِــــي صُــــدُورِ
النَّـــاسِ مِــــنَ الْجِنَّـــةِ وَالنَّـــاسِ

"மறைந்து கொண்டு தீய எண்ணங்களை ஏற்படுத்துபவனின் தீங்கை விட்டும் பாதுகாவல் தேடுகின்றேன் என்று கூறுவீராக!. அவன் மனிதனின் உள்ளத்தில் தீய எண்ணங்களை ஏற்படுத்துகின்றான், ஜின்களிலும் மனிதர்களிலும் இத்தகையோர் உள்ளனர்.
(114: 4,5,6)

இப்னு கதீர் எனும் தப்ஸீரில் , இதற்கு விளக்கம் எழுதுகையில்: "ஷைத்தான் மனிதனின் உள்ளத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டி ருக்கின்றான். அவன் அல்லாஹ்வை மறந்தநிலையில் இருந்தால் பல்வேறுஊசலாட்டங்களை ஏறபடுத்துகின்றான். அல்லாஹ்வை திக்ர்- நினைவு கூர்ந்தால்பின்வாங்கி , மறைந்து விடுகின்றான். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.:ஒரு மனிதனுடைய இரத்தம் ஓடும் இடமெல்லாம் ஷைத்தான் ஓடிக்கொண்டிருக்கின்றான்." (புஹாரி)

இவ்வாறான ஊசலாட்டத்தின் மூலம் தான், ஷைத்தான் நபி ஆதம் (அலை) அவர்களை வழிகெடுத்து தடுக்கப்பட்ட மரத்தின் கனியை புசிக்கச் செய்தான். என்பதை சூறா தாஹா 120 வது வசனம் சுட்டிக்காட்டுகின்றது. சிலவேளை ஷைத்தான் மனித உருவத்தில் தோன்றி மனிதனுடன் உரையாடி ஏவல், விலக்கல்களை செய்த நிகழ்வுகளும் பல இடம் பெற்றுள்ளன.

08

ஷைத்தானுடன் போராடுவதற்கு ஒரு முஃமினுக்கு அவசியம் தேவையான ஆயுதங்கள்

1. எச்சரிக்கையும், அவதானமும்

மிகவும் கேவலமான நரித்தந்திரமுள்ள இந்தஎதிரி, மனித சமுதாயத்தை வழிகெடுப்பதையே இலக்காகக் கொண்டு முழு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றான். அவனது குறிக்கோள்கள், மற்றும் மனிதனை வழிகெடுப்பதற்காகப் பயன்படுத்தும் சாதனங்கள் என்பவற்றை ஏற்கனவே அறிந்துள்ளோம். இந்த எதிரியின் சதிதிட்டங்கள் மனிதனை வழி கெடுப்பதற்கான சாதனங்கள் எவை என்பவற்றை எந்த அளவு அறிந்து வைத்துள்ளோமோ அந்த அளவு நாம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு மனிதன் இந்த விடயங்களை மறந்து அவதானமில்லாமல் நடந்து கொள்ளும் போது அவனது எதிரியான ஷைத்தான் அவனை விரும்பிய வழியில் திசை திருப்பி சிறைக்கைதியாக்கி அவனை மிகைத்து விடுகின்றான்.

2. அல்குர்ஆன், சுன்னாவின் போதனைகளை பின்பற்றி நடத்தல்

ஷைத்தானின் தீங்குகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு அல்குர்ஆன், சுன்னாவின் போதனைகளை அறிந்து அமல் செய்வதைவிட சிறந்த பாதுகாப்பு வேறுஎதுவும் இருக்கமுடியாது.

அல்குர்ஆனும், சுன்னாவும் நேரான வழியை எமக்கு முன்வைத்துள்ளன. இந்த நேர்வழியை விட்டும் எம்மைதிசைதிருப்ப ஷைத்தான் எம்மோடு போராடிக் கொண்டிருக்கின்றான். இதுபற்றி அல்குர்ஆன் பின்வருமாறு தெளிவு படுத்துகின்றது.

"இதுவே எனது நேரான வழி, எனவே இதனையே பின்பற்றுங்கள் பல வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை அவனது ஒரு வழியை விட்டும் உங்களை பிரித்துவிடும். நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுவதற்காக இதனையேஅவன்உங்களுக்கு வலியுறுத்துகின்றான்." (06: 153)

மேற்படி அல்குர்ஆன் வசனத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு விளக்கிக்காட்டினார்கள். அன்னார் நிலத்தில் தனது கரத்தால் ஒரு கோடுகீறி இது நேரான அல்லாஹ்வுடையபாதை, என்று கூறிவிட்டு அந்தக் கோட்டுக்கு வலதுபுறமாகவும், இடதுபுறமாகவும் பல கோடுகளை கீறி இவைகள் பல வழிகள் இந்த வழிகள் ஒவ்வொன்றிலும் ஷைத்தான் நின்றுகொண்டு அதன்பால் அழைப்பு விடுத்துக் கொண்டே இருக்கின்றான் என்று கூறி, இதுவே எனதுநேரான வழி, அதனையே பின்பற்றுங்கள், பல வழிகளை பின்பற்றாதீர்கள். அவை அவனது (ஒரு) வழியைவிட்டும்பிரித்து விடும்" எனும்வசனத்தை நபியவர்கள் ஓதிக்காண்பித்தார்கள். (முஸ்னத் அஹ்மத், ஹாகிம், நஸாயீ)

அல்லாஹ்வின் மூலமும், அவனது தூதரின் மூலமும், எமக்கு வழிகாட்டப்பட்ட இஸ்லாமிய அடிப்படைக் கொள்கை பற்றிய அறிவுகளும், அமல்களும், இபாதத்களும் மார்க்கத்தின் சட்டதிட்டங்கள் பற்றிய அறிவுகளும் எமக்கு கிடைத்திருக்கின்றன. அவற்றை பின்பற்றி நடப்பதன் மூலமும் எவற்றை செய்யலாம், எவற்றை செய்யக் கூடாது என மார்க்கம் தடைசெய்துள்ளதோ அவற்றை தவிர்த்து நடப்பதும்தான், ஒரு அடியானை ஷைத்தானை விட்டும் பாதுகாக்கும் மிகப்பெரிய கேடயமாகும்.

சொல்லாலும், செயலாலும் அல்குர்ஆன், சுன்னாவைப்பின்பற்றி நடத்தல் ஷைத்தானை விரட்டி மிகக் கடுமையாக அவனை கோபமடையச் செய்யும் ஒரு செயலாகும்.

ஒரு மனிதன் ஸஜதாவுடைய ஆயத்தை ஓதி ஸஜதா செய்தால், ஷைத்தான் அழுது புலம்பி அந்தமனிதனை விட்டும் விலகிச் செல்கின்றான். மேலும் கூறுகின்றான். "எனக்கு ஏற்பட்ட நாசமே! மனிதன் ஸுஜூது செய்யுமாறு ஏவப்பட்டான். அவன் அதற்கு கட்டுப்பட்டு

சுஜூது செய்தான். அவனுக்கு சுவர்க்கம் உண்டு. நான் சுஜூது செய்யுமாறு ஏவப்பட்டிருந்தேன் அதற்கு அடிபணியாமல் மாறு செய்தேன, எனக்கு நரகம் உண்டு" எனக் கூறுவான்" என நபியவர்கள் கூறினார்கள்.

3. அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுதலும், அவனிடமே தஞ்சமடைதலும்

ஷைத்தானதும் அவனதுபட்டாளங்களினதும் தீங்குகளைவிட்டும் பாதுகாப்புப் பெறுவதற்கு மிகச் சிறந்த வழி, ஷைத்தானையும் அடக்கியாளும் வல்ல நாயனான அல்லாஹ்விடமே தஞ்சமடைந்து அவனிடத்திலேயே பாதுகாவல் தேடவேண்டும். இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.:

"ஷைத்தானின் தாக்கம் உமக்கு ஏற்பட்டால் அல்லாஹ்விடமே பாதுகாப்பு தேடுவீராக! அவனே நன்கு செவியுறுபவனும், அறிந் தவனுமாவான்." (07: 200)

அல்லாஹு தஆலா அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களையே ஷைத்தானுடைய தாக்கத்திலிருந்தும், அவனது வருகையைவிட்டும் பாதுகாப்பு தேடுமாறு ஏவியுள்ளான். அது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

"என்இறைவா! ஷைத்தானின் தூண்டுதலை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று கூறுவீராக! என் இறைவா! என்னிடம் அவர்கள்வருவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன். (23: 97,98)

ஷைத்தானின் தூண்டுதல்கள் என்பது அவர்களது உள்ளத்தில் ஏற்படுத்தக்கூடிய தீய எண்ணங்களும், ஊசலாட்டங்களுமே. எனவே மனிதனின் பகிரங்க விரோதியான ஷைத்தானின் தீங்குகளைவிட்டும் பாதுகாவல் தேடுமாறு அல்லாஹ் எமக்கு கட்டளையிட்டுள்ளான். எனவே, நபியவர்கள் ஷைத்தானின் தீங்கைவிட்டும் அடிக்கடி பாதுகாவல் தேடிக் கொண்டே இருப்பார்கள். அதற்காகபல்வேறு

வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி பாதுகாவல் தேடியுள்ளார்கள். இதனால் நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்கு தக்பீர் கட்டிய பின்னால் ஓதும் ஆரம்ப துஆவிலும் பின்வருமாறு ஓதக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

''أَعُـــوْذُ بِـــاللهِ السَـــمِيْعِ الْعَلِيْـــمِ مِـــنَ الشَـــيْطَانِ الـــرَّجِيْمِ مِـــنْ هَمَـــزِهِ وَنَفْخِـــهِ وَنَفْثِـــهِ''

அஊது பில்லாஹிஸ்ஸமீயில் அலீம், மினஷ் ஷைத்தானிர் ரஜீம், மின் ஹமஸிஹி, வநப்கிஹி, வநபதிஹி. (அபூதாவூத், திர்மிதி நஸாயி, இப்னுமாஜா)

கழிவறையில் நுளையும் போது பாதுகாப்பு தேடல்

நபி (ஸல்) அவர்கள் கழிவறையினுள் நுழையும் போதுஆண், பெண் ஷைத்தான்களின் தீங்குகளைவிட்டும் பாதுகாவல் தேடக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

اَللّهُـــمَّ إِنِّـــيْ أَعُـــوْذُ بِـــكَ مِـــنَ الْخُبْـــثِ وَالْخَبَائِـــثِ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினல்குப்தி வல்கபாயிதி

யாஅல்லாஹ்! ஆண், பெண் கெட்ட ஜின், ஷைத்தான்களின் தீங்குகளில் இருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். (புஹாரி, முஸ்லிம்)

கோபம் ஏற்படும் போது பாதுகாவல் தேடுதல்

நபி (ஸல்) அவர்கள் முன்னிலையில் இரு மனிதர்கள் ஒருவர் மற்றொருவரை ஏசிவிட்டார். அவர்களில் ஒருவருக்கு மிகக் கடுமையாக கோபம் ஏற்பட்டுவிட்டது. அவ்விருவரில் ஒருவர் கோபத்தினால் அவரது மூக்கைதுண்டித்துக் கொள்வாரோ, என நான் (ஹதீஸ் அறிவிப்பாளர்) கற்பனை பண்ணும் அளவுக்கு கடுமையாக கோபப்பட்டார். இதைக் கண்ணுற்ற நபியவர்கள் எனக்குஒருவார்த்தை தெரியும் அதனை அந்த மனிதன் கூறினால்

அவனுக்கு ஏற்பட்ட கடுமையான கோபம் போய்விடும் என்று நபியவர்கள் கூறிய போது அல்லாஹ்வின் தூதரே! அது என்ன வார்த்தை என வினவினார்கள்.

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

“அல்லாஹுைம்ம இன்னி அஊது பிக மினஷ் ஷைத்தானிர் ரஜீம்” எனக் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

யாஅல்லாஹ்! சபிக்கப்பட்ட ஷைத்தானின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

எனவே கோபம் ஏற்படும் போது ஷைத்தானின் தீங்கிலிருந்து அல்லா‘விடம் பாதுகாவல் தேடும்படி மேற்படி சம்பவம் எமக்கு வலியுறுத்துகின்றது. அவ்வாறே கணவன் தனது மனைவியுடன் ஒன்று சேரக்கூடிய நேரத்திலும் ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாவல் தேடுமாறு ஆர்வமூட்டியுள்ளார்கள்.

“بِسْمِ اللَّهِ ، اَللّٰهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا”

பிஸ்மில்லாஹ்! அல்லாஹுைம்ம ஜன்னிப்னாஷ்ஷைத்தான வஜன் னிப்பிஷ் ஷைத்தான மாரஸக்தனா

இவ்வாறு ஓதிக் கொண்டால் அந்த தொடர்பின் மூலம் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தால் ஷைத்தானின் பாதிப்பு ஒரு போதும் அக்குழந்தைக்கு ஏற்படமாட்டாது. என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி, முஸ்லிம்)

அவ்வாறே ஒருமனிதன் ஒருவீட்டில் அல்லது ஒருபள்ளத்தாக்கில் தங்க வேண்டியேற்பட்டால் அவன் ஷைத்தானின் தீங்கிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல்தேட வேண்டும் எனவும் இஸ்லாம் எமக்கு வலியுறுத்துகின்றது. அதற்கு மாறாக அறியாமைக்கால சமூகத்தை சேர்ந்த மக்கள் ஓரிடத்தில் தங்க வேண்டியேற்பட்டால் ஜின், ஷைத்தான்களிடமே பாதுகாவல் தேடும்வழக்கம் இருந்தது.

அவ்வாறு செய்யும் போது அங்கிருக்கும் ஜின்களுக்கு கர்வம் ஏற்பட்டு அந்த மனிதர்களுக்கு தீங்கு செய்யக் கூடியவைகளாக மாறுகின்றனர். இதுபற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

"மனிதர்களில் உள்ள ஆண்களில் சிலர் ஜின்களில் உள்ள சில ஆண்களை கொண்டு பாதுகாப்பு தேடிக்கொண்டிருந்தனர். எனவே இவர்களுக்கு கர்வத்தை அவர்கள் அதிகமாக்கிவிட்டனர்." (72:06)

எனவே ஜின்களிடம் உதவி தேடாமல் நபியவர்கள் காட்டித்தந்த வழிமுறையைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும்.

"உங்களில் ஒருவர் ஒரு இடத்தில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டால்

أَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ مِنْ شَرِّ مَا خَلَقَ

அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மத்தி, மின் ஷர்ரி மா கலக்" என்று ஓதினால் அவர் அந்த இடத்திலிருந்து செல்லும் வரை அவருக்கு எந்த தீங்கும் ஏற்பட மாட்டாது. என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (இப்னு மாஜா)

அல்குர்ஆனை ஓதும் போது பாதுகாவல் தேடல்

அல்குர்ஆனை ஓத ஆரம்பிக்கும் போதுஷைத்தானுடைய கெடுதி யிலிருந்து பாதுகாவல் தேடுமாறு அல்லாஹு தஆலா கட்டளை யிட்டுள்ளான். "நீர்குர்ஆனை ஓதும் போது விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடிக்கொள், நம்பிக்கை கொண்டோர் மீதும் தமது இறைவனையே சார்ந்திருப்போர் மீதும் அவனுக்கு அதிகாரம் கிடையாது." (16 : 98, 99)

அல்குர்ஆனை ஓதும் போது ஷைத்தானுடைய தீங்கைவிட்டும் பாதுகாவல் தேடுவதற்கான தத்துவங்கள் இமாம் இப்னு கையும் (ரஹ்) அவர்கள் தனது "இகாததுல் லஹ்பான்" எனும் நூலில் 1/109 பக்கத்தின் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

1. *அல்குர்ஆன் உளநோய்களுக்கு நிவாரணியாகும். மேலும் ஷைத்தான் உள்ளங்களில் ஏற்படுத்தக்கூடிய ஊசலாட்டங்கள், மனோ இச்சைகள், தவறான திட்டங்கள் போன்றவற்றை போக்கக்கூடிய ஒரு சாதனமுமாகும். ஷைத்தான் எவற்றை யெல்லாம் ஏவுவானோ அவற்றைப் போக்கும் அரு மருந்தாகும்.*

எனவே நோயை ஏற்படுத்தக்கூடிய மூலப்பொருளை போக்கி உள்ளத்தை தூய்மைப்படுத்தினால் அந்த உள்ளத்தில் அல்குர் ஆன் ஊடுருவிச்சென்று தாக்கத்தை ஏற்படுத்தும்.

2. மேலும் அல்குர்ஆனை ஓதக்கூடியவரை நெருங்கி மலக்கு மார்கள் சமுகமளித்து அதனை செவியேற்கின்றார்கள். உதாரணமாக உஸைத் பின் ஹுழைர் (ரழி) அவர்களின் சம்பவத்தோடு தொடர்பான ஹதீஸில் அவர் அல்குர்ஆனை ஓதும் போது மேகத்தில் ஒரு நிழல் தோன்றி அதிலே ஒளி விளக்குகள் தென்படுவது போலும் கண்ணுற்றார்கள். அதனைப் பற்றி நபியவர்கள் அது தான் மலக்குமார்கள் என்று கூறினார்கள்.

எனவே ஷைத்தான் மலக்குகளுக்கு எதிரானவன். அவர்களுக்கு விரோதி எனவே அல்லாஹ் அல்குர்ஆனை ஓதக் கூடியவரை விட்டும் தூரமாக வேண்டும் படி கட்டளையிட்டுள்ளான். இதனால் குறிப்பிட்ட மலக்குகள் அங்கே சமுகமளிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இது மலக்குகளும், ஷைத்தான்களும் ஒன்று சேர முடியாத ஒரு சந்தர்ப்பமாகும்.

3. ஷைத்தான் அவனது குதிரைப் படை மற்றும் காலாட்படை களை கொண்டு வந்து அல்குர்ஆனை ஓதக்கூடியவரை அதனை ஓதுவதைவிட்டும் பராக்காக்கக்கூடிய ஒரு வாய்ப்பாக அமைத்துவிடுவான் மேலும் அதனை ஓதக்கூடியவர் அதனுடைய கருத்தை உணர்ந்து சிந்தித்து படிப்பினை பெறவும், அந்த வசனத்தின் மூலம் அல்லாஹ் எதனை நாடுகின்றான். என்ப தையும் சிந்திக்கவிடாமல் ஷைத்தான் முழு முயற்சியுடன் அவனது உள்ளத்திற்கும், குர்ஆனுடைய நாட்டத்திற்கு மிடையில் தடையை ஏற்படுத்த முயல்கின்றான்.

எனவே தான் அல்குர்ஆனை ஒத ஆரம்பிக்கும் போது அந்த சபிக்கப்பட்ட ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாவல் தேடுமாறு எமக்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

4. மேலும்ஒருமனிதன் அல்குர்ஆனைஓதும் போது அல்லாஹ் வோடு சம்பாசனை - உரையாடுகின்றான். எனவே அழகிய குரலில் இராகம் எடுத்து ஓதக்கூடிய ஒருவருடைய கிராஅத்தை மிகவும் ரசித்து செவிதாழ்த்துகின்றான். இதற்கு மாறாக ஷைத்தானுடைய கிராஅத் என்பது இசையும், கவிதைகளுமே.

எனவே அல்குர்ஆனை ஓதக்கூடியவர் அந்தறப்புடன் உரையாடும் போது ஷைத்தானுடைய தீங்கிலிருந்து பாதுகாவல் தேடுமாறு எம்மைப் பணித்துள்ளான்.

5. மேலும் அல்குர்ஆனை ஒருஅடியான் ஓதும்போது சில வேளை தப்பும் தவறுமாக ஓதச்செய்துவிடலாம் அல்லது அவனது சிந்தனையைக் குழப்பி பல்வேறு தீய சிந்தனைகளை ஏற்படுத்தலாம்.

எனவே நாம் ஷைத்தானின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு தேடிக் கொண்டு அல்குர்ஆனை ஓதும் போது அவ்வாறான நிலைமை களிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.

6. ஒரு அடியான் ஒரு நல்ல காரியத்தை செய்ய முற்படும் போதுதான் ஷைத்தான் அவனை குழப்ப முயல்வான். அல்லது அவனை அதை செய்யவிடாமல் திசை திருப்பி விடுவான். எனவே நாம் அவனது தீங்கிலிருந்து பாதுகாப்பு தேடுமாறு வேண்டப்பட்டுள்ளோம்.

(இகாததுல் லஹ்பான், இப்னு கையும்)

சிறு பிள்ளைகளுக்கும் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் ஓதிப்பார்த்தல்

நபி (ஸல்) அவர்கள் அவர்களது தமது பேரக்குழந்தைகளான ஹஸன், ஹுஸைன் ஆகிய இருவருக்கும் பாதுகாப்புத்தேடி ஓதிப் பார்க்கக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

أُعِيْـــذُكَماَ بِكَلِمَــــاتِ اللهِ التَّامَّـــةِ مِـــنْ كُـــلِّ شَـــيْطَانٍ هَامَّـــةٍ وَمِـــنْ كُـــلِّ عَيْـــنٍ لاَمَّـــةٍ

உயீதுகுமா பிகலிமாதில்லாஹித்தாம்மத்தி மின்குல்லி ஷைத்தானின் ஹாம்மா வமின்குல்லி அய்னின் லாம்மா

என்று ஓதிவிட்டு எனது தந்தை இப்ராஹீம் (அலை) அவர்கள் இவ்வாறுதான் (அவர்களதுமக்களான) இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியவர்களுக்கு ஓதிப்பார்ப்பவர்களாக இருந்தார்கள். என்று கூறினார்கள். (புஹாரி,முஸ்லிம்)

மேலும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களிடம் வந்து முஹம்மதே! நோய் வாய்பட்டுவிட்டீர்களா? என்று வினவினார்கள். இதற்கு ஆம்என்று நபி (ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள். அதற்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள்

بِسْمِ اللهِ أَرْقِيْكَ مِنْ كُلِّ شَيْءٍ يُؤْذِيْكَ مِنْ شَرِّ كُلِّ نَفْسٍ, أَوْعَيْنِ حاسِدٍ، الله يَشْفِيْكَ

பிஸ்மில்லாஹி அர்கீக, மின்குல்லிஷையின் யூஃதீக,வமின் ஷர்ரிகுல்லி நப்சின், அவ்அய்னின் ஹாசிதின் அல்லாஹு யஷ்பீக என்று ஓதிப்பார்த்தார்கள். (முஸ்லிம்)

இதன் பொருள் : அல்லாஹ்வின் பெயரால் உமக்கு நான் ஓதிப் பார்க்கிறேன். உமக்கு தீங்களிக்கக்கூடியவற்றை விட்டும் பொறா மைப்படும் ஒவ்வொரு மனிதனின் தீங்கை விட்டும், ஒவ்வொரு கண்ணேறுகளின் தீங்கைவிட்டும் அல்லாஹ் உமக்கு சுகம் அளிப் பானாக அல்லாஹ்வின் பெயரால் ஓதிப்பார்க்கின்றேன்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இன்றிரவு எனக்கு சில வசனங்களை அல்லாஹ் இறக்கி வைத்தான். அவை மிகவும் விஷேசமானவை என எனக்குத் தோன்றுகின்றன என்றுகூறி அவ்விரு அத்தியாயங்களின்பெயர்களைக் கூறினார்கள். (முஸ்லிம், திர்மிதி)

இவ்விரு அத்தியாயங்களளையும் நபி (ஸல்) அவர்கள் காலைத் தொழுகையில் ஓதி வந்திருக்கிறார்கள். இவ்விரு அத்தியாயங்களும் இறங்குவதற்கு முன்னர் அவர்கள் கண்ணேறு நீங்குவதற்கு

வேறு துஆக்களை ஓதி, கண்ணேறு பீடிக்கப்பட்டவர்கள் மீது ஊதுவார்கள். (ஆதாரம் : திர்மிதி, ஹாக்கிம்) அவ்விரு அத்தியா யங்களும் சூரத்துல் பலக், சூரதுல் நாஸ் ஆகியவைகளாகும். (குல்அஊது பிறப்பில் பலக், குல்அஊது பிறப்பின்னாஸ்)

நாம் அடிக்கடி ஷைத்தானின் தீங்கைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக்கொண்டே இருக்கவேண்டும். ஏனெனில் மனிதர் களைப் படைத்த அல்லாஹ்வே ஜின், ஷைத்தானையும் படைத்துள்ளான். எனவே, படைத்த எஜமானனிடம் எமது காரியங்களை ஒப்படைத்து விட்டால் வெற்றி பெறலாம். மாறாக ஷைத்தானை நாம் எதிர்த்துப் போராடி வெல்ல முடியாது.

உதாரணமாக, ஒருவருடைய வீட்டுவாயலில் ஒருகுரைக்கக்கூடிய நாய் ஒன்று இருந்தால் அந்த வீட்டுக்கு நாம் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டால் இந்த நாயோடு போராடி எமது காரியத்தை சாதிக்க முடியாது. மாறாக அந்த நாயுடைய உரிமையாளரை தொடர்பு கொண்டு உங்களது நாயைப் பிடியுங்கள்! என்று கூறி அவருடைய பாதுகாப்பில் அந்த வீட்டுக்குச் செல்வது மிகஎளிமையானதாக அமையும்.

ஒரு சந்தேக நிவர்த்தி

சிலர் கேட்கலாம் நாங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடி ஷைத்தானின் தீங்கை விட்டும் பாதுகாவல் தேடுகின்றோம். ஆனால் ஷைத்தான் எங்களுக்கு ஊசலாட்டங்களை ஏற்படுத்திக் கொண்டும், கெடுதி களை செய்யத்தூண்டிக் கொண்டும், தொழுகையை விட்டும் பராக்காக்கிக் கொண்டுமிருக்கின்றான் அதற்கான காரணம் யாது என வினவலாம். அதற்கானபதில்:

பாதுகாவல் தேடுவது என்பது ஒரு யுத்த வீரனின் கையிலிருக்கும் ஒரு ஆயுதத்தைப் போல, வைத்திருப்பவன் பலசாலியாகவும், அதை பயன்படுத்த தெரிந்தவனுமாக இருந்தால் அவனது எதிரியை அதன் மூலம் தாக்கி கொலை செய்யலாம் மாறாக அவன் பலவீனமான வனாக, அல்லதுஅந்தஆயுதத்தை பயன்படுத்தத் தெரியாதவனாக இருந்தால் அதனால் எதிரிக்கு எத்தகையபாதிப்பும் ஏற்படப்போ வதில்லை. ஆயுதம் எவ்வளவு உறுதியானதாக இருந்தாலும் பயனில்லை.

இவ்வாறே அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடக்கூடிய மனிதன் பேணுதல் உள்ள இறையச்சமுள்ளவனாக இருந்தால் அவனது பாதுகாப்பு தேடல் மூலம் ஒருநெருப்பு உருவாகி ஷைத்தானை எரித்துவிட வாய்ப்பாக அமையும். மாறாக பலவீனமான ஈமான் உள்ள அல்லது பாவியான மனிதன் மூலம் அந்த பாதுகாப்பு தேடல் முன் வைக்கப்படும் போது அது எதிரியிடம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது.

எனவே, ஷைத்தானிடமிருந்தும் அவனது சதிகளிலிருந்தும் ஈடேற்றம் பெறநாடிய ஒரு மனிதன், அவனது ஈமானை உறுதிப்படுத்தி அல்லாஹ்வுடனான தொடர்பை பலப்படுத்திக்கொண்டால் அவன் அல்லாஹ்விடம் கேட்கும் பாதுகாப்பு வெற்றியளிக்கும். இன்ஷா அல்லாஹ்

அல்லாஹ்வை திக்ர்செய்வதில் ஈடுபடுதல்

அல்லாஹ்வை திக்ர் நினைவு கூறுவதும் சந்தர்ப்ப துஆக்களை ஓதிக்கொள்வதும் ஷைத்தானுடைய தீங்குகளிலிருந்து ஒரு மனிதனைப் பாதுகாப்பதற்கானமிகப் பெரிய கேடயமாகும்.

ஷைத்தான் திக்ர் செய்யும் உள்ளங்களை விட்டும் தூரமாகி விடுகின்றான். ஒரு மனிதன் அல்லாஹ்வை திக்ர் செய்தால் அவனது கர்வம் அடங்கி சிறியவனாக ஆகிவிடுகின்றான். ஒரு சிட்டுக் குருவியை போல அல்லது அதைவிட சிறு கொசுவைப் போல மாறிவிடுகின்றான்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் தான் கண்டகனவு பற்றி விபரித்த ஒரு நீளமான ஹதீஸில் எனது உம்மத்தைச் சேர்ந்த ஒரு மனிதரைக் கண்டேன். அவனை ஷைத்தான்கள் சூழ்ந்து வட்டமிட்டுக் கொண் டிருந்தார்கள். அவன்செய்ததிக்ர் அங்கு வந்து ஷைத்தான்களை விரட்டி அவனைப்பாதுகாத்தது. என்று கூறினார்கள்.
(அத்தர்கீப் பீகஸாலில் முன்ஜியா)

மேலும் அல்லாஹ்வை திக்ர்செய்வதைக் கொண்டு உங்களுக்கு நான் கட்டளையிடுகின்றேன். அதற்கு உதாரணம் : ஒரு மனிதனை அவனது எதிரிகள் தேடி அவனைப் பின்தொடர்ந்து செல்லும் போது அவன் விரைந்துசென்று, ஒரு பாதுகாப்பான கோட்டைக்குள் புகுந்து தன்னைப்பாதுகாத்துக் கொண்டான். இவ்வாறு தான் திக்ர் செய்யாத அல்லாஹ்வின் சிந்தனை விட்டும் விலகி இருக்கக் கூடிய உள்ளங்களை ஷைத்தான்கள் ஆக்கிரமிப்பதும் அந்த மனிதன் திக்ர் செய்யத் தொடங்கிவிட்டால் ஷைத்தான்கள் தூரமாகி விலகிச் செல்வதையும் போல என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு மனிதன் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது

بِسْمِ اللهِ ،تَوَكَّلْتُ عَلَى اللَّهِ لاَحَوْلَ وَلاَقُوَّةَ إِلاَّ بِاللَّهِ

என்று துஆவை ஓதினால் உனதுவேலை முடித்து வைக்கப்பட்டது. மேலும் நீ நேர்வழி காட்டப்பட்டாய் நீ பாதுகாப்புப் பெற்றுவிட்டாய், என்று கூறப்பட்டு ஷைத்தான் அவனை விட்டும் தூரவிலகிச் செல்கின்றான். ஒரு ஷைத்தான் மற்ற ஷைத்தானை நோக்கி நேர்வழி காட்டப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மனிதனிடத்தில் இனி எப்படி நெருங்க முடியும் எனக் கூறுகிறான். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அபுதாவுத், நஸாயீ, திர்மிதி)

மேலும் எவர் ஒரு நாளைக்கு நூறுவிடுத்தம்:

لَاإِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لاَشَرِيْكَ لَهُ ،لَهُ الْمُلْكُ ،وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

என்று ஓதிவந்தால் மாலையாகும் வரை அவன் ஷைத்தானின் தீங்கை விட்டும் பாதுகாக்கப்பட்டவனாக ஆகிவிடு கின்றான். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் ஒரு நாள்இரவு நபி (ஸல்) அவர்கள் ஒரு மலையடிவாரத்தில் நின்று கொண்டிருக்கும் போது சில ஷைத்தான்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். அதில் ஒரு ஷைத்தானுடைய கையில் ஒரு நெருப்புப் பந்தத்தை எடுத்துக்கொண்டு வந்து நபியவர்களின் முகத்தை சுட்டு எரிக்க நெருங்கிக் கொண்டிருந்தான். உடனே ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கி வந்து முஹம்மதே! கூறுவீராக எனக்கூற, நான் எதைக் கூறவேண்டும் என நபியவர்கள் வினவினார்கள் நீங்கள்..,

اَعُــــوْذُ بِكَلِمَـــــاتِ اللهِ التَّامَّـــــاتِ الَّتِــــيْ لَـــا يُجَـــاوِزُهُنَّ بَــــرٌّ وَلَـــا فَـــاجِرٌ مِــنْ شَــرِّ مَـــا خَلَــقَ وَبَــرَأَ وَذَرَأَ وَ مِــنْ شَــرِّ مَـــا يَنْــزِلُ مِــنَ السَّــمَاءِ وَمِـــنْ شَــرِّ مَـــا يَعْــرُجُ فِيْهَـــا وَمِـــنْ شَــرِّ مَـــاذَرَأَ فِــيْ الْــأَرضِ وَمِـــنْ شَــرِّ مَـــا يَخْــرُجُ مِنْهَـــا وَمِـــنْ شَــرِّ فتَـــنِ اللَّيْـــلِ والنَّهَـــارِ وَمِـــنْ شَــرِّ كُــلِّ طَـــارِقٍ إِلَّـــا طَـــارِق يطْـــرُقُ بِخَيْـــرٍ يَـــا رَحْمَـــنْ"(مسند أحمد)

அஊது பிகலிமாதில்லாஹித்தாம்மாத்தில்லதீ லாயுஜாவி சுஹுன்ன பர்ருன், வலாபாஜிருன் மின்ஷர்ரிமாகலக, வபரஅ, வதரஅ, வமின் ஷர்ரிமாயன்சிலுமினஸ்ஸமாயி, வமின் ஷர்ரி மாயஃருஜுபீஹா, வமின் ஷர்ரிமாதரஅ பில்அர்ளி, வமின் ஷர்ரி மாயக்ருஜுமின்ஹா, வமின் ஷர்ரி பிதனில்லைலி வன்ன ஹாரி வமின்குல்லிதாரிகின் இல்லா தாரிகன் யத்ருகு பிகைரின் யாரஹ்மான்.

இதன்பொருள் : நல்லோராலும், தீயோராலும், மீறிவிட முடியாத அல்லாஹ்வின் பரிபூரண வார்த்தைகளைக் கொண்டு, அவன் படைத்த, உருவாக்கிய, பல்கிப் பெருகிய அனைத்தின் தீங்கை விட்டு (பாதுகாவல்தேடுகிறேன்) வானத்திலிருந்து இறங்கும் அனைத்தின் தீங்கைவிட்டும் (பாதுகாவல்தேடுகிறேன்) வானத்திலிருந்து ஏறும் அனைத்தின் தீங்கைவிட்டும் பாதுகாவல் தேடுகிறேன், பூமியில் அவன் பரப்பிய அனைத்தின் தீங்கைவிட்டும் (பாதுகாவல் தேடுகிறேன்) பூமியிலிருந்து வெளியேறும் அனைத்தின் தீங்கை விட்டும் (பாது காவல் தேடுகிறேன்) இரவு மற்றும் பகலுடைய குழப்பங்களின் தீங்கைவிட்டும் (பாதுகாவல் தேடுகிறேன்) இரவில்வரும் ஒவ்வொருவரின் தீங்கைவிட்டும் (பாதுகாவல் தேடுகிறேன்) ஆனால் நன்மையுடன் வருபவரை உன்னிடம் கேட்கிறேன் அளவற்ற அருளாளனே!

என்பதைக் கூறுங்கள் எனக்கூற நபியவர்கள் அதனைக்கூறியதும் அவனுடைய நெருப்பு அணைந்தது. அவனை அல்லாஹ் தோல்வி யடையச் செய்தான். (அஹ்மத்)

எனவே, ஜின் ஷைத்தான்களின் சேட்டைகளைக்கண்டு அஞ்சுப வர்கள் அல்லது ஏதாவது ஒரு பொருளைக் கண்டு பயந்தால் இந்த

துஆவை ஓதுவது சுன்னதாகும். ஜின், ஷைத்தான்களின் தீங்கி லிருந்து பாதுகாப்புத் தேடும் நோக்கத்தில் காலை, மாலை இந்த துஆவை ஓதிக்கொள்ள வேண்டும்.

இரவில் உறங்கும் போதும் உறங்குவதிலிருந்து விழித்திருக்கும் வரை ஏற்படும் போராட்டம்.

உங்களில் ஒருவர் தமதுபடுக்கை விரிப்புக்கு (இரவில்) சென்றால் அவரிடம் ஷைத்தானும் ஒரு மலக்கும் விரைந்து செல்கின்றனர். நீ விழித்திருக்கும் நேரத்தை தீயதைக் கொண்டு முடித்துவை! என ஷைத்தான் அவனைப்பார்த்துக் கூற. நல்லதைக் கொண்டு முடித்துவை! என மலக்குஅவரிடம் கூறுவார், அவருக்கு தூக்கம் மிகைக்கும் வரை அல்லாஹ்வை திக்ர் செய்தால். மலக்கு ஷைத் தானை விரட்டிவிட்டு, அவரைப் பாதுகாத்தவராக மலக்கு அவருடன் தங்கிவிடுகின்றார்.

அவன் காலையில் கண் விழித்தால் மலக்கும், ஷைத்தானும் விரைந்து வந்து நல்லதைக் கொண்டு உனது விழிப்பை ஆரம்பம் செய், எனக்கூற. தீயதைக் கொண்டு உனது விழிப்பை ஆரம்பம் செய் எனஷைத்தான் கூறுவான். அந்த மனிதன் கண்விழித்து

اَلْحَمْــــدُ للهِ الَّـــــذِيْ أَحْيَـــا نَفْسِــــيْ بَعْــــدَ مَوْتِهَـــا وَلَـــمْ يُمِتْهَـــا فِـــيْ مَنَامِـــه

اَلْحَمْـــــدُ لِلَّـــــه الَّـــــذِيْ يُمْسِـــكُ الَّتِـــيْ قَضَـــى عَلَيْهَـــا الْمَـــوْتَ
وَيُرْسِـــلُ الأخْـــرَى إِلَـــى أَجَـــلٍ مُسَـــمًّى

اَلْحَمْـــــدُ لِلَّـــــه الَّـــــذِيْ يُمْسِـــكُ السَّـــــمَاوَاتِ وَالأَرضَ أَنْ
تَزُوْلَـــا,وَلَئِنْ زَالَتَـــا إِنْ أَمْسَـــكَهُمَا مِـــنْ أَحَـــدٍ مِـــنْ بَعْـــدُ

اَلْحَمْـــدُ لِلَّـــه الَّـــذِيْ يُمْسِـــكُ السَّـــمَاءَ أَنْ تَقَـــعَ عَلَـــى الأَرضِ إِلَّـــا بِإِذْنِـــهِ

என்ற துஆவை ஓதினால், ஷைத்தானை மலக்கு விரட்டி அவரைப் பாதுகாத்துக் கொண்டே இருப்பார். என்றும் மற்றுமொரு ரிவாயத்தில் அவன் தூங்கும்போது கட்டிலிருந்து விழுந்து மரணித்தால் அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விடுவார். என்பதாகவும் மற்றுமொரு ரிவாயத்தில் அன்றைய தினம் அவர் வாகனத்திலிருந்து விழுந்து மரணித்தால் ஷஹீதாக மரணிப்பார். அவர் எழுந்து தொழுதால் பல சிறப்புக்களை

அடைந்தவராக தொழுவார். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (மஜ்மஉஸ்ஸவாயித், அல்ஹாகிம், இப்னுஹிப்பான்)

எனவே, மேற்கூறப்பட்ட ஹதீஸ் எமக்கு பின்வரும் விடயங்களை உணர்த்துகின்றது,

1. *தூங்கும் போதும், விழிக்கும் போது மலக்குக்கும், ஷைத் தானுக்கும் இடையில் போராட்டம் நடைபெறுகிறது.*

2. *எமது விழிப்பின் முடிவும் ஆரம்பமும் தீயதாக அமைய வேண்டு மென ஷைத்தான் பிரயத்தனங்களை எடுக்கிறான்*

3. *அல்லாஹ்வின் பெரும் கருணையினால் அல்லாஹ் மலக்கை அனுப்பி அவனது விழிப்பின் முடிவும் ஆரம்பமும் நல்லதாக அமைய வேண்டுமென பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்கிறான்*

4. *தூங்கும் போதும் விழித்திருக்கும் போதும் திக்ர், துஆக்களை ஓதுவதினால் ஷஹீதுடைய அந்தஸ்து கிடைக்கிறது.*

இதற்கு மாறாக அநேகமானவர்கள் தற்காலத்தில் தூங்கும் போது இசைகளையும் சினிமாப் பாடல்களையும கேட்டவண்ணம் அல்லது ஆபாசப் படங்களையும் பார்த்த வண்ணம் தமது விழிப்பை முடித்துக் கொண்டு தூங்குகின்றார்கள். அதிகாலை சுபஹு தொழுகைக்கும் எழும்பாமல் நீண்டநேரம் உறங்கிக்கொண்டே இருக்கின்றனர். இவர்கள் மீது ஷைத்தான்ஆதிக்கம் செலுத்திவிட்டான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஜின்களால் பீடிக்கப்பட்டவர், அல்லது விசஜந்துக்களால் தீண்டப் பட்டவர் அல்லது சூனியத்தால் பாதிக்கப்பட்டவருக்கு ஓதி ஊதும் சூறாக்கள்:

I. *றுக்கியாவுடைய ஆயத்துக்கள்.*

i. *சூரதுல் பாதிஹா*
ii. *சூரதுல் பகரா 1-5 வரை*
iii. *சூரதுல் பகரா 163-164 வரை*

iv. ஆயதுல் குர்ஸி
v. அல் பகரா 285- தொடக்கம் கடைசி வரை
vi. ஆலஇம்ரான் 18வது வசனம்
vii. அல் அஃராப் 45 வது வசனம
viii. அல் முஃமினூன் 115-118 வரை
ix. அஸ்ஸாபாத் 1-10 வரை
x. அல் ஹஷ்ர் 21-24
xi. அல் ஜின் 03 வது வசனம்
xii. அல் இக்லாஸ் (குல்குவல்லாஹ் அஹத்)
xiii. அல் பலக் (குல்அஊது பிறப்பில் பலக்)
xiv. அந்நாஸ் (குல்அஊது பிறப்பின்னாஸ்)

II. ஷிபாவுடைய ஆயத்துக்கள்- 06

i. சூரதுல் தௌபா 14 வது வசனம்
ii. சூரதுல் யூனுஸ் 57 வது வசனம்
iii. சூரதுல் நஹ்ல் 06 வது வசனம்
iv. சூரதுல் இஸ்ரா 82 வது வசனம்
v. சூரதுல் ஷுஅரா 80 வது வசனம்
vi. சூரதுல் புஸ்ஸிலத் (ஹாமீம் ஸஜதா) 44 வது வசனம்

இதற்கான ஆதாரங்கள் ஹாகிம், இப்னுமாஜா, அல்அத்கார், இப்னுப்சுன்னி போன்ற கிதாபுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

பாதிக்கப்பட்டவருக்கு இவற்றை இக்லாஸுடனும் , உறுதியான ஈமானுடனும் ஓதி ஊத வேண்டும். ஒரேநாளில் பலன் கிடைக் காவிட்டால் மூன்றுநாள் அல்லது ஏழு நாள் ஓதி ஊதி, நீரிலும் ஊதிகுடிக்க வேண்டும் நீரில் ஊதும் போது வலது கையை பாத்திரத்தினுள் வைத்து, வாயை நீருக்கு சமீபமாக வைத்து ஓத வேண்டும். மௌனமாக ஓதாமல் சற்றுசத்தமாக் ஓதவேண்டும்.

பின்னர் அந்த நீரை நோயாளிகுடித்து ,உடம்பில்தடவிக்கொள்ளல் அல்லது குளிக்கப்பயன்படுத்தவேண்டும்.

மை போட்டுபார்த்தல்

மறைவான செய்தியை அறியவும் களவுபோன பொருள்களைக் கண்டு பிடிக்கவும், வியாதிகளை அறியவும், ஜின், ஷைத்தான் களைத் துரத்திக்கஷ்டங்களை அகற்றவும், மைபோட்டு பார்க்கும் வழக்கம் இலங்கையில் சிலபகுதிகளிலும், தமிழ் நாட்டிலும் இருந்து வருகின்றது.

இவ்வாறு மை போட்டுப் பார்ப்பவர்கள் இந்தமை வெளிச்சத்தில் மலக்குகள், நபிமார்கள், வலிமார்கள் ஆகியோர்களை மந்திர சக்தியினால் வரவழைத்து அவர்கள் மூலம் தெரிந்து கொள்வதாக கற்பனைபண்ணுகிறார்கள்.

இவ்வாறு மை வெளிச்சம் போட்டுப்பார்ப்பதும், அதைநம்புவதும் இஸ்லாமிய அகீதா கொள்கைக்கு முற்றிலும்முரண்பட்டதாகும். அதில் தோற்றம் பெறுவது அவ்லியாக்கள் என்றோ அல்லது வேறு நல்லடியார்கள் என்றோ நம்புவது மடமை.

சில ஜின் ஷைத்தான்கள் இவர்கள் நினைத்தது போல் அந்தமை வெளிச்சத்தில் காணப்படலாம் அவைகளுக்குத் தெரிந்த விஷயங்களை அவைஅதற்குள் காட்டலாம் ஆனால் அதை நம்புவதற்கு மார்க் கத்தில் அனுமதிக்கப்பட வில்லை. இவ்வாறான மூட நம்பிக் கையில் மூழ்கியிருக்கும் முஸ்லிம்கள் அவற்றிலிருந்து விடுபட்டு அந்தப் பாவத்தில் இருந்து தௌபாசெய்து மீள்வது அவசியமாகும்.

ஷைத்தானின் சிரிப்பு

ஒரு மனிதன் தும்முவதை அல்லாஹ் விரும்புகின்றான். கொட்டாவி விடுவதை அல்லாஹ் வெறுக்கின்றான். எனவே, உங்களில் ஒருவர் தும்மி அல்ஹம்துலில்லாஹ் என்று புகழ்ந்தால்அதைச் செவியுறும் ஒவ்வொரு முஸ்லிமும் யர்ஹமுகல்லாஹ் (அல்லாஹ் உனக்கு ரஹ்மத் செய்வானாக) எனக் கூறுவது கடமையாகும்.

கொட்டாவி விடுவது ஷைத்தானின் மூலம் ஏற்படுவதாகும். எனவே, உங்களில் ஒருவர் கொட்டாவி விட்டால் அவர் இயன்றளவு அதைத் தடுத்துக் கொள்ளவும், ஏனெனில் உங்களில் ஒருவர் கொட்டாவி விட்டால் ஷைத்தான் சிரிக்கின்றான். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (நூல் : புஹாரி)

மற்றுமொரு ரிவாயத்தில் கொட்டாவிவிடும் போது வாயை இயன்றளவு தடுக்காமல் "ஹா" என்று சத்தமாக கூறினால் அவனைப் பார்த்து ஷைத்தான் சிரிக்கின்றான் எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி, முஸ்லிம்)

ஏனெனில் கொட்டாவி என்பது சோம்பேரித்தனத்துக்கான அடையாளம் ஒரு மனிதன் சோம்பேரியாக இருப்பதையே ஷைத்தான் விரும்பு கின்றான். அதன்மூலம் அவன் அல்லாஹ்வை நெருங்கக்கூடிய அமல்களை செய்வதைக் குறைத்துக் கொள்வான் அல்லது விட்டு விடுவான்.

தீவிரப்படுத்தல் ஷைத்தானின் பண்பு

ஷைத்தான் விரும்பக் கூடிய பண்புகளில் ஒன்றாக அவசரப் போக்கு, தீவிரமாக முடிவெடுத்தல் என்ற பண்பு காணப்படுகிறது, இதனால்நபியவர்கள் கூறியுள்ளார்கள். நிதானம் ரஹ்மானிடம் இருந்துவரக்கூடியது. அவசரம் ஷைத்தானிடம் இருந்து வரக்கூடியது. (பைஹகீ)

எனவே நாம் எந்தவொரு விடயத்திலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிக்காமல் ஷைத்தானுக்கு மாறு செய்ய வேண்டும் அல்லாஹ்வை திருப்திபடுத்தக்கூடிய விடயங்களில் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் ஒரு நபித்தோழரைப் பார்த்துக் கூறினார்கள் உம்மிடம் அல்லாஹ்வும், அவனது தூதரும் விரும்பக் கூடிய இரு பண்புகள் உள்ளன. அவை பொறுமையும், நிதானமுமாகும்.

ஷைத்தானின் சதிட்டங்களும், தந்திரங்களும்

ஷைத்தான் மனிதனை எப்படியெப்படியெல்லாம் வழிகெடுப்பான் என்பதை அறிவது முஸ்லிமான ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும். அல்குர்ஆனும் சுன்னாவும் மிகத்தெட்டத்தெளிவாகஷைத்தான் மனிதனை வழிகெடுக்கும் தந்திரோபாயங்களை தெளிவுபடுத்தி விளக்கியுள்ளன.

நபி ஆதம் (அலை) அவர்கள் தொடக்கம் உலகில்தோன்றிய ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்திற்கும்மேற்பட்ட நபி மார்களின் உம்மத்தினர்களில் குறிப்பிட்ட இருபத்தைந்து ரஸூல் மார்களின் வரலாறுகளையும் அவர்களின் சமூகத்தினர்களின் வரலாறுகளையும் அவர்களை வழிகெடுக்க ஷைத்தான் பயன்படுத்திய சதிமுயற்சிகளையும் அல்லாஹுதஆலா அல்குர் ஆனில் கோடிட்டுக் காட்டியுள்ளான். அவற்றைக் கூறும் போதல்லாம்

إن الشـيطان عـدولكم فاتخـذوه عـدوا நிச்சயமாக ஷைத்தான் *உங்களது விரோதி (அவனை நண்பனாக அல்லாமல்) விரோதி யாகவே எடுத்துக் கொள்ளுங்கள். என்று எச்சரிக்கை செய்துள்ளான்.*

அவ்வாறே நபி (ஸல்) அவர்களும் ஷைத்தானின் சூழ்ச்சிகள் பற்றி தெளிவுபடுத்தும் போது, ஷைத்தான் வானுலக செய்திகளை ஒட்டுக் கேட்டுக் கொண்டு வந்து குறிசாஸ்திரம் சொல்பவர்கள் அல்லது சூனியக்காரர்களின் காதுகளில் அந்த செய்தியுடன் நூறு பொய்களையும் கலந்துகூறி அவர்களை நம்பவைக்கின்றான்.

அவ்வாறே ஒரு முஸ்லிம் தொழும் போதும், ஏனைய இபாதத் துக்கள் செய்யும் போது ஷைத்தான் எப்படி வஸ்வாஸை ஏற்படுத் துகின்றான் என்றும் வுழுவுடன் இருக்கும் ஒரு முஸ்லிமிடம் அவனது வுழு முறிந்துவிட்டது என்று வஸ்வாஸை ஏற்படுத்துதல், தொழும் போது எத்தனை ரகஅத்கள் தொழுதோம், எத்தனை சுஜூது செய்தோம். வுழு செய்யும் போது எத்தனை தடவை உறுப்புக்களைக் கழுவினோம், என்றெல்லாம் சந்தேகங்களை ஏற்படுத்துவான் என நபி (ஸல்) அவர்கள் அவ்வப் போது தெளிவாக எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

எனவே, அல்குர்ஆன், சுன்னாவின் வழிகாட்டல்களை தெளிவாக படிக்கக்கூடிய ஒரு முஸ்லிம்ஷைத்தானின் சூழ்ச்சிகளை அறிந்து அதிலிருந்துதப்பித்துக் கொள்வதற்கான வழி வகைகளைக் கடைப்பிடிப்பான்.

ஷைத்தானின் ஏவல்களுக்கு மாறு செய்தல்

ஷைத்தான் ஒரு மனிதனிடம் நல்ல ஒரு உபதேசம் செய்யும் ஒருவருடைய தோற்றத்தில் வருவான். அவ்வாறான நிலைமைகளை ஒருவர் உணர்ந்தால் ஷைத்தான் ஏவும் விடயங்களுக்கு கண்டிப் பாக மாறு செய்ய வேண்டும் “நீ யாருக்காவது உபதேசம் செய்ய விரும்பினால் முதலில் உனக்கே நீ உபதேசம் செய்து கொள் ஏனெனில் உன்னையே நீ அழிவுப்பாதையில் ஆக்கி, நரகத்துக்குரியவனாக ஆகிவிட்டீர், அல்லாஹ்வின் கோபத்திற்கும் சாபத்திற்கு உரியவனாகிவிட்டீர். எனவே, தனக்குத்தானே உபதேசம் செய்ய முடியாதவன் அடுத்தவருக்கு எவ்வாறு உபதேசம் செய்ய முடியும்? என நாம் ஷைத்தானிடம் எதிர் கேள்விகேட்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு மனிதனிடத்தில் ஷைத்தான்வந்து நீ தொழும்போது மற்றவர்கள் உனது தொழுகையை கண்காணிக் கின்றார்கள். முகஸ்துதிஏற்படும். எனவே, சுருக்கித் தொழுது கொள் என்று ஷைத்தான் ஊசலாட்டத்தைஏற்படுத்தினால்- அதற்கு மாறு செய்து அந்த தொழுகையை சற்று நீளமாக தொழ வேண்டும். அதே போல் ஒருவர் வுழு செய்யும் போது நீ முகத்தை மூன்று முறை கழுவியிருந்தால் இரண்டு விடுத்தம் தான் கழுவினாய் இன்னும் ஒரு முறை கழுவு எனவஸ்வாஸை ஏற்படுத்தினால் நான் கழுவியது சரிதான் என்று கூறி ஷைத்தானுக்கு மாறுசெய்ய வேண்டும்.

இதனால் தான் உணவு உண்ணும் போது, குடிபானங்களைக் குடிக்கும்போது வலது கையினால் அதனை எடுத்துப் பயன்படுத்த வேண்டுமென்றும், ஷைத்தான் இடது கையினாலேயே உண்ணுகின்றான். குடிக்கின்றான் என்பதையும் நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தி யுள்ளார்கள்.

மேலும் நாம் உணவு உண்ணும் போது ஏதாவது உணவுக் கவளம் கீழே விழுந்தால் அதனைத் துடைத்து அல்லது கழுவி நாம் சாப்பிட வேண்டும் என்றும் அதனை ஷைத்தானுக்குரிய உணவாக விட்டு வைக்கக் கூடாது. என்றும்நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தி பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

ஷைத்தான் மனிதனுடைய ஒவ்வொரு காரியங்களின் போதும் சமுகமளிக்கின்றான். அவன் உணவு உண்ணும்போதுகூட சமூக மளிக்கிறான். உணவுகளில் ஏதாவது ஒரு வஸ்து கீழே விழுந்து விட்டால் அதனைத் தூய்மைப்படுத்தி சாப்பிடட்டும் அதனை ஷைத்தானுக்குரிய உணவாக விட்டுவைக்க வேண்டாம். சாப்பிட்டு முடிவடைந்தால் அவரது விரல்களை நாவால் குழாவிக்கொள்ளட்டும். ஏனெனில் எந்த உணவில் பரகத் இருக்கிறது. என்பதை (அம்மனிதன்) அறியமாட்டான். என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

9

நப்ஸும் ஷைத்தானும்

ஷைத்தான் அனைவரையும் வழி கெடுப்பவனாக இருக்கும் போது அவனை வழிகெடுத்தவன் யார்? அப்படியாயின் அவனை விட வழிகெடுக்கும் வேறு ஒரு சக்தி உண்டா?

மேலே எழுந்துள்ள சந்தேகத்திற்கானதெளிவை நாம் அல்குர்ஆன், அஸ்சுன்னாவில் தேடும் போது ஷைத்தானை விடவும் மிகவும் ஆபத்தான ஒரு சக்தி இருக்கின்றது அது தான் நப்ஸ். அல்குர்ஆன் பலவசனங்களில் நப்ஸின்தீங்கு பற்றி எடுத்துக்கூறியுள்ளது. உதாரணமாக "காஃப் எனும் அத்தியாயத்தில் "மனிதனைப் படைத்தோம். அவனதுமனம் (நப்ஸ்)எதை எண்ணுகிறது. என்பதையும் அறிவோம். நாம் அவனது பிடரி நரம்பைவிட மிகவும் நெருக்கமாக இருக்கிறோம". (50:16)

நாம் அல்லாஹ்வை ஈமான் கொண்டுள்ளோம். பள்ளிகளில் தொழு கின்றோம். அவனை துதி செய்து, அல்குர்ஆனை ஓதுகின்றோம். ஸதகா தானதர்மங்கள் செய்கின்றோம். இவை அல்லாத இன்னோரென்ன மார்க்ககடமைகளை செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அவ்வப்போது பாவமானகாரியங்களையும் செய்கின்றோம் அதற்கான காரணம் என்ன?

அதற்கான காரணம் நாம் பலமான உண்மையான எதிரியை விட்டுவிட்டு பலவீனமான எதிரியை மட்டுமே எச்சரிக்கை செய்து கொண்டிருக்கின்றோம். ஷைத்தானின் சதியை பற்றி அல்லாஹ் கூறும்போது ஷைத்தனுடையசதி பலவீனமானது. (40:76)

மிகவும் பலமான உண்மையான எதிரி நப்ஸுதான், ஆம் நப்ஸு தான் (டைம்பொம்) நேரம் குறித்துவைக்கப்பட்ட குண்டுபோன்றது. மனித உடம்பில் மறைத்து வைக்கப்பட்ட மிதி வெடி போன்றது. அல்இஸ்ரா சூராவில் அல்லாஹ் குறிப்பிடும் போது "உனது செயலட்டையை நீயே வாசி! உனது நப்ஸைப் பற்றி கணக்கெடுக்க நீயே போதுமானவன் என்று கூறப்படும்." (15:14)

மேலும் க்ஹாபிர் எனும் சூராவில்: "இன்றைய தினம் ஒவ்வொரு (நப்ஸும்) ஆத்மாவும் செய்வதற்குரிய கூலி கொடுக்கப்படும். இன்று எந்த அநியாயமும் நடைபெறாது. அல்லாஹ் விரைவாக கணக் கெடுக்கக்கூடியவன் (40:17)

மேலும் அல்முத்தஸ்ஸிர் சூராவில்" ஒவ்வொரு ஆத்மாவும் தான் செய்வதற்கு பிணையாக்கப்பட்டுள்ளது." (74:38)

மேலும் அந்நாஸியாத் எனும் சூராவில் : "யார் தமது இறைவன் முன்னே நிற்பதைப் பற்றி அஞ்சி மனோஇச்சையை விட்டும், தன்னை விலக்கிக் கொண்டோரோ சுவர்க்கமே (அவரது) தங்குமிடம்" (79: 40,41)

மேலும் அத்தக்வீர் சூராவில் "தான் எதை முற்படுத்தி செய்திருக்கிறோம் என்பதை அவனது (நப்ஸ்) ஆத்மா அறிந்து கொள்ளும். (81:41)

மேற்கூறப்பட்ட வசனங்கள் அனைத்தும் ஒரே ஒரு நப்ஸ் எனும் வார்த்தையையே சுற்றியே சுழண்டு கொண்டிருப்பதை காணலாம். அப்படியாயின் அந்தநப்ஸு எந்தளவுமுக்கியதுவம்வாய்ந்தது என்பதையும் அந்தநப்ஸை தூய்மைப்படுத்துவதின் அவசியத்தையும் அல்குர்ஆனின் 91 வது அத்தியாயமான அஷ்ஷம்ஸ் எனும் சூராவில்', பதினொரு பிரமாண்டமான பொருட்களின் மீது சத்தியம் செய்துவிட்டு, சுட்டிக்காட்டிய விடயம் யாதெனில் :

"قد أفلح من زكاها وقد خاب مـــن دســـاها" (92:9,10)

"அந்த நப்ஸை தூய்மைப் படுத்தியவர் வெற்றி பெற்றுவிட்டார். அதைக் களங்கப்படுத்தியவர் நஷ்டமடைந்து விட்டார். (92:9,10)

எனவே, தூய்மையான (நப்ஸை) உள்ளத்தையுடையவன் தான் வெற்றியடைய முடியும். களங்கமான அசிங்கமான உள்ளத்தை யுடையவன் வெற்றிபெற முடியாது. அவன் நிரந்தர நஷ்டவாளி என்பதை அல்குர்ஆன் பலஇடங்களில் தெளிவுபடுத்தியுள்ளது, இந்த நப்ஸ் எனும் சொற்பிரயோகம் அல்குர்ஆனில் 295 இடங்களில் இடம்பெற்றுள்ளதன் மூலம் இதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்துகொள்ளலாம். மேலும் அல்லாஹ்வை அன்றி அந்த காலத்தில் வணங்கப்பட்டுக் கொண்டிருந்த லாத், உஸ்ஸா, மனாத், சுவாஉ, யகூத் யஊக் போன்ற விக்கிரங்கள் அனைத்தையும் உடைத்து நிர்மூலமாக்கட்ட பின்னரும் அவர்கள் சிலரின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த விக்கிரகம் தான், மனோ இச்சை எனும் கடவுள், இதனை அல்குர்ஆன் பின்வருமாறு வினா எழுப்புகிறது.

"أفرأيت من اتخذ الهه هـــــواه" (45:23)

"தனது மனோஇச்சையை கடவுளாக எடுத்துக் கொண்டவரை நபியேநீர் பார்க்கவில்லையா?" எனவே, மனோயிச்சை ஒரு மனிதனிடம் மேலோங்கி விட்டால் அந்த உள்ளம் மார்க்க சட்ட திட்டங்களையோ இஸ்லாத்தின் போதனைகளையோ செவிமடுக்காது என அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

மேலும் பூசரி எனும் கவிஞர் தனது புர்தா எனும் நூலில் பின்வருமாறு பாடியுள்ளார்.

النفـــس كالطفـــل إن تهملـــه شـــب علـــى حـــب الرضـــاع وان تفطمـــه ينفطـــــم

"நப்ஸ் என்பது பால்குடி வயதிலுள்ள ஒருசிறு பிள்ளை போன்றது, அந்தக் குழந்தையை உரிய வயதில் பால்குடி மறக்கடிக்கச் செய்யாமல் விட்டுவிட்டால், அது வாலிபனாகும் வரை, தாயிட மிருந்து பால்குடிக்கும் விருப்பத்துடனயே வளரும்.

உதாரணமாக, சிகரட் புகைப்பவர் அல்லது ஆபாசப்படங்களைப் பார்ப்பவர் ,போதைப் பொருளுக்கு அடிமையானவர், தன்னினச்

சேர்கையில் ஈடுபடுபவர், விபச்சாரத்தில் ஈடுபடுபவர் போன்ற இன்னோரன்ன பாவகாரியங்களில் பழக்கப்பட்டவர் அதைவிட்டும் திருந்தி, தௌபா செய்து மீளவில்லையானால் மரணம் வரை அதே பழக்கம் அந்த நப்ஸிடம் இருந்து கொண்டே இருக்கும். "அறிந்து கொள்ளுங்கள்! உடம்பில் ஒரு சதைப்பிண்டம் உண்டு. அது திருந்தினால்உடம்பெல்லாம் திருந்திவிடும் அதுகெட்டு விட்டால் உடம்பெல்லாம் கெட்டுவிடும். அதுவே, இருதயம்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, நபியவர்கள் பின்வருமாறு அடிக்கடி பிரார்த்தனை செய் பவர்களாக இருந்துள்ளார்கள்.

اَللَّهُـــمَّ آتِ نَفْسِـــيْ تَقْوَاهَـــا ، وَزَكِّهَـــا ، أَنْـــتَ خَيْـــرُ مَـــنْ زَكَّـــا وَأَنْـــتَ وَلِيُّهَـــا وَمَوْلاَهَـــا ،

(அல்லாஹும்ம ஆதி நப்ஸீ தக்வாஹா, வஸக்கிஹாஅந்த கைருமன்ஸக்காஹா, வஅந்த வலிய்யுஹா வமவ்லாஹா)

"யாஅல்லாஹ்! எனது உள்ளத்திற்கு இறையச்சத்தை தந்தருள் வாயாக, மேலும் அதனைத் தூய்மைப்படுத்துவாயாக, அதனைத் தூய்மைப்படுத்து பவர்களில் நீயே சிறந்தவன். அந்த உள்ளத் திற்கு பொறுப்பானவனும் எஜமானனும் நீயே!"

இவ்வாறான பிரார்த்தனையை அடிக்கடி நாம் ஓதி, எமது நப்ஸை தூய்மைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

மேலும் ஆதம் (அலை) அவர்களின் மக்களில் காபில் என்பவன் அவனது சகோதரர் ஹாபில் என்பவரை கொலை செய்யதிட்ட மிட்ட நிகழ்வை அல்குர்ஆன் குறிப்பிடும் போது "அவரது (நப்ஸ்) ஆத்மா அவரது சகோதரரை கொலைசெய்ய தூண்டியது.."

எனவே, நப்ஸும் ஷைத்தானும், விரோதிகள்தான் என்பதை பூசரியா எனும் அறிஞர் மேலும் குறிப்பிடும் போது "நப்ஸுக்கும், ஷைத்தானுக்கும் நீ மாறு செய்! அந்த இரண்டும் உமக்கு கலக்க மில்லாத முறையில் எவ்வளவுதான் நல்லுபதேசம் செய்தாலும் அதனை நீ சந்தேகப்படு".

ஒரு மனிதன், பாவத்தில் ஈடுபட்டு, பின்னர் திருத்தி தௌபா செய்து மீண்ட பின், ஏன் நீ அந்தப் பாவத்தைச் செய்தாய்! எனக் கேட்டால், ஷைத்தான் என்னை வழிகெடுத்து விட்டான் என அம்மனிதன் கூறுவதை நீர் காண்பாய்.

எனவே, மார்க்கத்தில் ஹராமாக்கப்பட்ட ஒவ்வொரு பாவத்திற்கு பின்னாலும் ஷைத்தான் உள்ளான். என்பதை அவனது பேச்சு உறுதிப்படுத்துகின்றது. பாவங்களுக்கு காரணம் ஒன்று, ஷைத்தான் அல்லது நப்ஸ்ஆகும். ஏனெனில் நப்ஸு அம்மாறா – பாவங்களை தூண்டிக்கொண்டே இருக்கும்.

ஷைத்தான் ஒரு மனிதனை பாவத்தில் ஈடுபடுத்துவதற்கான ஆரம்பம் - மறக்கடிக்கச் செய்தல்தான். அவன் சிலவேளை ஒரு நன்மை செய்தால் அதற்காக கிடைக்கவிருக்கும் நன்மையையும், அல்லது ஒரு பாவத்தை செய்தால் அதற்காக கிடைக்கவிருக்கும் தண்ட னையையும் மறக்கடிக்கச் செய்துவிடுவான். அதன் மூலம் அந்த நப்ஸ் பாவத்தில் ஈடுபட தூண்டுகிறது.

وما أبـــرئ نفســـي ان النفـــس لامـــارة بالســـوء (12:53)

“நான் எனது நப்ஸை பரிசுத்தமானது என்று தூய்மைப்படுத்திக் கூறமாட்டேன். ஏனெனில் நப்ஸ் பாவத்தைக் கொண்டு ஏவிக் கொண்டே இருக்கும் என, நபி யூசுப் (அலை) அவர்களின் கூற்றை அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகிறது.

உள்ளம் தூய்மையானவனாக பரிசுத்தமானவனாக இருந்து மரணிப்பவர் சுவர்க்கவாசி என்பதற்கு பின்வரும் வரலாற்றுச் சம்பவம் மிகப் பெரிய ஆதாரமாகும்.-

அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள் ஒரு நாள் நபியவர்கள் அமர்ந்து கொண்டிருந்த சபையில் உட்கார்ந் திருந்தோம். அப்போது சுவர்க்கவாசிகளில் ஒரு மனிதர் சற்று நேரத்தில் உங்களிடம் சமூகமளிப்பார். என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது, அன்சாரிகளைச் சேர்ந்த ஒருமனிதர் வுழூ செய்த

நீர், அவரது தாடியினால் கொட்டிக்கொண்டிருந்த நிலையில், அவரது இடது கையால் அவரது செருப்பை சுமந்து கொண்டு, பள்ளிக்குள் நுளைந்ததைக் கண்டோம். அவ்வாறே இரண்டாம் முறையாகவும் மறுநாள்நடைபெற்றது. மூன்றாவது நாளும் அவ்வாறே முதல் நாள் நடைபெற்றது போன்று நடைபெற்றது. பிறகு அந்த சபையை விட்டும் எழுந்து சென்ற போது அப்துல்லா' பின் அம்ரு இப்னு ஆஸ் எனும் நபித்தோழர் அவரைப் பின் தொடர்ந்து சென்று, அவரிடம் எனக்கும் எனது தந்தைக்கும் ஒரு முரண்பாடு ஏற்பட்டுவிட்டது. அதனால் மூன்று நாள்களுக்கு வீட்டுக்கு வரமாட்டேன். எனக் கூறிவிட்டு வெளியேறிவிட்டேன். எனவே, அந்த மூன்று இரவுகள் தங்கள் வீட்டில் தங்கஅனுமதி தருவீர்களா? எனக் கேட்க அவரும் அனுமதி வழங்கினார்.

அவர் அவரது வீட்டில் மூன்று இரவுகள் தங்கியிருந்தார். அவர் (தஹஜ்ஜத்) இரவுத் தொழுகைக்காக எழும்பவில்லை. இரவின் இடையிடையே கண்விழித்துப் படுக்கையில் புரண்டு படுக்கும் போது அல்லாஹ்வை திக்ர் செய்து கொண்டு தக்பீர் செய்து கொள்வார். பின்னர் சுபஹ் தொழுகைக்காக எழுந்துசென்றார். (இதைத் தவிர வித்தியாசமான எந்த அமலையும் அவரிடத்தில் நான் காணவில்லை) எனினும் நல்ல விடயங்களைத் தவிர வேறு எதனையும் அவர் பேச மாட்டார் என அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மூன்று இரவுகளும் கழிந்த பின் அவரது அமலைப் பார்த்து நான் திருப்தி காணவில்லை. அதன் பின் நான் அவரை விழித்து அப்துல்லாஹ்வே! எனக்கும் எனது தந்தைக்குமிடையில் எந்தக் கோபமோ, முரண்பாடோ ஏற்படவில்லை. இருப்பினும் நபி (ஸல்) அவர்கள் உங்களது விடயத்தில் சுவர்க்கவாசிகளில் ஒருவர், இப்பொழுது வருவார். எனக் மூன்று நாட்கள் கூறினார்கள். அந்த மூன்று முறையும் நீங்களே வந்தீர்கள்.

எனவே, உங்களது அமலைக் கண்காணிக்கும் நோக்கத்தில் உங்களிடத்தில் தங்குவதற்காக அனுமதி பெற்று, உங்களது அமலை அவதானித்து உங்களைப் பின்பற்றி, அதே அமலை செய்யலாம், எனும் நோக்கத்தில்தான் உங்களிடம் தங்கியிருந்து உங்களது

அமலை அவதானித்தேன். ஆனால் எம்மைவிட வித்தியாமான அதிக அமல் எதையும் நீர் செய்வதை நான்காணவில்லை.

அப்படியானால் நீங்கள் இந்த அந்தஸ்தை அடையக் காரணமாக இருந்தவிடயம் எது? என நான் வினவிய போது நீர் அதானித் ததைத்தவிர வேறொன்றும் என்னிடமில்லை என்று கூறிவிட்டு, நான் அவ்விடத்தை விட்டும் நகர்ந்தபோது மீண்டும் என்னை அவர் அழைத்து, நீர் கண்டதைத் தவிர வேறொன்றும் என்னிடம் இல்லை. என்றாலும் " நான் எனது உள்ளத்தில் (நப்ஸில்) எந்த முஸ்லிமைப் பற்றியும் குபாடமோ, தப்பபிப்பிராயமோ, அல்லாஹ் அவருக்கு வழங்கிய அருட்கொடைகளின் மீது பொறாமையோ இருக்காது. எனது உள்ளம் எப்பொழுதும் தூய்மையானதாக இருக்கும் என்று கூறினார்.

அதைக் கேட்ட அப்துல்லாஹ் (ரழி) "நீங்கள் அடைந்த இந்த நிலைமையை எங்களால் அடைய முடியாது." என்று கூறிவிடை பெற்றுச் சென்றார்.

(ஆதாரம் : முஸ்னத் அப்துற் றஸ்ஸாக் 20559, நஸாயி 10699, பைஹகீ 2619, அஹ்மத்)

மேற்படி அதிமுக்கியமான இவ்வரலாற்றுச் சம்பவத்திலிருந்து நாம் பெறும் படிப்பினைகள் :

1. நபி (ஸல்) அவர்கள் ஒருவரைப் பார்த்து அவர் சுவர்க்கவாசி என சுட்டிக்காட்டியது, இது அன்னாருக்கு அல்லாஹ் வழங்கிய மறைவான ஞானத்தில் நின்றுமுள்ளது என்று நம்புதல்.

2. அப்துல்லாஹ் இப்னு அம்ரிப்னு ஆஸ் (ரழி) அவர்கள் சுவர்க்க வாசியின் விஷேட அமல்யாது என்பதை அறிய அவர்களின் ஆர்வமும் அதற்கான பிரயத்தனங்களும்.

3. அந்த மனிதர் பேசினால் நல்லதையே பேசக்கூடியவராக இருந் திருக்கிறார். வீண் பேச்சுக்களில் ஈடுபடவில்லை.

4. இரவு நேரத்தில் தஹஜ்ஜுத் தொழுது பகற் காலங்களில் நோன்பு நோற்பவர்களின் அமலைவிட முன் நிலைப்படுத் தப்படும் அமல்தான், (தஸ்கியதுன் நப்ஸ்) உள்ளத்தை தூய்மையாக வைத்திருத்தல் எனும் அமல் என்பதை அறிந்து கொள்ளல்.

5. "أعدى عـــدوك نفســـك الـــذي بيـــن جنبيـــك உனது எதிரிகளில் மிகப்பெரிய எதிரி உனது இரு விலாக்களுக்குமிடை யிலுள்ள நப்ஸு தான்" என நபி (ஸல்) அவர்கள் கூறிய அந்தப் பெரிய எதிரியை அந்த மனிதர் கட்டுப்படுத்திதனது உள்ளத்தில் கர்வம், அகம்பாவம், ஆணவம், பொறாமை, கோபம் போன்ற மிக ஆபத்தான உள நோய்களில் இருந்து உள்ளத்தை தூய்மை யாக ஆக்கியிருந்தமை.

மனிதன் அல்லாஹ்வின் திக்ரைவிட்டும் பராக்காக்கி மறந்திருந்தால் உள்ளத்தில் ஒரு வகையான ஹோர்மோன்கள் சுரக்கின்றன. அதன் மூலம் உள்ளத்தில் ஒரு திரை ஏற்பட்டு உள்ளத்தில் ஒரு வகையான துருப்பிடித்துக் கொள்கின்றது. மேலும் மனதில் கவலையும் அழுத்தமும் ஏறபடுகின்றது. இதைத்தான் அல்லாஹ்.

كلا بـــل ران علـــى قلـــوبهم என்றாலும் அவர்களது உள்ளத்தில் துருப்பிடித்துவிட்டது. என்று கூறியுள்ளான்.

நபி மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் நபித்துவத்தைக் கொடுத்த போது அவர்கள் இறுக்கமில்லாத விரிந்த உள்ளத்தைத் தான் கேட்டார்கள்.

رب اشرح لي صدري என் இரட்சகனே! எனது உள்ளத்தை விரிவு படுத்துவாயாக! (20:25) நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் செய்த அருள் பற்றி பின்வருமாறு கூறுகின்றான் : الم نشرح لـــك صـــدرك நபியே! உமது நெஞ்சை நாம் உமக்கு விரிவாக்க வில்லையா? (94:1)

சத்திய ஜோதி மூலம் உள்ளம் விரிவுபடுவதும், அசத்திய சக்தி மூலம் உள்ளம் சுருங்கிப் போவதும் பொதுவாக மனித இனத்துக்குரிய ஒரு தன்மையாகும்.

“யாரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்த விரும்புகின்றானோ அவரது உள்ளத்தை அவன் இஸ்லாத்தின் பால் விரிவாக்குவான். அவன் யாரை வழிகேட்டில் விட்டுவிட நாடுகின்றானோ, அவனது உள்ளத்தை வானத்திற்கு ஏறிச்செல்பவன்(உள்ளம்) போன்று இறுக்கமானதாகவும், கஷ்டமானதாகவும், ஆக்கி விடுகின்றான். இவ்வாறே நம்பிக்கை கொள்ளாதோரின் மீது அவன் தண்டனையை ஏற்படுத்தி விடுவான். (6:125)

எனவே, மனிதனை வழிகெடுக்க இரண்டு விதமான எதிரிகள் உள்ளனர். ஒன்று மனிதஉடம்பினுள் மறைந்திருக்கும் எதிரி, அதுதான் நப்ஸ், இரண்டாவதுஎதிரி மனிதனுக்கு வெளியிலும், தேவைக்கேற்ப உட்சென்றும் தாக்கக்கூடிய எதிரி. அவன் தான் ஷைத்தான். இந்த இரண்டு விதமான எதிரிகளின் சதிகளை அறியாத ஒரு மனிதன் வெற்றியடைய முடியாது.

ஷைத்தான் எனும் எதிரி நபி ஆதம் (அலை) அவர்கள், ஹவ்வா (அலை) அவர்கள் ஆகிய இருவரையும் வழிகெடுத்து, விலக்கப் பட்ட மரத்தின் கனியைச் சாப்பிட்டு தவறிளைத்த பின்னர் அவர்கள் இருவரும் தௌபாச்செய்து அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடும் போது,

رَبَّنَــــا ظَلَمْنَــــا أَنْفُســــنَا وَإِنْ لَــــمْ تَغْفِرْلَنَــــا ، وَتَرْحَمْنَــــا
لَنَكُــــوْنَنَّ مَــــنَ الْخَاســــرِيْنَ

என்று பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கற்றுக் கொடுத்துள்ளான். அதிலே அவர்களும் யாஅல்லாஹ்! நாங்கள் எங்கள் நப்ஸுகளுக்கு அநியாயம் செய்துவிட்டோம். என்று கூறி மன்னிப்புத் தேடினார்கள்.

எனவே, நாமும் நப்ஸுடைய தீங்கிலிருந்தும், ஷைத்தானுடைய தீங்கிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக்கொண்டே இருப்போமாக.

10

ஷைத்தான் படைக்கப்பட்டதன் நோக்கம்

உலகத்தில் நடைபெறுகின்ற அனைத்து பாவங்களுக்கும், அழிவு களுக்கும் காரணமாக இருப்பவன் ஷைத்தான். அவனே இம்மை, மறுமையில்நடைபெறும் அழிவுகளுக்கும், கெடுதிகளுக்கும் தலைமை தாங்குபவன், மனித இனத்தை இறை நிராகரிப்பின் பாலும், அத்வைதம் எனும் எல்லாப் பொருட்களும் இறைவன்தான் எனும் வழிகேட்டின் பாலும், தர்ஹா வழிபாடு எனும் ஷிர்க்கின் பாலும், ரஹ்மானுக்கு மாறு செய்யக்கூடிய அனைத்து விடயங்களின் பக்கமும்அழைப்பு விடுத்துக் கொண்டே இருக்கின்றான்.

இப்படிப்பட்ட நாசகார செயல்களை செய்யக்கூடிய அந்தஷைத்தான் படைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? மேற்படி வினாவுக்கு இமாம் இப்னு கையூம் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு தனது **ஷிபாஉல் அலீல்** *எனும் நூலில் பின்வருமாறு விடையளித்துள்ளார்கள்.*

ஷைத்தானையும், அவனது படைகளையும் அல்லாஹ் படைத்திருப் பதற்கு சில வெளிப்படையான காரணங்களை நாம் கூறினாலும், அதனதுஉண்மையான நோக்கத்தை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது.

அந்த வெளிப்படையான காரணங்களில் சில பின்வருமாறு:

1. மனிதன் என்பவன் அல்லாஹ்வின் அடிமை : *எனவே, ஒரு அடிமை தனது எஜமானனுக்கு முழுமையாககட்டுப்பட்டு, அவனது அடிமைத்துவத்தை பூரணமாக வெளிப்படுத்துவதற்கு எதிரியாக இருக்கும் ஷைத்தானுடன் போராடி, அதிக பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம் தான், அவன் முழுமையான அடிமைத்து வத்தின் உயர்ந்தபடித்தரத்தை அடையமுடியும்.*

எனவே, ஷைத்தான் இல்லையென்றால் அடிமைத்துவத்தின் படித்தரத்தில் வித்தியாசத்தினை கண்டுகொள்ள முடியாது.

2. பாவங்களைக் கண்டு மனிதர்கள் பயப்படுவதற்காக

ஷைத்தான் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதற்கு முன்னால் விண்ணுலகில் மலக்குமார்களுடன் இணைந்து, மலக்குமார்களைப் போலவே தொடர் வணக்கத்தில் ஈடுபட்டிருந்தான். எப்பொழுது அல்லாஹ்வுக்கு மாறுசெய்தானோ, அன்றிலிருந்து அவன் சபிக் கப்பட்டு அல்லாஹ்வின் ரஹ்மத்தைவிட்டும் தூரமாக்கப்பட்டான். ஷைத்தான் நீண்டகாலம் இபாதத் செய்துவிட்டு ஒரே ஒரு பாவம் மாத்திரம் செய்த காரணத்தினால், அவன் அல்லாஹ்வின் ரஹ்மத்தை விட்டும், தூரமாக்கப்பட்டு சபிக்கப்பட்டான். எனவே, அவனது இந்த நிலைமையைக் கண்டு மலக்குகளும், மனிதர்களும் பயந்துபடிப்பினை பெறவேண்டுமென்ற நோக்கத்திற்காக படைக்கப்பட்டுள்ளான்.

3. மனிதர்கள் அவனது நிலைமையைக் கண்டு படிப்பினை பெறல்

அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்து பெருமையடித்து, பாவம் செய்வதில் அடம்பிடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இதிலே சிறந்த படிப்பினை உள்ளது. இதற்கு மாறாக முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள் தவறு செய்து பின்னர், மனம் வருந்தி பாவ மன்னிப்புத் தேடி, அல்லாஹ்விடம் மீண்டு நல்லவராக மாறினார்.

எனவே, ஜின் இனத்தின் தந்தை ஷைத்தானையும், மனித இனத்தின் தந்தை ஆதம் (அலை) அவர்களையும் ஒவ்வொரு பாவத்தைக் கொண்டு அல்லாஹ் சோதனை செய்தான். ஜின் இனத்தின் தந்தையை தவறு செய்து திருத்த முயற்சிக்காமல், அதிலே அடம்பிடித்து தொடர்ந்து பாவத்திலேநிலைத்திருப்பவர்களுக்கு முன்மாதிரியாகவும், ஆதம் (அலை) அவர்களை ஒருவர் தவறுசெய்து பின்னர் வருந்தி, திருந்தி அல்லாஹ்வின் பால் மீண்டவர்களுக்கு முன்மாதிரியாகவும், அல்லாஹ் ஆக்கியிருப்பதைப் பார்த்து ஒருவர் படிப்பினை பெறுவதற்காக ஷைத்தானை படைத்திருக்கின்றான்.

4. அல்லாஹ் தனது அடியார்களை சோதனை செய்வதற்காக

அல்லாஹ் ஷைத்தானைப்படைத்திருப்பது, தனது அடியார்களில் நல்லவர்களிலிருந்து கெட்டவர்களைப் பிரித்தறிவதற்காகத் தான் அல்லாஹ் முதல் ஆதம் (அலை) அவர்களை படைக்க நாடி பூமியின் அனைத்துப் பகுதியிலும் உள்ளடங்கியதாக, மண்ணை எடுத்து படைத்தான். அதற்கமைவாகவே, ஆதமுடைய மக்கள் உருவானார்கள். அவர்களில் நல்லவர், கெட்டவர், மென்மையானவர், கடினமானவர், கறுப்பர், வெள்ளையர் எனபல தன்மையுள்ளவர்களாக படைத்துள்ளான். இவர்களுக்கிடையிலுள்ள நல்லபண்புகளையும், கெட்ட பண்புகளையும் பிரித்தறியக்கூடிய ஒரு உரைக்கல் போல் ஷைத்தானை ஆக்கியுள்ளான்.

இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது, "நல்லவரிலிருந்து கெட்டவரை அவன் பிரித்துக்காட்டாமல், நீங்கள் எப்படி (கலந்து) இருக்கின்றீர்களோ அப்படியே (கலந்திருக்குமாறு) நம்பிக்கை கொண்டோரை அல்லாஹ் விட்டுவிடமாட்டான். (03:179)

நயவஞ்சகர்கள் தங்களையும், முஸ்லிம்கள் என்று கூறி ஏமாற்றி வந்தனர். எனவே, முஸ்லிம்கள் யார்? போலிகள் யார்? என்பதைக் கண்டறிய முடியாமல் இருவரும் கலந்திருந்தனர் என்ற செய்தியை இந்த அல்குர்ஆன்வசனம் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே, ஷைத்தான் தான் நல்லவர்கள், கெட்டவர்கள், முஃமின்கள், முனாபிக்குகள் என சமுகம் பிரிவதற்கு காரணகர்த்தாவாக அமைந்துள்ளான்.

5. ஷைத்தானைக் கொண்டு மனித இனத்தைச் சோதிப்பது அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் தன்மையை உறுதிப் படுத்துகிறது.

அல்லாஹ் தனது அடியார்கள் தனது நிஃமத்துக்களுக்கு நன்றி செலுத்த வேண்டுமென விரும்புகின்றான். அல்லாஹ்வின் நல்லடி யார்கள் ஷைத்தானுடைய காரணத்தினால் சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டதன் காரணமாகதான், அல்லாஹ்வுக்கு அதிகம் நன்றி செலுத்தி மிகஉயர்பதவிகளை அடைந்துள்ளார்கள்.

உதாரணமாக நபி ஆதம் (அலை) அவர்கள் சோதிக்கப்படு வதற்கு முன்னால் சுவர்க்கத்தில் இருந்து கொண்டு அல்லாஹ் வுக்கு நன்றி செலுத்திய அளவையும், அவர் சோதிக்கப்பட்டு (தௌபா) பாவமன்னிப்பு தேடியபின் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திய அளவையும் ஒப்பிட்டு பார்க்கையில் அவர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திய அளவே அதிகம்.

6. எதிர் மறையான ஒரு பண்பை அறிவதன் மூலமே ஒரு நல்ல பண்பின் யதார்த்த நிலை வெளிப்படும்.

உதாரணமாக ஒரு பொருளின் அழகை எடைபோட அவலட்சனமான ஒரு பொருளுடன் ஒப்பிடும் போது தான் அதன் யதார்த்தம் தெளிவாக வெளிப்படும்.

அவ்வாறே வெளிச்சத்தின் பெறுமதியை அறிய இருளையும். நிழலின் பெறுமதியை அறிய வெயிலையும் ஒப்பிடும் போது அவை களின் யதார்த்தம் வெளிப்படும்.

உலகம் அழியும்வரை ஷைத்தானை விட்டு வைத்திருப்பதற்கான காரணம் என்ன?

கெட்டவர்களிலிருந்து நல்லவர்களை பிரித்தறிந்து இனம் காண்ப தற்கான சோதனையாகவும், உரைகல்லாகவும் ஷைத்தானை அல்லாஹ் ஆக்கியதன் குறிக்கோள், கியாமத் நாள்வரை படைக்கப்பட உள்ள அனைத்து மனிதர்களுக்கும் செல்லுபடியானதாக அமைய வேண்டு மென்றால், அவன் கியாமத் நாள் வரை உயிர் வாழ்வதன் மூலமே சாத்தியமாகும். அவன் குறுகிய காலம்வரை வாழ்ந்து மரணித்து விட்டால், அந்தக் குறிக்கோளை அடையமுடியாது.

ஷைத்தான் மாறு செய்வதற்கு முன், செய்த நல்லமல்களுக்கு பிரதிபலனாகவும் அவனை நீண்ட காலம் வாழச்செய்திருக்கலாம்.

ஷைத்தானுக்கு மறுமையில் எந்த விதமான நற்பேறும் இல்லை. என்பது அல்லாஹ்வின் ஏற்பாட்டிலுள்ளது. இருப்பினும் அவன் அல்லாஹ்வுக்கு மாறு செய்தற்கு முன் சில காலம் இபாதத்தில்

ஈடுபட்டுள்ளான். அதற்கானபிரதி பலனாக இவ்வுலகிலேயே கூலியை வழங்கும் நோக்கில் இறுதி நாள்வரை உயிர் வாழ்வ தற்கான அவகாசத்தை அவனுக்கு வழங்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் அல்லாஹ் எவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்.

ஒரு முஃமின் செய்யக்கூடிய அமல்களுக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் அதற்கான நற்கூலியை வழங்குவான். ஆனால் ஒரு காபிர் இவ்வுலகில் செய்யும் நற்செயல்களுக்கு இவ்வுல கிலேயே அதற்குரியபிரதிபலன்களை அல்லாஹ் வழங்குகின்றான். ஆனால் மறுமையில் அவனுக்கு எவ்விதமான பிரதிபலனும் கிடையாது. இந்தக் கருத்து ஸஹீஹான ஹதீஸில் பதியப்பட்டுள்ளது.

இதற்கு எதிர் மாறான கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது கியாமத் நாள் வரை அவனை உயிர் வாழ வைத்திருப்பது அவனை சங்கைப்படுத்துவதற்காக அல்ல. ஏனெனில் அவன் அவகாசம் கொடுக்கப்படாமல் மரணித்திருந்தால் அவனுக்கு அது நலவாக அமைந்திருக்கும். அவனது கெடுதிகுறைந்து அவனுக்குரிய தண்டனையும் குறைவாக அமைந்திருக்கும்.

மாறாக அவன் பாவம் செய்வதிலும், மனிதர்களை வழி கெடுப் பதிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டிருப்பதனாலும் அவனது பாவங்கள் அதிகரித்து தண்டனையும் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாக அமையும்.

11

மனித சமுதாயத்தை வழிகெடுப்பதில் ஷைத்தான் எந்தளவு வெற்றி பெற்றுள்ளான்?

ஷைத்தான் அல்லாஹ்வின் கட்டளையை நிராகரித்து சிரம்பணிய மறுத்த காரணத்தால் அவன் அல்லாஹ்வின் ரஹ்மத்தை விட்டும், சுவர்க்கத்தை விட்டும் விரட்டப்பட்டு அல்லாஹ்வின் கோபத்திற்கும், சாபத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளான். அதன்பின் அவன் அல்லாஹ் விடம் கியாமத் நாள் வரை வாழ்வதற்கு அவகாசம் தர வேண்டு மென்று பிராத்தித்து அவகாசத்தைப் பெற்ற பின் மனித சமுதாயத்தை வழிகெடுத்து வேரறுத்து விடுவதாகவும், அல்லாஹ்விடம் சபதம் எடுத்துள்ளான். என்ற விடயத்தை முன்னர் விபரித்திருந்தேன். அல்லாஹ் (ஷைத்தானை) அவனை சபித்துவிட்டான். உன் அடியார்களில் குறிப்பிட்ட தொகையினரை வென்றெடுப்பேன். என்று அவன் இறைவனிடம் கூறினான். (4:118)

என்னை விட நீ சிறப்பித்த இவரை (ஆதமை) ப்பற்றி கூறுவீராக! கியாமத் நாள் வரை எனக்கு நீ அவகாசம் தந்தால் சிலரைத் தவிர இவரது சந்ததிகளை வேரறுப்பேன். எனவும் கூறினான். (17:62)

அவ்வாறு அல்லாஹ்விடம் சபதம் எடுத்த ஷைத்தான், அந்த சபதத்தை நிறைவேற்றியுள்ளானா? நிறைவேற்றிக் கொண்டிருக் கின்றானா? எனகடந்தகால நபி, ரஸுல்மார்களின் வரலாற்றுப் பின்னனியைப் புரட்டிப்பார்த்தால் ஒவ்வொரு நபிமார்களின் வரலாறுகளிலும் அந்த நபி, ரஸுல்மார்கள் கொண்டு வந்ததீனை

ஏற்றுக் கொண்டவர்கள் அதிகமானவர்களா? அல்லது இவர்களை எதிர்த்து, மறுத்து நிராகரித்தவர்கள் அதிகமானவர்களா? என்று அல்குர்ஆன், சுன்னா ஆதாரங்களை ஆய்வு செய்து பார்க்கு மிடத்து அவர்களை மறுத்து, எதிர்த்து நிராகரித்தவர்கள் தான் அதிகம்.

"நபியே! நீர்எவ்வளவுதான் பிரயத்தனம் செய்தாலும்அவர்களில் அதிகமானவர்களை ஈமான் கொண்டவர்களாக கண்டு கொள்ள மாட்டீர்." (12:103)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (முன்னாலுள்ள) சமுகத்தினர் (நிலை) எனக்கு எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அந்த வேளையில் ஒருநபியைஅவருடன் சிறிய எண்ணிக்கையில் (பத்து பேருக்குட்பட்ட) ஒரு கூட்டமும், இன்னொரு நபியை அவருடன் ஒரு மனிதர், இரு மனிதர்களும், இன்னொரு நபியை அவருடன் யாருமே இல்லாத நிலைமையிலும் (எனக்கு காண்பிக் கப்பட்டது.)

மேலும் ஒரு பெரும் கூட்டம் எனக்கு எடுத்துக் காண்பிக்கப் பட்டது. அவர்கள்தான். எனது உம்மத் என நினைத்தேன். இவர் நபி மூஸாவும் அவரது உம்மத்தும் என்று எனக்கு கூறப் பட்டது, அங்கே அதைவிட மிகப்பெரிய ஒரு கூட்டம் இருப்பதைக் கண்டேன். மேலும் அதைவிட மேல் நோக்கிப் பார் எனஎனக்குக் கூறப்பட்டதும், அங்கேயும் மிகப்பெரிய கூட்டம் தென்பட்டது. அவர்கள்தான் உங்களது உம்மத்தினர்கள் என்று கூறப்பட்டது.

அவர்களில் எழுபதாயிரம் பேர் எவ்வித கேள்வி கணக்கோ, தண்டனையோ இல்லாமல் சுவர்க்கம் நுழைவார்கள் என்று கூறிவிட்டு, நபியவர்கள் எழுந்து தமது வீட்டுக்குள் நுழைந்து விட்டார்கள்.

அவர்கள் யாராக இருக்கலாம்? என்பதில் ஸஹாபாக்கள் ஒருவருக் கொருவர் கருத்துக் கூறி கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர் களுடைய தோழர்கள் தான் அவர்கள் என்ற ஒருசாராரும், அவர்கள் இஸ்லாத்தின் அடிப்படையிலே பிறந்து ஷிர்க் வைக்காதவர்கள்

என்றும், சிலர் வேறு சில கருத்துக்களையும் கூறிக் கொண்டிருந் தார்கள். அந்த வேளையில் நபி (ஸல்) அவர்கள் வீட்டைவிட்டு வெளியாகி, எதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கின்றீர்கள்? என வினா விட்டுக் கூறினார்கள, அவர்கள்தான் மந்திரங்களைக் கொண்டு மந்திரித்து ஓதிப்பார்க்கவும் மாட்டார்கள். மந்திரிக்கச் சொல்லி தேடிச் செல்லவும் மாட்டார்கள. சகுனம் பார்க்கவும் மாட்டார்கள். அவர்களின் இரட்சகன்மீதே தவக்குல் வைப்பவர்களாகவும் இருந்தார்கள். என நபி (ஸல்) அவர்கள் கூறியபோது ***உக்காஷா பின் முஹ்ஸின்*** *எனும் ஸஹாபி எழுந்து அல்லாஹ்வின் தூதரே! என்னையும் அவர்களில் ஒருவராக ஆக்கஅல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள்! எனக்கூற நீயும் அவர்களைச் சார்ந்தவர் தான், என நபி (ஸல்) அவர்கள் கூறியதும், வேறு ஒருவர் எழுந்து என்னையும் அவர்களில் ஒருவராக ஆக்க அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள்! எனக் கூற* ***உம்மைவிட உக்காஷா முந்தி விட்டார்*** *என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)*

எனவே, மேற்கூறப்பட்ட ஹதீஸில் சில நபிமார்கள் அவருடைய உம்மத்எனக் கூற யாருமே இல்லாத நிலையிலும், இன்னும் சிலர் ஒருவர் இருவருடனுமே காணப்படுவார்கள் எனின், அந்த நபிமார்கள் தஃவாபணி செய்யவில்லையா? அவர்களுக்கு வழங் கப்பட்டதூதை மக்களுக்குஎத்திவைக்கவில்லையா? நிச்சயமாக தஃவாப் பணியை செய்தார்கள். ஆனால் அங்கே ஷைத்தானுடைய (தஃவா) அழைப்பு பணி பலமாக நடைபெற்றிருக்கிறது. அவர்கள் ஷைத்தானுக்கு அடிமையாகி விட்டார்கள். என்பதை நாம் உணரக் கூடியதாக உள்ளது.

மேலும் நபி நுஹ் (அலை) அவர்கள் இவ்வுலகில் 950 வருடம் வாழ்ந்து தஃவா பணியை செய்தார்கள். ஆனால் அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் மிக சொற்பமானவர்களே. அவர்களை எதிர்த்தவர்கள் தான் அதிகம். "وما آمن معه إلا قليـــل" (ஹுத்: 40) "அவர்களுடன் ஈமான்கொண்டவர்கள் மிகசொற்பமானவர்களே."

பெரும்பாண்மையினரைக் கண்டு ஏமாற வேண்டாம்

முஸ்லிம் சமுதாயத்தில் பெரும்பாண்மையினர் கப்ர் வணக்கத்தில் (தர்க்கா வழிபாடு) செய்கிறார்கள் என்றோ, அல்லது பெரும் பான்மையினர் ஒரு (பித்அத்தான) நபி (ஸல்) அவர்கள் காட்டித் தராத திக்ர்கள் துஆக்கள், ராதிபுக்கள், தரீக்கா செயற்பாடுகள் போன்ற வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகிறார்கள் என்பதைப் பார்த்து ஏமார்ந்து விட வேண்டாம். அல்லாஹுதஆலா கூறுகின்றான்.

“ولا تطع أكـــثر مـــن فـــي الأرض” *(அல்அன்ஆம்:116)*

“பூமியில் உள்ளவர்களில் அதிகமானோருக்கு (முஹம்மதே) நீர்வழிப்பட்டால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையி லிருந்து வழிகெடுத்துவிடுவார்கள். அவர்கள் ஊகத்தையே பின் பற்றுகின்றனர். அவர்கள் அனுமானம் செய்வோர்தவிர வேறு இல்லை.” (6:116)

எனவே, பெரும்பாண்மையைகணக்கெடுக்கவேண்டிய அவசிய மில்லை. ***சிறுபான்மையானவர்கள் பின்பற்றுவது உண்மையான தாக சத்தியமாக இருந்தால் அதையே பின்பற்ற வேண்டும்.***

எனவே, சத்திய மார்க்கத்தை அதன் தூயவடிவில் பின்பற்றிஇறுதி மூச்சுவரை ஷிர்க், பித்அத்திலிருந்து பாதுகாப்புப் பெற்று சுவர்க்கம் செல்லக்கூடிய அந்தஆயிரத்தில் ஒரு வீதமானவர்கள் கூட்டத்தில் என்னையும், உங்களையும் எல்லாம்வல்ல கிருபையுள்ள ரஹ்மான் ஆக்கியருள்வானாக. ஆமீன்.

எனவே, ஷைத்தான் அவனது சபதத்தை திட்டமிட்டு நிறை வேற்றி யுள்ளான். என்பதை நிரூபிக்கமுடிகின்றது.

மேலும் இந்த சமகால நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்தால் ஷைத்தானுடைய நேசகர்கள் தான் இஸ்லாத்திற்கும், முஸ்லிம் களுக்கும் எதிராகபலசதி திட்டங்களைத் தீட்டி இனத்துவேசங் களை உருவாக்கி, முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக சித்தரித்து

உலகளாவியரீதியில் சித்திரவதைக்குள்ளாக்கப்˙படுவதையும், கைது செய்யப்படுவதையும், தீயிலிட்டு எரிக்கப்படும் கொடூர காட்சிகளையும், நாளாந்தம் மீடியாக்கள்மூலமாக அறிந்த வண்ணம் இருக்கின்றோம். இவைகளுக்கு பின்னால் இருந்து கொண்டு இதனைச் செயல்படுத்துவர்கள் யார்? ஷைத்தானும் அவனது பட்டாளங்களும் அன்றி வேறு யாருமில்லை.

எனவே, ஷைத்தான் அல்லாஹ்விடம் மனித சமுதாயத்தில் பெரும்பான்மையினரை வழிகெடுத்து வேறுத்து நரகத்திற்குரிய வர்களாக ஆக்குவேன். என்றஅந்த சபதத்தை நிறைவேற்றி விட்டான். என்பதை பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

நாளை மறுமையில் நபி ஆதம் (அலை) அவர்களை நோக்கி, ஆதமே! உமது சந்ததியிலிருந்து நரகத்துக்குச் செல்லக் கூடிய கோஷ்டியைத் தெரிவு செய்! என்று அல்லாஹ் கூறுவான், அப்போது அவர்கள் எத்தனை வீதமானவர்கள் யாஅல்லாஹ்? என வினவ ஒவ்வொரு 100றிலிருந்து 99 பேர் நரகம் ஒருவர் மாத்திரம் சுவர்க்கம், என்றும் மற்றொரு ரிவாயத்தில் ஒவ்வொரு 1000திலிருந்து 999 பேர் நரகவாசி என்றும் ஒருவர் மாத்திரமே, சுவர்க்கவாதி எனவும் அல்லாஹ் கூறுவான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

எனவே, அந்தசபிக்கப்பட்ட ஷைத்தான் மனித சமுதாயத்தில் பெரும்பான்மையினரை வழிகெடுத்து நரகத்திற்குரியவர்களாக ஆக்குவதே அவனது இலக்கும், குறிக்கோளுமாகும். அதனை அவன்திட்டமிட்டுநிறைவேற்றியுள்ளான். இன்னும் நிறை வேற்றிக் கொண்டிருக்கிறான். என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து எம்மை நாம் சீர்படுத்தி, மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டு மென எனக்கும் உங்களுக்கும் உபதேசம் செய்கின்றேன். எம் அனைவருடைய இறுதி முடிவையையும், எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லதாக ஆக்கி, இம்மையிலும் மறுமைவாழ்விலும் சிறந்த ஈடேற்றத்தைதந்து சுவர்க்கத்தில் நுளையும் பாக்கியத்தையும் எம் அனைவருக்கும் தந்தருள் புரிவானாக. ஆமீன்

آخردعوانـــا أن الحمـــد لله رب العـــالمينæ

ஜின், ஷைத்தான்களால்பீடிக்கப்பட்டவர், அல்லது விச ஜந்துக்களால் தீண்டப்பட்டவர், அல்லது சூனியத்தால் பாதிக்கப்பட்டவர், அல்லது கண்ணேறு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவருக்கு ஓதி ஊதும் சூறாக்களும், துஆக்களும்:

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ (1) الْحَمْدُ لِلَّهِ رَبِّ
الْعَالَمِينَ (2) الرَّحْمَنِ الرَّحِيمِ (3) مَالِكِ يَوْمِ الدِّينِ(4)
إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ (5) اهْدِنَا الصِّرَاطَ
الْمُسْتَقِيمَ (6) صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ
الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ(7)

بسم الله الرحمن الرحيم

الم (1) ذَلِكَ الْكِتَابُ لَا رَيْبَ فِيهِ هُدًى لِلْمُتَّقِينَ
(2)الَّذِينَ يُؤْمِنُونَ بِالْغَيْبِ وَيُقِيمُونَ الصَّلَاةَ وَمِمَّا
رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ (3) وَالَّذِينَ يُؤْمِنُونَ بِمَا أُنْزِلَ
إِلَيْكَ وَمَا أُنْزِلَ مِنْ قَبْلِكَ وَبِالْآخِرَةِ هُمْ يُوقِنُونَ(4)
أُولَئِكَ عَلَى هُدًى مِنْ رَبِّهِمْ وَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ(5)
البقرة **அல்பகரா**

وَاتَّبَعُوا مَا تَتْلُو الشَّيَاطِينُ عَلَى مُلْكِ سُلَيْمَانَ وَمَا
كَفَرَ سُلَيْمَانُ وَلَكِنَّ الشَّيَاطِينَ كَفَرُوا يُعَلِّمُونَ
النَّاسَ السِّحْرَ وَمَا أُنْزِلَ عَلَى الْمَلَكَيْنِ بِبَابِلَ هَارُوتَ
وَمَارُوتَ وَمَا يُعَلِّمَانِ مِنْ أَحَدٍ حَتَّى يَقُولَا إِنَّمَا نَحْنُ
فِتْنَةٌ فَلَا تَكْفُرْ فَيَتَعَلَّمُونَ مِنْهُمَا مَا يُفَرِّقُونَ
بِهِ بَيْنَ الْمَرْءِ وَزَوْجِهِ وَمَا هُمْ بِضَارِّينَ بِهِ مِنْ أَحَدٍ
إِلَّا بِإِذْنِ اللَّهِ وَيَتَعَلَّمُونَ مَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ
وَلَقَدْ عَلِمُوا لَمَنِ اشْتَرَاهُ مَا لَهُ فِي الْآخِرَةِ مِنْ خَلَاقٍ
وَلَبِئْسَ مَا شَرَوْا بِهِ أَنْفُسَهُمْ لَوْ كَانُوا يَعْلَمُونَ (102)
அல்பகரா

وَدَّ كَثِيرٌ مِنْ أَهْلِ الْكِتَابِ لَوْ يَرُدُّونَكُمْ مِنْ بَعْدِ
إِيمَانِكُمْ كُفَّارًا حَسَدًا مِنْ عِنْدِ أَنْفُسِهِمْ مِنْ بَعْدِ مَا
تَبَيَّنَ لَهُمُ الْحَقُّ فَاعْفُوا وَاصْفَحُوا حَتَّى يَأْتِيَ
للَّهُ بِأَمْرِهِ إِنَّ اللَّهَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ
(البقرة 109) **அல்பகரா**

فَسَيَكْفِيكَهُمُ اللَّهُ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ
(البقرة 137) **அல்பகரா**

إِنَّ فِي خَلْقِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ اللَّيْلِ
وَالنَّهَارِ وَالْفُلْكِ الَّتِي تَجْرِي فِي الْبَحْرِ بِمَا يَنْفَعُ
النَّاسَ وَمَا أَنْزَلَ اللَّهُ مِنَ السَّمَاءِ مِنْ مَاءٍ فَأَحْيَا بِهِ
الْأَرْضَ بَعْدَ مَوْتِهَا وَبَثَّ فِيهَا مِنْ كُلِّ دَابَّةٍ
وَتَصْرِيفِ الرِّيَاحِ وَالسَّحَابِ الْمُسَخَّرِ بَيْنَ السَّمَاءِ
وَالْأَرْضِ لَآيَاتٍ لِقَوْمٍ يَعْقِلُونَ (البقرة 164) **அல்பகர**

اللَّهُ لَا إِلَهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ لَا تَأْخُذُهُ سِنَةٌ وَلَا
نَوْمٌ لَهُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ مَنْ ذَا الَّذِي
يَشْفَعُ عِنْدَهُ إِلَّا بِإِذْنِهِ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا
خَلْفَهُمْ وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ
وَسِعَ كُرْسِيُّهُ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَلَا يَئُودُهُ حِفْظُهُمَا
وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ **அல்பகரா** (255)

آمَنَ الرَّسُولُ بِمَا أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالْمُؤْمِنُونَ كُلٌّ
آمَنَ بِاللَّهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لَا نُفَرِّقُ
بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ وَقَالُوا سَمِعْنَا وَأَطَعْنَا غُفْرَانَكَ
رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيرُ (285) لَا يُكَلِّفُ اللَّهُ نَفْسًا
إِلَّا وُسْعَهَا لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ رَبَّنَا
لَا تُؤَاخِذْنَا إِنْ نَسِينَا أَوْ أَخْطَأْنَا رَبَّنَا وَلَا تَحْمِلْ
عَلَيْنَا إِصْرًا كَمَا حَمَلْتَهُ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِنَا رَبَّنَا
وَلَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهِ وَاعْفُ عَنَّا وَاغْفِرْ لَنَا
وَارْحَمْنَا أَنْتَ مَوْلَانَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ
அல்பகரா (286)

إِنَّ فِي خَلْقِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ اللَّيْلِ
وَالنَّهَارِ لَآيَاتٍ لِأُولِي الْأَلْبَابِ (190) الَّذِينَ يَذْكُرُونَ
اللَّهَ قِيَامًا وَقُعُودًا وَعَلَى جُنُوبِهِمْ وَيَتَفَكَّرُونَ فِي
خَلْقِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ رَبَّنَا مَا خَلَقْتَ هَذَا بَاطِلًا
سُبْحَانَكَ فَقِنَا عَذَابَ النَّارِ (191) رَبَّنَا إِنَّكَ مَنْ
تُدْخِلِ النَّارَ فَقَدْ أَخْزَيْتَهُ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنْصَارٍ
ஆலஇம்றான் (192)

أَمْ يَحْسُدُونَ النَّاسَ عَلَى مَا آتَاهُمُ اللَّهُ مِنْ فَضْلِهِ
(**அன்னிஸா** 54)

إِنَّ رَبَّكُمُ اللَّهُ الَّذِيْ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ فِي
سِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ يُغْشِي اللَّيْلَ
النَّهَارَ يَطْلُبُهُ حَثِيثًا وَالشَّمْسَ وَالْقَمَرَ وَالنُّجُومَ
مُسَخَّرَاتٍ بِأَمْرِهِ أَلَا لَهُ الْخَلْقُ وَالْأَمْرُ تَبَارَكَ اللَّهُ
رَبُّ الْعَالَمِينَ (54) ادْعُوْا رَبَّكُمْ تَضَرُّعًا وَخُفْيَةً إِنَّهُ
لَا يُحِبُّ الْمُعْتَدِينَ (54-55 **அல் அஃராப்**)

وَيَشْفِ صُدُوْرَ قَوْمٍ مُؤْمِنِينَ (14) **அத்தௌபா**
ثُمَّ أَنْزَلَ اللَّهُ سَكِينَتَهُ عَلَى رَسُوْلِهِ وَعَلَى
الْمُؤْمِنِينَ (26) التوبة **அத்தௌபா**
فَأَنْزَلَ اللَّهُ سَكِينَتَهُ عَلَيْهِ وَأَيَّدَهُ بِجُنُودٍ لَمْ
تَرَوْهَا (40) التوبة **அத்தௌபா**
وَأَوْحَيْنَا إِلَى مُوسَى أَنْ أَلْقِ عَصَاكَ فَإِذَا هِيَ تَلْقَفُ مَا
يَأْفِكُوْنَ (117) فَوَقَعَ الْحَقُّ وَبَطَلَ مَا كَانُوْا يَعْمَلُونَ(118)
فَغُلِبُوْا هُنَالِكَ وَانْقَلَبُوا صَاغِرِينَ (119) **அல் அஃராப்**

وَقَالَ فِرْعَوْنُ ائْتُونِي بِكُلِّ سَاحِرٍ عَلِيمٍ (79) فَلَمَّا
جَاءَ السَّحَرَةُ قَالَ لَهُمْ مُوسَى أَلْقُوا مَا أَنْتُمْ مُلْقُونَ (80)
فَلَمَّا أَلْقَوْا قَالَ مُوسَى مَا جِئْتُمْ بِهِ السِّحْرُ إِنَّ اللَّهَ
سَيُبْطِلُهُ إِنَّ اللَّهَ لَا يُصْلِحُ عَمَلَ الْمُفْسِدِينَ (81)
யூனுஸ்

وَنُنَزِّلُ مِنَ الْقُرْآنِ مَا هُوَ شِفَاءٌ وَرَحْمَةٌ لِلْمُؤْمِنِينَ وَلَا
يَزِيدُ الظَّالِمِينَ إِلَّا خَسَارًا (82) **அல்இஸ்ரா**

قَالُوا يَا مُوسَى إِمَّا أَنْ تُلْقِيَ وَإِمَّا أَنْ نَكُونَ أَوَّلَ مَنْ
أَلْقَى (65) قَالَ بَلْ أَلْقُوا فَإِذَا حِبَالُهُمْ وَعِصِيُّهُمْ
يُخَيَّلُ إِلَيْهِ مِنْ سِحْرِهِمْ أَنَّهَا تَسْعَى (66) فَأَوْجَسَ فِي
نَفْسِهِ خِيفَةً مُوسَى (67) قُلْنَا لَا تَخَفْ إِنَّكَ أَنْتَ
الْأَعْلَى (68) وَأَلْقِ مَا فِي يَمِينِكَ تَلْقَفْ مَا صَنَعُوا
إِنَّمَا صَنَعُوا كَيْدُ سَاحِرٍ وَلَا يُفْلِحُ السَّاحِرُ حَيْثُ
أَتَى (69) **தாஹா**

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا
تُرْجَعُونَ (115) فَتَعَالَى اللَّهُ الْمَلِكُ الْحَقُّ لَا إِلَهَ إِلَّا
هُوَ رَبُّ الْعَرْشِ الْكَرِيمِ (116) وَمَنْ يَدْعُ مَعَ اللَّهِ إِلَهًا
آخَرَ لَا بُرْهَانَ لَهُ بِهِ فَإِنَّمَا حِسَابُهُ عِنْدَ رَبِّهِ إِنَّهُ لَا
يُفْلِحُ الْكَافِرُونَ (117) وَقُلْ رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَأَنْتَ
خَيْرُ الرَّاحِمِينَ (118) **அல் மு∴மினூன்**

وَإِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِينِ (80) **அஷ்ஷுஅரா**

وَالصَّافَّاتِ صَفًّا (1) فَالزَّاجِرَاتِ زَجْرًا (2) فَالتَّالِيَاتِ ذِكْرًا (3)
إِنَّ إِلَهَكُمْ لَوَاحِدٌ (4) رَبُّ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَمَا
بَيْنَهُمَا وَرَبُّ الْمَشَارِقِ (5) إِنَّا زَيَّنَّا السَّمَاءَ الدُّنْيَا
بِزِينَةٍ الْكَوَاكِبِ (6) وَحِفْظًا مِنْ كُلِّ شَيْطَانٍ مَارِدٍ (7)
لَا يَسَّمَّعُونَ إِلَى الْمَلَإِ الْأَعْلَى وَيُقْذَفُونَ مِنْ كُلِّ جَانِبٍ
دُحُورًا وَلَهُمْ عَذَابٌ وَاصِبٌ (9) إِلَّا مَنْ خَطِفَ الْخَطْفَةَ (8)
فَأَتْبَعَهُ شِهَابٌ ثَاقِبٌ (10) **அஸ்ஸாப்பாத்**

قُلْ هُوَ لِلَّذِينَ آمَنُوا هُدًى وَشِفَاءٌ (44) **புஸ்ஸிலத்**

يَا قَوْمَنَا أَجِيبُوا دَاعِيَ اللَّهِ وَآمِنُوا بِهِ يَغْفِرْ لَكُمْ مِنْ
ذُنُوبِكُمْ وَيُجِرْكُمْ مِنْ عَذَابٍ أَلِيمٍ (31) **அல் அஹ்காப்**

هُوَ الَّذِي أَنْزَلَ السَّكِينَةَ فِي قُلُوبِ الْمُؤْمِنِينَ
لِيَزْدَادُوا إِيمَانًا مَعَ إِيمَانِهِمْ (4) **அல்பத்ஹ்**

فَأَنْزَلَ اللَّهُ سَكِينَتَهُ عَلَى رَسُولِهِ وَعَلَى الْمُؤْمِنِينَ
وَأَلْزَمَهُمْ كَلِمَةَ التَّقْوَى (26) **அல்பத்ஹ்**

سَنَفْرُغُ لَكُمْ أَيُّهَ الثَّقَلَانِ (31) فَبِأَيِّ آلَاءِ رَبِّكُمَا
تُكَذِّبَانِ (32) يَا مَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ إِنِ اسْتَطَعْتُمْ
أَنْ تَنْفُذُوا مِنْ أَقْطَارِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ فَانْفُذُوا لَا
تَنْفُذُونَ إِلَّا بِسُلْطَانٍ (33) فَبِأَيِّ آلَاءِ رَبِّكُمَا
تُكَذِّبَانِ (34) الرحمن **அர்ரஹ்மான்**

لَوْ أَنْزَلْنَا هَذَا الْقُرْآنَ عَلَى جَبَلٍ لَرَأَيْتَهُ خَاشِعًا
مُتَصَدِّعًا مِنْ خَشْيَةِ اللَّهِ وَتِلْكَ الْأَمْثَالُ نَضْرِبُهَا
لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ (21) هُوَ اللَّهُ الَّذِي لَا إِلَهَ
(22) إِلَّا هُوَ عَالِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ هُوَ الرَّحْمَنُ الرَّحِيمُ
هُوَ اللَّهُ الَّذِي لَا إِلَهَ إِلَّا هُوَ الْمَلِكُ الْقُدُّوسُ السَّلَامُ
الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ سُبْحَانَ
اللَّهِ عَمَّا يُشْرِكُونَ (23) هُوَ اللَّهُ الْخَالِقُ الْبَارِئُ
الْمُصَوِّرُ لَهُ الْأَسْمَاءُ الْحُسْنَى يُسَبِّحُ لَهُ مَا فِي
السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ الحشر (24)
அல் ஹஷ்ர்

وَإِنْ يَكَادُ الَّذِينَ كَفَرُوا لَيُزْلِقُونَكَ بِأَبْصَارِهِمْ لَمَّا
سَمِعُوا الذِّكْرَ وَيَقُولُونَ إِنَّهُ لَمَجْنُونٌ (51) وَمَا هُوَ إِلَّا
ذِكْرٌ لِلْعَالَمِينَ (52) القلم **அல்கலம்**

قُلْ يَا أَيُّهَا الْكَافِرُونَ (1) لَا أَعْبُدُ مَا تَعْبُدُونَ (2) وَلَا
(4) أَنْتُمْ عَابِدُونَ مَا أَعْبُدُ (3) وَلَا أَنَا عَابِدٌ مَا عَبَدْتُمْ
وَلَا أَنْتُمْ عَابِدُونَ مَا أَعْبُدُ (5) لَكُمْ دِينُكُمْ وَلِيَ دِينِ
(6) **அல் காபிரூன்**

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ (1) اللَّهُ الصَّمَدُ (2) لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ
(3) وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ (4) **அல்இக்லாஸ்**

قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ (1) مِنْ شَرِّ مَا خَلَقَ (2) وَمِنْ شَرِّ
(4) غَاسِقٍ إِذَا وَقَبَ (3) وَمِنْ شَرِّ النَّفَّاثَاتِ فِي الْعُقَدِ
وَمِنْ شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ (5) **அல்பலக்**

(3) قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ (1) مَلِكِ النَّاسِ (2) إِلَهِ النَّاسِ
مِنْ شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ (4) الَّذِي يُوَسْوِسُ فِي
صُدُورِ النَّاسِ (5) مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ (6) **அந்நாஸ்**

பாதுகாப்பு துஆக்கள்

أَعُوذُ بِاللَّهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ مِنْ هَمْزِهِ وَنَفْخِهِ وَنَفْثِهِ

أُعِيْذُكَ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ مِنْ كُلِّ شَيْطَانٍ هَامَّةٍ وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ

بِسْمِ اللهِ أَرْقِيْكَ مِنْ كُلِّ شَيْءٍ يُؤْذِيْكَ مِنْ شَرِّ كُلِّ نَفْسٍ, أَوْعَيْنِ حاسِدٍ، الله يَشْفِيْكَ

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ الَّتِيْ لَا يُجَاوِزُهُنَّ بَرٌّ وَلَا فَاجِرٌ مِنْ شَرِّ مَا خَلَقَ وَبَرَأَ وَذَرَأَ وَ مِنْ شَرِّ مَا يَنْزِلُ مِنَ السَّمَاءِ وَمِنْ شَرِّ مَا يَعْرُجُ فِيْهَا وَمِنْ شَرِّ مَاذَرَأَ فِيْ الْأَرضِ وَمِنْ شَرِّ مَا يَخْرُجُ مِنْهَا وَمِنْ شَرِّ فِتَنِ اللَّيْلِ وَالنَّهَارِ وَمِنْ شَرِّ كُلِّ طَارِقٍ إِلَّا طَارِقًا يَطْرُقُ بِخَيْرٍ يَا رَحْمَنُ"(مسند أحمد)

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ بِأَنِّيْ أَشْهَدُ أَنَّكَ أَنْتَ اللهُ لا إِلَهَ إِلاَّ أَنْتَ، الأَحَدُ الصَّمَدُ، الَّذِي لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ، وَلَمْ يَكُنْ لَهُ كُفُواً أَحَدٌ

أَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

أَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ ،مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ، مِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ، أَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ غَضَبِهِ وَعِقَابِهِ وَمِنْ شَرِّ عِبَادِهِ وَمِنْ شَرِّ هَمَزَاتِ الشَّيَاطِيْنِ أَنْ يَحْضُرُوْنِ

بِسْمِ اللهِ الَّذِيْ لَايَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ (3)

، حَسْبِيَ اللهُ لَاإِلَهَ إِلَّاهُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَرَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ (7)

أَسْأَلُ اللهَ الْعَظِيْمَ رَبَّ الْعَرْشِ الْعَظِيْمِ أَنْ يَشْفِيَكَ (7)

اَللَّهُمَّ رَبَّ النَّاسِ أَذْهِبِ الْبَأْسَ اِشْفِ أَنْتَ الشَّافِيْ
لاَشِفَاءَ إِلَّا شِفَاؤُكَ شِفَاءً لَايُغَادِرُ سَقَمًا(3)

اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِوَجْهِكَ الْكَرِيْمِ وَكَلِمَاتِكَ التَّامَّاتِ
مِنْ شَرِّ مَا أَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهِ ،اَللَّهُمَّ أَنْتَ تَكْشِفُ،
الْمَغْرَمَ وَالْمَأْثَمَ ، اَللَّهُمَّ أَنَّهُ لاَيُهْزَمُ جُنْدُكَ ، وَلَا
يُخْلَفُ وَعْدُكَ ،سُبْحَانَكَ وَبِحَمْدِكَ

بِسْمِ اللهِ ، (3)أَعُوْذُ بِاللهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ
وَأُحَاذِرُ(7)

ஓதி ஊதிப்பார்ப்பவர்களின் கவனத்திற்கு :

இதனைப்பயன்படுத்துவோரிடம்காணப்படவேண்டிய தகைமைகளும், பண்புகளும்:

1. *இஸ்லாமிய கடமைகள் அனைத்தையும் நிலைநாட்டக் கூடிய வராகவும், ஹறாம்களை முற்றாக தவிர்த்து நடந்து, பெரும் பாவங்களிலிருந்தும் தவிர்ந்து, தௌபா செய்திருத்தல் வேண்டும்.*

2. *அல்குர்ஆனில் அல்லாஹ் நோய்க்கு நிவாரணத்தை வைத்துள்ளான் என முழுமையாக நம்பிக்கைவைத்து ஓத வேண்டும்.*

3. *காலைமாலை துஆக்களையும்,சந்தர்ப்ப துஆக்களையும், திக்ரு களையும் செய்துவருபவராக இருக்கவேண்டும்.*

4. *அவரது உணவு, குடிபானம், உடைபோன்றவை ஹலாலான உழைப்பின் மூலம் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.*

5. *மேற்க்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனங்களையும், துஆக்களையும் இக்லாஸுடன் ஓத வேண்டும்*

6. *அதிகமாக சதகாக்களை செய்து அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும், ஏனெனில் சதகாமூலம் அனுபவ ரீதியாக நோய்க்கு நிவாரணம் பெற்றவர்கள் அதிகம்உள்ளனர்.*

7. *உடம்பில் வலி,நோவு உள்ளவர்கள் அந்த இடத்தில் பின்வரும் சூறாக்களை மூன்று அல்லது ஏழு விடுத்தம் ஓதிஊதவேண்டும். அவை : 1- சூரதுல் பாதிஹா 2- ஆயதுல்குர்ஸி 3- சூறதுல்பகராவின் இறுதிஇருவசனங்கள்,4- மூன்று “குல்” சூராக்கள்.*

உசாத்துணை நூற்கள்

1 ترجمة القــرآن الكــريم

2 صـــحيح البخـــاري

3 صحيح مســـلم

4 تلبيــس ابليــس للشـــيخ ابـــي الفـــرج عبـــد الـــرحمن بـــن الجوزي

5 عالم الجـــن والشـــياطين – لعمـــر ســـليمان الأشـــقر

6 الوابل الصـــيب مـــن الكلـــم الطيـــب – لابـــن القيـــم

7 صحيح الجـــامع – لناصـــر الـــدين الالبـــاني

8 العـــلاج القـــرآني مـــن الصـــرع الجـــني والعضـــوي للشـــيخ أحمد بن محمود الد يـــب

9 دليل المعالجين بـــالقرآن الكـــريم – ريـــاض محمـــد ســـماحة.

10 العـــدوى بيـــن الطـــب وحـــديث المصـــطفى (صـــلى الله عليه وسلم) د . محمـــد علـــي البـــار

والله أعلـــــم

அல்லாஹ்தான் யாவற்றையும் நன்கறிந்தவன்

எனது இந்நூலில் உள்ள
நிறைகளை பலரிடம் கூறுங்கள்
குறைதென்பட்டால் என்னிடம் கூறுங்கள்
நன்றி